கனடாவின் மூத்த தமிழ் இதழ்

19 வது வருடத்தில்

# விளம்பரம்™

VLAMBARAM™

416-282-8059

E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com

416-282-4978



Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
HOMELIFE Higher Standards
For All your Real Estate & Investments Needs!
HomeLife GTA Realty Inc. Brokerage*
1711 McCowan Rd. #206, Toronto
145 Traders Blvd # 28, Mississauga
416.321.6969 / 905.712.2666



வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton
சந்திப்புக்கு அருகாமையில்



நதி 19 பாலம் 15 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் AUGUST 01, 2009


# சர்வதேச நாணய நிதியத்தின் பிடியில் இலங்கை

2.5 பில்லியன் (25,000 கோடி ரூபா) அமெரிக்க டொலர்களை அனைத்துலக நாணயநிதியம் சிறீலங்காவுக்கு வழங்குவதாக அறிவித்துள்ளது.

இந்த நிதி 8 தவணை முறையில் சிறீலங்காவுக்கு வழங்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. முதற்தடவையில் 312 மில்லியன் அமெரிக்க டொலர்களை அனைத்துலக நாணய நிதியம் வழங்குகிறது.

அனைத்துலக நாணய நிதியத்தினால் இந்த நிதி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டதும், அபிவிருத்தி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் "சிறீலங்காவுக்கு அனைத்துலக மட்டத்தில் கிடைத்த மாபெரும் வெற்றி" எனக் கூறியுள்ளார்.

கொழும்பில் பத்திரிகையாளர் மாநாட்டை கூட்டிய இலங்கை மத்திய வங்கியின் செயலாளர் அஜித் நிவாட் இலங்கை பெருவெற்றி அடைந்ததாகக் கூறினார்.

மகிந்த சிந்தனை வெற்றிபெற்றதாகவும், அவரின் அரசியல் நகர்வுகள் சர்வதேசத்திற்கு திருப்தி அளிப்பதால் இந்தக் கடனுதவி கிடைத்ததாகவும் கூறினார் அஜித் நிவாட்.

ஆனால் நிலமை தற்போது தலைகீழாக மாறியுள்ளது. இந்த உதவிக்காக கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளதுடன், சில செயல்திட்டங்களில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் நேரடியாகக் கண்காணிப்பர் எனவும் கூறப்பட்டுள்ளது. இலங்கை அரசு வேறுவழி இன்றி இந்த நிபந்தனைகளுக்கு ஒத்துக்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை மண்டியிட்டு, அவர்களின் இரும்புப் பிடியில் சிக்கி நிற்கிறது என்று சொல்லப்படுகின்றது.

பல நிபந்தனைகள் சர்வதேச நாணய நிதியத்தால் முன்வைக்கப்பட்டுள்ளன. இலங்கையில் உள்ள தமிழர்கள் பெரும்பான்மை இனத்தவர்களால் பாதிக்கப்பட்டிருப்பதால் கடன்தொகை அரசியலுக்கோ, ஆயுதம் வாங்கவோ பயன்படுத்தப்படக் கூடாது, இலங்கை தற்போது கடன்பெற்றிருக்கும் நாடுகள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு சேரவேண்டிய மாதாந்தக் கொடுப்பனவுகளை உடனே மேற்கொள்ளவேண்டும், இலங்கை வேறு எந்த நாட்டிடமும் இருந்து 1.7 பில்லியன் டொலருக்குமேல் கடன்தொகையை 20 மாதங்களுக்குள் பெறக்கூடாது.

இலங்கை உடனடியாக பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தவேண்டும். இலங்கை அதன் அரசியல் ஸ்திரத்தன்மையை முழு அளவில் வெளிக்கொண்டுவர வேண்டும். மற்றும் இலங்கையில் நடைபெறும் சில வேலைத் திட்டங்களை சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் மேற்பார்வை செய்வர்.

இலங்கை அரசின் உற்பத்தி, மற்றும் ஏற்றுமதி என்பன 5 வீதத்தால் வீழ்ச்சிகண்டுள்ளது, தற்போது அரசிற்கு கிடைத்துவரும் வரிப்பண வருமானத்தில் (GDP) பாரிய துண்டுவீழ்வதாகக் கூறப்படுகிறது. 2010 மற்றும் 2011 இல் இலங்கை அரசினால் இராணுவச் செலவிற்கு பெரு நிதி ஒதுக்கமுடியாத நிலை தோன்றவுள்ளது. கணிசமான அளவு நிதி துண்டுவீழ்வதால் இலங்கை அரசு (GDP) வரியை அதிகரிக்கும் சாத்தியம் உள்ளதால், இனி வரும் ஆண்டில் பொருட்களின் விலை அதிகரிக்கும், ஆதலால் நுகர்வோர் நேரடியாகப் பாதிக்கப்படுவார்கள்.

இலங்கை அரசானது பலவெளி நாடுகளிடம் இருந்துபெற்ற கடன் தொகைகளுக்கான கட்டுக்காசை மீளச் செலுத்தாமல் உள்ளது. கடந்த 2 வருடமாகச் சீரான முறையில் இந்தக் கடன் தொகை திருப்பிச் செலுத்தப்படாததால், பல நிறுவனங்கள் சட்ட நடவடிக்கை எடுக்க முயற்சிப்பதை அறிந்த நாணய நிதியம், நிலுவையில் நிற்கும் கொடுப்பனவுகளை முதலில் சீர்செய்யுமாறு இலங்கையை கடுமையாக வற்புறுத்துகிறது.

இதேசமயம் தமிழர்களுக்கான இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைவை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றும் சட்டத்தரணி விசுவநாதன் உருத்திரகுமாரன் "பேராசிரியர் சொர்ணராஜா அவர்கள் எமது ஆலோசனைக்குழுவில் இருக்கின்றார். அவர் ஒரு வரைவை கடந்த வாரம் தயாரித்திருக்கிறார். அதாவது நாடு கடந்த அரசை முதலில் நாம் கிழக்கு இந்தியக் கம்பனி வடிவத்தில் கொண்டுவர வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார். அதாவது, பொருளாதார ரீதியில் ஒரு பலம் மிக்க வடிவமாக கொண்டுவரவேண்டும் என்று அவர் கருதுகிறார்" என்று தெரிவித்துள்ளார்.

பிரித்தானியர் இலங்கைக்கு வருகை தந்து ஆதிக்கம் கொள்வதற்கு முன்பாக கிழக்கு இந்தியக் கம்பனி வடிவத்தில் அங்கு வந்து தமது ஆதிக்கத்தை செலுத்தினார்கள். எனவே நாங்களும் முதலில் பொருளாதார அடிப்படையில் நாடு கடந்த அரசை கொண்டுசென்று அதன் அடிப்படையில் நாங்கள் அரசியலுக்குள் பிரவேசிக்க வேண்டும் என்று அவர் கருதுகிறார். நாங்கள் நடத்தவுள்ள நாடு கடந்த அரசுக்கு ஒரு நாடு தேவையில்லை. எனவே எங்களுக்கு வெளிப்படையாக எந்தவொரு நாடும் அங்கீகாரம் தராவிட்டாலும் நாங்கள் நாடு கடந்த அரசை முன்னெடுத்துச் செல்லலாம். நாடு கடந்த அரசின் வெற்றியானது மாறிவரும் அனைத்துலக அரசுகளின் அரசியல் சூழ்நிலைகளில்தான் தங்கியுள்ளது. தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் இன்று அனைத்துலக ரீதியில் பின்னிப்பிணைந்துள்ளதை நாங்கள் பார்க்கவேண்டும்.

தமிழர் தேசியம் - தமிழர் தாயகம் - தமிழர் தன்னாட்சி என்ற மூன்று நிலைப்பாடுகளையும் உள்ளடக்கிய ஒரு அமைப்பாகத்தான் இதனை நாங்கள் கொண்டுசெல்ல இருக்கிறோம். ஜனநாயகத்தின் அடிப்படையில், ஜனநாயக விழுமியங்களின் அடிப்படையில் நாடு கடந்த அரசு உருவாக்கப்படுவதால் இதனையே தமிழ் மக்களின் அரசியல் வேட்கைகளை வெளிப்படுத்தும் அதியுயர் அமைப்பாகக் கொண்டுசெல்ல இருக்கிறோம்.

இது தொடர்பாக பல்வேறு இராஜதந்திரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம், பல்வேறு அமைப்புக்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்.

முஸ்லிம் பேராசிரியர் ஒருவர் கடிதம் அனுப்பியிருந்தார். அதில் "இது ஒரு வரலாற்று நிகழ்வு, தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் இணைந்து ஒரு அரசியல் வேலைத்திட்டத்தை உருவாக்கவேண்டும். எனவே இந்த அமைப்பில் நானும் இணைந்து பணியாற்ற விரும்புகிறேன்" என்று கூறியிருந்தார்.

நடந்து முடிந்த சம்பவத்திற்காக நாங்கள் மனமுடைந்து விடக்கூடாது. நாங்கள் இங்கு இப்படியான கூட்டம் நடத்துவதே ராஜபக்ச அரசு எங்களை இன்னமும் அரசியல் ரீதியாக அடிமை கொள்ளவில்லை என்பதை வெளிக்காட்டுகிறது.


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.



துரித பணமாற்றுச் சேவை
• 50 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 17 வருடங்கள் ஒரே இடத்தில் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
416.267.8221



Sales & LEASING
MARKVILLE TOYOTA
>KUMAR JEGASOTHY<
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி <
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585



SATHYA SAIRAM DRIVING SCHOOL
• உங்களுக்கு பாஷை ஒரு பிரச்சினையா?
• பரீட்சை கேள்விகள் விளங்காததனால் வாகன எழுத்து பரீட்சையில் அல்லது வீதிப்பரீட்சையில் சித்தியடைய முடியவில்லையா? கவலை வேண்டாம்.
• உங்கள் வாகனம் சம்பந்தப்பட்ட எந்த பரீட்சையிலும் சித்தி அடைய வேண்டுமா?
அழையுங்கள் - 416-831-5217



Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated



RBC Royal Bank
Switch your Mortgage to RBC
And Consolidate Your Debts for FREE!
• No Lawyers Fee • No Appraisal Fee • No Discharge Fee
• 1st Time Home Buyers • Pre-Approvals
• Debt Consolidation
• Home Equity Line of Credit
• New Immigrant & Self-Employed Programs
• Over 20 years of experience with RBC
• Fast and Efficient Service
Always with a Smile!!!
Nala Brodie
Mortgage Specialist
(416) 409-4900
Nala.Brodie@Rbc.com
Markham & 14th Ave
Greater Toronto Region
Let Me Optimize Your Mortgage Payments and other Debt Payments



VASANTHAM HOME SERVICES
வசந்தம் வீடு சேவைகள்
• Cleaning: Carpet, Duct, Sofa, Car, Window, Home & Office
• Painting & Home Renovation
• Moving to any town
• Airport Services
வீடு, ஜன்னல், சோபா, காரியாலயம் சுத்தம் செய்தல். வர்ணம் பூசுதல். விமானநிலைய சேவை. வீட்டு பொருட்கள் நகர்த்தல்.
Call: 647.296.9374/ 416.836.6791



வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife / Today Realty Ltd., Brokerage.
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

# உங்கள் நிதியமும் பணச் சந்தையும்

## ஓய்வுத்திட்டம்

ஓய்வு காலத்தை கனடாவில் கழிப்பதைப் பற்றிய சில சிந்தனைகளை உங்கள் இம்முறை தருகின்றோம். வேலைக்கு இருக்கும் காலத்தில் ஓய்வு காலத்திற்கு என்று பென்ஷன் அல்லது ஓய்வூதியத் தொகை சேமிக்கப்படுகின்றது. இதில் இருவகை உள்ளது. ஒன்று Defined Benefit Plan அரசுத்துறையில் பணிபுரிபவர்கள் இத்தகைய ஓய்வுத் திட்டத்தின் கீழ் பயன் பெறுகிறார்கள். தனியார் துறையில் பத்துக்கும் குறைவான சதவீதமே இந்தத் திட்டத்தின் கீழ் வருவதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் நீங்கள் எத்தனை ஆண்டுகள் பணிபுரிந்தால், உங்கள் சம்பளத்தைப் பொறுத்து உங்கள் ஓய்வூதியம் என்னவாக இருக்கும் என்பது தீர்மானிக்கக் கூடியதாக இருக்கும்.



இரண்டாவது ஓய்வூதியத் திட்டம் Defined Contribution Plan என்று அழைக்கப்படும் இத்திட்டத்தின் கீழ் மாதாமாதம் நீங்களும், நீங்கள் வேலை செய்யும் நிறுவனமும் செலுத்த வேண்டிய தொகை. நிர்ணயிக்கப்பட்டிருக்கும். ஓய்வூதியம் எவ்வளவு கிடைக்கும் என்று உறுதியாகச் சொல்ல முடியாது. ஏனென்றால் ஓய்வூயத் தொகை உங்கள் சேமிப்பைப் பொறுத்தது. பொருளாதாரச் சூழ்நிலைகளையும், உங்களின் ரிஸ்க் எடுக்கும் மனப்பான்மையையும் பொறுத்தது. முன்னர் குறிப்பிட்ட Defined Benefit Pension Plan இல் ரிஸ்க் எடுப்பது உங்களின் நிறுவனம். Define Contribution Plan ரிஸ்க் எடுப்பது நீங்கள். இன்றைய பொருளாதாரச சூழ்நிலையில் வேலை செய்பவர்களின் ஓய்வூதியத் தொகையைக் கையாள்வதில் வட அமெரிக்காவில் பல கம்பனிகள் ரிஸ்க் எடுக்க விரும்பவில்லை. அதனாலேயே மென்மேலும் பல கம்பனிகள் Benefit Plan லிருந்து Contribution Plan க்கு மாறிக் கொண்டிருக்கின்றன. இது நல்லதா? கெட்டதா?

இப்படி நினைத்துப் பாருங்கள். வேலை செய்யும் நிறுவனம் திவால் (Bankrupts) ஆகி விட்டால் ஓய்வூதியமும் திண்டாட்டத்திற்கு ஆளாகலாம். ஆனால் Contributor Plan லோ பணம் உங்கள் கணக்கில் உள்ளது. பத்திரமாக உள்ளது. எவ்வளவு தூரம் வளரும் என்பது தான் தெரியாத புதிர். நல்ல நிதி ஆலோசகருடன் கலந்து ஆலோசித்து முடிவு செய்தால் முடிவும் சிறப்பாக அமையலாம்.

கனடாவில் குறைந்து பத்து ஆண்டுகள் ஒருவர் வசித்து விட்டால் அவருக்கு 65 வயது ஆனபிறகு கனடிய அரசு Old Age Pension என்று சொல்லப்படும் ஓய்வூதியத் தொகையை வழங்குகின்றது. தற்சமயம் வருடத்துக்கு 6000 டொலராக இது உள்ளது. அரசு தரும் மற்றொரு பென்ஷன் தொகை CPP என்றழைக்கப்படும் Canada Pension Plan ஆகும். நீங்கள் ரொக்கத்துக்கு வாழ்நாள் முழுவதும் வேலை செய்திருந்தால் இந்த ஓய்வூதியம் கிடைக்காது. அப்படி அல்லது சம்பாதித்த பணத்துக்கு வருமான வரி கட்டி வந்திருந்தால் இந்த ஓய்வூ ஊதியம் நிச்சயம் கிடைக்கும். குறைந்த பட்சம் இத்தனை வருடங்கள் அல்லது மாதங்கள் இதற்கு நிதி செலுத்தியிருக்க வேண்டும் என்று விதி எதுவும் இல்லை. உங்கள் வருமானத்தில் சராசரியாக கால்பகுதியை இவ்வூதியமாகப் பெறலாம். தற்சமயம் ஆண்டுக்கு அதிக பட்சம் CPP யாகக் கிடைப்பது 11,000 டொலர்.

இப்போது வேலை பார்ப்பவர்கள் CPP க்குச் செலுத்தும் பணத்திலிருந்து முன்பு வேலை பார்த்து ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகின்றது. இன்னும் பத்து அல்லது இருபது ஆண்டுகளில் இப்போது இருப்பதைப் போல எல்லோருக்கும் உறுதி செய்யப்பட்ட அளவு CPP கிடைக்குமா என்று சந்தேகங்களும் அவ்வப்போது எழுப்பப்படுகின்றன.

அரசாங்கம் விதிகளை மாற்றக்கூடிய அதிகாரம் பெற்றது. அதனால் நிலைமைகள் மாறலாம். ஜனநாயகத்தில் அரசியல் வாதிகளுக்கு மக்களின் ‘வோட்’ தேவைப்படுகின்றது. அதனால் பலபேரைக் பாதிக்கும் நடவடிக்கைகளை எடுக்கு முன் எந்த அரசாங்கமும் பலமுறை யோசிக்கும்.

உங்கள் ஓய்வூதியத் திட்டம் என்ன? இக்கட்டுரை ஆசிரியரிடம் ஆலோசனை பெற ஸ்கோஷிய வங்கி தொலைபேசி எண் - 416.439.3040 Ext 2010.



பெரி. முத்துராமன்






விளம்பரம் VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED

HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969
145 Traders Blvd # 28, Mississauga -905.712.2666

# கனடாவின் கதை - 2

சென்ற கட்டுரையில் கனடாவின் ஆரம்ப வரலாறும், பூர்வீகக் குடிகளின் வாழ்க்கை வரலாறும் பற்றிப் பார்த்தோம். அவர்கள் எவ்வாறு கற்களை ஆயுதங்களாகப் பயன்படுத்தினர் எனவும் கண்டோம். இனி கி.மு. 4,000 முதல் 1,000 ஆண்டுகள் இடைவெளியில் கனடாவின் காலநிலை மாற்றங்கள் பற்றியும் அப்போது காணப்பட்ட கலாச்சாரம் பற்றியும் பார்ப்போம். இக்கால இடைவெளியில் கடல் மட்டங்கள் தற்போது காணப்படும் நிலைகளை அடைந்தன. பனிப்பாறைகள் பெரும்பாலும் ஆட்டிக்கின் (வடதுருவத்தின்) வடக்கேயும் அல்பைன் மலைகளிலும் காணப்பட்டன. ஹட்சன் வளைகுடாவுக்கு மேற்கே இருந்த காடுகள் மேலும் வடக்கே பரவி இருந்தன. கி.மு. 2000 ஆண்டுக்குப் பின் இக்காடுகள் தற்போதைய நிலையிலிருந்து தெற்கே 300கி.மீ வரை பரந்திருந்தன. இதனால் பல புதைபொருள் ஆய்வு நிலையங்கள் தப்பிப்பிழைக்கும் வாய்ப்பு அதிகரித்தது எனலாம்.

இக்காலப்பகுதியில் கி.மு 2500 ஆண்டளவில் வடதுருவ கிறீன்லாந்துப் பிரதேசங்களில் ஆரம்ப எஸ்கிமோ கலாச்சாரக் குடியேற்றங் கள் காணப்பட்டன. இக்குடியேற்றங்கள் பின்னர் படிப்படியாக வட சஸ்கச்சுவான், மனிற்றோபா, கியூபெக், லப்றடோர் கரைப்பகுதிகள், சென்லோறன்ஸ் வளைகுடா வின் வடகரைப்பகுதி, நியூபவுண்லாந்து ஆகியவற்றை அடைந்தன. இக் குடியேற்றத்தின் பின்னர் தெற்கே இருந்த பல இந்திய குடியேற்றங்களோடு தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டன. இக்காலப்பகுதியில் பைசன் (Bison) மாடுகளைக் கூட்டாக வேட்டையாடுவதும், பெமிக்கன் (Pemmican) எனப்படும் உலர் இறைச்சி தயாரிப்பதும் ஆரம்பமாகியது. கி.மு 2500 ஆண்டுகளில் செவ்வாளை (Salmon) மீன்களுள்ள இடங்களில் பள்ளமான வீட்டுக்கிராமங்கள் தோன்றின. ஆரம்பகால வடமேற்குக் கரையோரக் கலாச்சாரக் குடியேற்றங்கள் பெரும்பாலும் நிலையானவையாயும், சமையல் பாத்திரகுவியல்களைக் கொண்டவையாயும் இருந்தன. மேற்குக் கரையோரங்களில் சமூகக் கட்டமைப்புள்ள சமூகங்களின் ஆரம்பத்தைக் காணக்கூடியதாக இருந்தது. இக்காலப் பகுதியில் நாடு முழுவதும் இறுதிக்கிரியை முறைகள் ஆடம்பரமாகச் செய்யப்பட்டதிற்கான அறிகுறிகள் காணப்படு கின்றன. அத்துடன் வில், அம்புப் பாவனையும் முதன்முதலாகக் காணப்படுகின்றது. இத் தொழில்நுட்பம் ஆசியாவிலிருந்து ஆரம்ப எஸ்கிமோ கலாசாரத்தால் கனடாவுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கலாமெனக் கருதப்படு கிறது. பின்னர் இது படிப்படியாக நாடு முழுவதும் பரவிற்று.

கடலோரக்கலாசாரம் நான்கு முக்கிய தாவரங்களுள்ள மாகாணங்களில் பரவி யிருந்தது. பெரும்பாலும் இங்கு வாழ்ந்தவர் களின் உணவுமுறைகள் ஒரே தன்மையதாய் காணப்பட்டன. இவை பெரும்பாலும், சீல், வல்றசு (walrus), திமிங்கலம், கடல்மீனினங்கள், பீவர், கரடி, கடற்பறவைகள், மான், கலைமான் ஆகியனவாய் இருந்தன. கணவாய், நண்டு, இறால் போன்றவற்றையும் உணவாகக் கொண்டிருக்கலாம். ஆனால் ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

கடலோரக் கலாச்சார வேட்டைக்காரர் கோடைகாலப் பாசறைக்கு வருவது காணப்படுகிறது. இங்கே சீல், மறைந்த ஒக்ஸ் (Auks), கடற்பறவைகளின் முட்டைகள் ஆகியவற்றை தோலால் ஆன படகிலிருந்து இறக்குவதையும், பின்னால் தோற்படகுகள் கற்களின்மேல் வைக்கப்பட்டிருப்பதையும் காணலாம். இது லப்றடோர் கரையோரத்தில் (2000 கி.மு) ஆண்டளவில் நிகழ்ந்த ஒரு காட்சியின் வரைபடம்.



- துறையூரான் -

பலவகையான பூகோள மாற்றங்களால் நாடு பல்வேறு மாற்றங்களுக்கு ஆளாகியதால் ஒரு பூரணமான புதைபொருள் ஆய்வினை, ஆய்வாளர்கள் மேற்கொள்ள முடியாதுள்ளது. குறிப்பாக கி.மு. 4000 ஆண்டளவில் பிறின்ஸ் எட்வேட்தீவு, நியூ பிறண்ஸ்விக், நோவொஸ்கொசியா மாகாணத்துடன் இணைந்திருந்தது. இதேபோன்று கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முன் நியூபவுண்ட்லாந்துக் கரையோர பகுதிகள் கடல்கோளுக்கு ஆளானதால், பல புதைபொருள் ஆய்வு நிலையங்கள் அழிந்து போயின. இதனால் அங்கிருந்த கலாசாரம்பற்றிய தரவுகள் கிடைக்காமல் போயின.

**மத்திய பெருவாவிகள் - சென்லோறன்ஸ் கலாச்சாரம்**

இக்கலாச்சாரம் தற்போதைய தென் ஒன்ராறியோ, தென்கியூபெக், தென்மேற்கு நியூபிறவுண்ஸ்விக் ஆகியவற்றிலும் அண்டிய மாகாணங்களிலும் காணப்பட்டது. இப்பிரதேசம் பெரும்பாலும் வன்மரங்களையும் மென் மரங்களையும் கொண்ட காடுகளால் நிரம்பி யிருந்தது. இக்காலப்பகுதியில் இலையுதிர் காடுகளும், விதைகள் உள்ள மரங்கள் நடுதலும் காணப்படுகிறது. அத்துடன் வாவிகளில் மீன் பிடித்தல் அதிகரித்தமையும் காணப்படுகிறது. இதனால் மக்கள் நிலையான சமூக வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்தனர் என்பது புலனாகிறது.

**நாய் அடக்கஞ் செய்யப்பட்டுள்ளது.**

இப்புதைவிடம் ஹியூறோன் வாவியின் கரையில் காணப்பட்டது. நாய்கள் ஆதி வாசிகளுடன் வடஅமெரிக்காவுக்கு கொண்டுவரப்பட்டிருக்கலாம். நாய்கள் காவலுக்கு, வேட்டைக்கு, வண்டியிழுப்பதற்குப் பாவிக்கப்பட்டன. எனவே மனிதருக்குக் கொடுக்கப்பட்ட இறுதிக் கிரியைகள் நாய்களுக்கும் கொடுக்கப்பட்டன.)



இக்கலாசார மக்கள் முன்னோர் பாவித்த கல் ஆயுதங்களுடன் என்பினாலான ஊசிகள், துளையிடும் கருவிகள், முனைவளைந்த ஈட்டிகள், கத்திகள் ஆகியவற்றை உபயோகித்தனர். ஒட்டாவாப் பள்ளத்தாக்கில் வாழ்ந்தோர் செப்பு ஆயுதங்களை உற்பத்தி செய்து பிற இடங்களுக்கும் பரப்பினர் என அறியப்படுகிறது (கென்னடி 1962, 1966, 1970). அவ்வாறான சில ஆயுதங்களாவன துளை யிடும் கருவிகள், அம்புகள், கத்திகள், பிளக்கும் கத்திகள் ஆகியன. பெரும் மீன்பிடிக் குடியேற்றங்களில் புதைக்குமிடங்கள் காணப் படுகின்றன. விரிவான கிரியை முறைகளுடன், பொதிபோல் கட்டிப்புதைப்பதும் எரிப்பதும் காணப்படுகிறது. வேறிடங்களில் இறந்தோரை அவர்களது குடியேற்ற நிலத்துக்குக் கொண்டு வந்து புதைத்ததற்கான ஆதாரங்களும் காணப்படுகின்றன. இப்புதைவிடங்கள் புனித இடங்களாகக் கருதப்பட்டன. சடலத்தோடு பிறபொருள்களை வைப்பதோடு செங்களிமண் வைத்தலும் ஒரு வழக்கமாக இருந்தது. அக்கால மக்கள் வலிமையானவர்களாயும் தசைப்பிடிப்பானவர்களாயும் இருந்தனர். கடினமான உணவை உட்கொண்டதால் பற்கள் தேய்ந்தும், நோயுற்றும் காணப்பட்டன. சிலர் என்பு முறிவுகளோடு காணப்பட்டனர். வயோதிபர் வாதநோயோடு காணப்பட்டனர். ஆனால் பெரும்பாலானோர் நோயற்றுக் காணப்பட்டனர்.

தொடர்ச்சி 03ஆம் பக்கம்


Bestway Driving school

Get your **G2** Licence in 3 weeks (If qualified)

பெண்கள் / ஆண்கள் welcome

*Very respectfull instructor to ladies.*

உங்களுடைய தாய்மொழியிலேயே கற்றுக்கொள்ள முடியும்
நம்பகமான சேவையும் நாணயமான கட்டணமும்



சாரதிப்பத்திரம் உத்தரவாதம்

*Get your G licence through me.*
*If you fail G test, we will pay your test-booking fee.*
(some condition may apply)

**Approved instructor by M.T.O.**

For further details call **Vicky: 647.284.5373**

சேவைகள்: *Brampton - Mississauga - Toronto*

Road test available in out cities

APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# மனம் குப்பைக் கூடாரம்

**உங்கள் தர்க்க அறிவு எந்த எல்லை வர செல்ல வேண்டும்? எந்த எல்லைக்குள் செல்லக்கூடாது என்று உங்களுக்குத் தெரிந்தால்தான் வாழ்க்கை அழகானதாக இருக்கும்.**



## சத்குரு வாசுதேவ்

மனிதர்கள் எவ்வளவுக்கெவ்வளவு சிந்திக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு வாழ்க்கையில் ஆனந்தம் அவர்களுக்குக் குறைகிறது. அப்படி நடக்கக் கூடாது. உங்கள் மனம் சமூகத்தின் குப்பைக் கூடமாகி விட்டது. உங்களைக் கடந்து போகிற ஒவ்வொருவரும் உங்கள் மூளைக்குள் எதையாவது திணித்துவிட்டு போகிறார்கள். தேர்ந்தெடுக்கும் உரிமை உங்களுக்கு இல்லை. உங்களைக் கடந்து போகிற எதுவும் உங்கள் ஐம்புலன்களில் ஏதோ ஒரு புலனைத் தொடுகிறது. ஒரு காட்சியோ, ஒரு ஓசையோ, ஒரு தொடு உணர்வோ, ஒரு சுவையோ, ஒரு வாசமோ, உங்கள் ஐம்புலன்களின் வழியாக உங்கள் மனதில் பதிவாகிறது. எனவே நீங்கள் மனம் என்று எதை அழைக்கிறீர்களோ அது நீங்கள் உங்களை வெளிப்படுத்திக் கொள்ளுகிற சமூக சமய பண்பாட்டு சூழ்நிலைகளைப் பொறுத்ததாக இருக்கிறது.

உங்கள் மனதை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். நல்லது எது? தீயது எது? என்று தேர்ந்தெடுக்கிற பரிமாணத்திற்கு பகுத்தறிவு என்று பெயர். சேகரிக்கிற பகுதி தகவல்களை சேர்த்துக் கொள்கிறது. பிரக்ஞை என்பது விழிப்புணர்வு. இவை மூன்று தான் அந்தப் பகுதிகள்.

நீங்கள் எண்ணுகிறமுறை, உணர்கிறமுறை, வாழ்க்கையைப் புரிந்து கொள்கிற முறையெல்லாம் உங்கள் மூளையில் சேர்ந்திருக்கும் குப்பைகளைப் பொருத்தவை. சிலருக்கு சமூகக் குப்பைகள் இருக்கலாம்; சிலருக்கு சமயக் குப்பைகள் இருக்கலாம்; சிலருக்கு ஆன்மீகக் குப்பைகள் இருக்கலாம். அது ஒரு பொருட்டல்ல. ஆனால் இவை அனைத்துமே வெளியில் இருந்துதான் வந்திருக்கின்றன. இவை வெறுமனே பிழைப்பு கருதிதான் சேகரிக்கப்பட்டு இருக்கின்றன. வாழ்க்கைக்கும் அதற்கும் எந்த முக்கியத்துவமும் இல்லை. சேகரித்த தகவலை மறுபயன்பாட்டுக்கு விடுகிற ஆற்றல் உங்கள் பகுத்தறிவுக்கு இருக்கிறது. ஒன்றையும் இன்னொன்றையும் பகுத்துப் பார்க்கிற அறிவால் தான் இந்த உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்.

நீங்கள் மேலும் மேலும் பகுத்தறிவு சார்ந்து வாழத் தொடங்குகிறபோது உங்களைச் சுற்றியிருக்கிற அனைத்தையுமே பகுத்துக் கொண்டே போகிறீர்கள். எங்கே நிறுத்துவதென்று உங்களுக்குத் தெரிய வில்லை. எதனோடும் நீங்கள் முழுமையாக இருப்பதில்லை. பிழைப்பு நடத்துவதற்கு இந்த பகுத்தறிவு அற்புதமான கருவியே தவிர வாழ்வில் ஒருமையை உணர்வதற்கு அது மிகப் பெரிய தடையாகவும் இருக்கிறது. உங்கள் தர்க்க அறிவு எந்த அளவிற்குப் போக வேண்டும்? எந்த எல்லைக்குப் போகக் கூடாது? என்று தெரிந்தால் தான் உங்கள் வாழ்க்கை அழகானதாக இருக்கும்.

உங்கள் மனதுக்குள் பதிந்திருக்கிற பதிவுகள் அனைத்துமே உங்கள் ஐம்புலன்கள் வழியாகத் தான் நுழைந்திருக்கும். ஐம்புலன்கள் ஒன்றை ஒப்பிட்டுப் பார்த்து தான் உணர்ந்து கொள்ளும். உங்கள் வாழ்வில் நீங்கள் இருளையே உணர்ந்ததில்லையென்றால் உங்களுக்கு வெளிச்சம் என்றால் என்னவென்று தெரியாது.

ஐம்புலன்களின் வழியாக ஒன்றை உணருகிறபோது அரைகுறையான பதிவு தான். உண்மையைப் பற்றிய அரைகுறையான பார்வை தான் உங்களுக்குக் கிடைக்கிறது. ஏனென்றால் ஐம்புலன்கள் எல்லாவற்றையும் எதனோடும் ஒப்பிட்டே புரிந்து கொள்கின்றன. ஒப்பீடு வருகிறபோதெல்லாம் இருமை வருகிறது. பகுதி பகுதியாகத் தான் உங்களால் புரிந்து கொள்ள முடியும். எனவே சின்னச் சின்ன பாகங்களான உங்கள் புரிதல் ஒரு முழுமையான புரிதலாக வாய்ப்பில்லை.

இப்போது இந்த பகுப்புகளை உங்கள் விழிப்புணர்வால் துடைத்து விடுவீர்களேயானால் எது உண்மை எது உண்மையில்லை என்பதை நோக்கி உங்கள் பகுத்தறிவு இயங்கத் தொடங்கும். உங்கள் பகுத்தறிவு அல்லது தர்க்ககறிவு மிகக் கூர்மையாகிறபோது அதில் எதுவும் ஒட்டுவதில்லை. எதனோடும் பற்று ஏற்படுவதில்லை எந்த அடையாளத்தையும் ஏற்றுக் கொள்வதில்லை. எல்லாவற்றையும் அது இருக்கிற தன்மையைக் காட்டிக் கொண்டே போகிறது. நீங்கள் சேகரித்தவற்றின் அடிப்படையிலோ, உங்கள் அடையாளங்களின் அடிப்படையிலோ, உங்கள் உணர்வுகளின் அடிப்படையிலோ, அது எதையும் காட்டுவதில்லை.

யோகா, தியானம் என்பதெல்லாம் இதைத்தான் செய்கின்றன. உங்களுக்கும் உங்கள் மனதுக்கும் ஒரு தெளிந்த இடைவெளி இருக்கிறபோது முற்றிலும் வித்தியாசமான பரிமாணத்தில் உங்கள் மனதையும் உங்கள் வாழ்க்கையையும் உணரத் தொடங்குவீர்கள்.


## Inner Engineering

**Date:** 19 - 25 Aug. 2009

**Location:** Latvian Canadian Cultural Centre, 4 Credit Union Drive
Toronto, ON M4A 2N8 Canada

**Free Intro talk**: Wed 19 August - 9–10am & 6:30–7:30pm

ALL ARE WELCOME

**Session Info:** TIMINGS: Attendance on all 7 days is mandatory.
Please select Morning or Evening session for weekdays.
Weekend sessions are common.

**Weekday Morning Session:** 9am to 12pm OR
**Weekday Evening Session:** 6:30pm to 9:30pm
Saturday: 10am to 1pm    Sunday: 8am to 5pm
**Tel.: 1-866-424-4742**
website: www.ishafoundation.org    www.ishayoga.org



**என் மூலம் வீடு வாங்குவது / விற்பதன் மூலம் BMW ஒன்றை வெற்றிகொள்ளலாம்**



**KENNEDY / SHEPPARD** New Condo. 1000 sq.ft.
2 bedroom + Den. Low maintenance.

**House with Mechanic shop Scarborough**

**Church for sale Toronto**

*Buy low, Sell high - 40 years Low Interest*

**வங்கியின் பணத்தில் முதலீடு - 5 வருடத்தில் Cash out**

*5 year plan 3.9% interest* **Power of Sale**

***Properties with Tenant's* Pay the cost**

**What's your Risk?**

*We look after* **seniors over 70 years** *peaceful life.*

**Country Style**
*Coffee shop - Oshawa*
*Good Income*

**வீடும் வியாபாரமும் *Business Zoning***

**Future long term Investment**

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு வேலைவாய்ப்பு

அழையுங்கள் - Sitham (Sam) Shanmugam (Sales Rep)

**416.230.7820 / 905.696.7310**

HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666

150 - 200 Acres land for sale in Peteboroug. Farm Land value.





SMILE....

• BUSINESS PLANS
• CORPORATE TAX PREPARATION OF FILING
• PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
• ACCOUNTING, TAXATION
• SYSTEMS - POINT OF SALES

**RK CONSULTANTS**

PL. CALL: 905.887.7457 / 905.751.7537

24 hrs, 365 days

# கனடாவின் கதை - 2

03ஆம் பக்கத்தொடர்ச்சி

## மத்திய ஷீல்ட் கலாசாரம்

வடமேல் குடியேற்றங்களின் தென்மேற்குப் பகுதி, மனிற்றோபாவின் பெரும்பகுதி, வட ஒன்ராறியோ, வடகியூபெக் (இது சென்லோறன்சின் வடகரையையும் லப்றடோரையும் உள்ளடக்கும்) ஆகியன கனடாவின் ஷீல்ட் (Shield) பிரதேசம் எனப்படுகிறது. இங்கே காணப்பட்ட கலாசாரம் தென்கீவற்றின் (South Keewatin) மாவடத்திலும், கிழக்கு மனிற்றோபாவிலும் கி.மு. 6000 ஆண்டளவில் காணப்பட்ட பிளனோ (Plano) கலாசாரத்திலிருந்து அபிவிருத்தியானது. இக்கலாச்சாரம், கறிபோ விலங்குகள், மீன்கள், அங்கிருந்த தாவர உணவுகளில் தங்கியிருந்தது. இக்கலாசாரத்தின் மேற்குக் குழுக்கள் படிப்படியாக கிழக்கு நோக்கிப் பரவ ஆரம்பித்தன. லப்றடோர் மாகாணத்தில் கி.மு. 2000 ஆண்டளவிலேயே குடியேற்றங்கள் ஆரம்பித்தன. ஐரோப்பியர் இங்கு வந்தபோது காணப்பட்ட, கிறீ, ஒஜிப்வே, அல்கோன்கின், மொன்ராக்னெஸ், பெயோதக் இனங்கள் ஷீல்ட் கலாசாரத்தின் வழித்தோன்றல்களாகும். இவ்வினங்களிடையே காணப்பட்ட கலாசார, மொழி இணக்கப்பாடுகளிலிருந்து, கனடாவின் ஏறக்குறைய அரைவாசி இடத்தைப் பிடித்திருந்த ஷீல்ட் கலாசாரத்தின் மேன்மையையும், இனங்களுக்கிடையே இருந்த தொடர்புகளையும், நாம் அறியக் கூடியதாய் உளது. ஆனால் துர்அதிர்ஷ்டவசமாக, பெயோதக் இனத்தவரின் மொழியைப்பற்றி ஆராயமுன்னர் அவர்கள் மறைந்து போயினர். ஷீல்ட் கலாசாரத்தின் 'ஒரேமாதிரியான' தன்மைக்குப் பின்வருவன காரணிகளாய் இருந்தன. ஒரே மாதிரியான உணவு முறையும், போக்குவரவுக்கு உதவியாய் இருந்த ஆறுகளும், பனிக்காலத்திலும் கோடையிலும் தொடர்பு களை ஏற்படுத்தக்கூடியனவாய் இருந்தன. மிகவும் தளர்ச்சியான சமூக முறைகளினால் குழுக்களுக்கிடையே திருமணத்தொடர்புகள் ஏற்பட்டன. காட்டுத் தீக்களினால் மக்கள் வேறிடங்களுக்கும் குடிபெயர்ந்ததனால் பிறஇனத்தொடர்புகள் ஏற்பட்டன. மேலும் பிற கலாசாரங்களினால் அல்லது அயல் கலாசாரங்களினால் தாக்கங்கள் ஏற்படவில்லை. அத்துடன் இப்பிரதேசத்தில் குடியேற்றங்கள் தாமதமாகவே ஏற்பட்டன.

## வடஅல்கொங்குயின் கூடாரம்



மத்திய ஷீல்ட் கலாசாரமக்கள் அல்கொங்கின், ஒஜிப்வா, கிறீ மக்களைப் போன்ற குடியேற்றங்களையே கொண்டிருந்தன எனச் சான்றுகள் கூறுகின்றன. படத்தில் காணப்படுகின்ற மரப்பட்டைகளால் மூடப்பட்ட கூடாரங்கள் போன்றவை புதைபொருள் ஆய்வுகளின்போது பெறப்பட்டன. அக்காலத்து போக்குவரத்துச் சாதனமாயிருந்த மரப்பட்டை வள்ளமெதுவும் ஆய்வுகளின் போது கிடைக்கவில்லை. படத்திலுள்ள வசிப்பிடம் கரையோரத்தில் அமைந்திருப்பதை அவதானிக்கவும். இதனால் பல சான்றுகள் நீரினால் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாமென நம்ப இடமுண்டு.

மத்திய ஷீல்ட் கலாசாரத்தில் கற்களை ஒன்றோடொன்று உரசிச் செய்யப்பட்ட ஆயுதங்களைக்காட்டிலும் கற்களைச் செதுக்கி செய்யப்பட்டவையே காணப்படுகின்றன. சுப்பீரியர் வாவிக்கண்மையிலுள்ள பகுதிகளில் செப்பு ஆயுதங்களே காணப்பட்டன. இவை ஒட்டாவாப் பள்ளத்தாக்கலிருந்த மத்திய பெரு வாவிகள் - சென்லோறன்ஸ் கலாசாரத்திற்கும் பரவி இருந்தன. மனிற்றோபா ஒன்ராறியோ, கியூபெக் மாகாணங்களில் பெருவாரியான கல், செப்பு ஆயுதங்கள் காணப்பட்டன. ஆனால் என்பாலானவை ஒன்றுகூடக் காணப்படவில்லை. இதற்கு நிலத்திலிருந்த அமில மண்ணானது என்புகளைக் கரைத்திருக்கலாம் என நம்பப்படுகிறது. மனிற்றோபாவில் சில மனித உடல்கள் காணப்பட்டன. இவற்றுடன் செங்களிமண்ணும், செதுக்கப்பட்ட கல்லாயுதங்களும் இருந்தன. இக்கலாசாரத்தில் பாதி நிலத்தின் கீழ் கட்டப்பட்ட வதிவிடங்களும், மிகவும் உறுதியற்ற கட்டிடங்களும் இருந்தன. இவை ஒரே இடத்தில் திரும்பத்திரும்ப பல்வேறு குடியேற்றங்களால் கட்டப்பட்டிருந்ததால், இவற்றின் காலங்களைக் கண்டறிவதில் ஆய்வாளருக்குச் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. இக்கலாசார காலத்தில் ஏற்பட்ட பூகோள மாற்றங்களினால், எல்லைகள் மாறின. இதனால் இவை மக்களுக்குச் சாதகமாகவும், பாதகமாகவும், இருந்தன. கலாசாரம் முழுவதும் ஒரே தன்மையதாய் அமைந்திருந்தபோதிலும், பிரதேச வேறுபாடுகள் சிறிதளவு காணப்பட்டன. எனினும் இவை ஷீல்ட் கலாசாரம் முழுவதிலும் காணப்பட்ட கலாசாரச் சிறப்பியல்புகளைப் பாதிக்கவில்லை என்பது கவனத்திற்குரியது. (தொடரும்)


## வயோதிபருக்கான வாகன சேவை

- பிள்ளைகள் வேலையில் லீவு எடுப்பது கஷ்டமா?
- லீவு எடுத்தால் வேலை போய்விடும் என்ற பயமா?

கவலை வேண்டாம் என்னை அழையுங்கள்



குடும்ப வைத்தியர், உடல் பரிசோதனை நிலையம், விசேட வைத்தியர் (Specialist), வைத்தியசாலை மற்றும் அரச காரியாலயங்கள் உட்பட வைத்தியர் பிறமொழியாயின் மொயிபெயர்ப்பும் செய்து மருந்து மாத்திரைகளையும் வாங்கி கொடுத்து தங்களின் தங்குமிடங்களில் பாதுகாப்பாக கொண்டுசென்று விடுவேன். முன்கூட்டியே நாள், நேரம் என்பதை அறியத்தரவும்.

தொடர்புகளுக்கு: **மாறன்** - ***647.205.8502***



# பிள்ளைகள் வளர்ந்து வரும்போது நன்மையளிக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் பெற்றுப் பயனடைய அவர்கள் தகுதியுடையவர்கள்




## ஒன்ராறியோ பிள்ளைகளுக்கான நலனுதவி The Ontario Child Benefit

சிறியதொரு உதவியால் பெரியதொரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

உங்கள் குடும்பம் அண்மையில் அதிகரிக்கப்பட்ட இந்த மாகாண நலனுதவியைப் பெற தகுதி கொண்டிருக்கக் கூடும்.

18க்கும் குறைந்த வயதினரான பிள்ளைகள் உங்களுக்கு இருந்தால் மற்றும் அவர்கள் குறைந்த வருமானமுடைய குடும்பத்தில் இருந்தால், நீங்கள் வருடாந்தம் ஒவ்வொரு பிள்ளைக்கும் $1,100 டொலர்கள்வரை தகுதி பெறக்கூடும். இதனைப் பெறுவதற்கு நீங்கள் முதலில் உங்கள் வருமான வரிகளைப் பதிய வேண்டும்.

**மேலும் அதிகமான தகவலுக்கு ontario.ca/childbenefit என்ற இணையத்தளத்திற்கு செல்லுங்கள் அல்லது கட்டணமின்றி 1-866-821-7770 என்ற இலக்கத்தை அழையுங்கள்.**

ஒன்ராறியோ அரசினால் கட்டணம் செலுத்தப்பட்டது.

Ontario

# விளையாட்டுத் தகவல்கள் 265

இங்கிலாந்து அபார வெற்றி:

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் டெஸ்ட் தொடரின் 2வது போட்டியில் இங்கிலாந்து அணி 115 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது. இங்கிலாந்து வீரர் ஆண்ட்ரூ பிளின்டா∴ப் சிறப்பாகப் பந்து வீசி 5 விக்கெட் கைபற்றினார். போட்டியின் கடைசி நாளான வெற்றி பெற 209 ரன்கள் தேவை என்ற இலக்குடன் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு துவக்கத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. ஆட்ட நேர முடிவில் 80 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்த பிராட் ஹட்டின் ரன் எதுவும் எடுக்காமல் பிளின்டா∴ப் பந்தில் வெளியேறினார். இதையடுத்து மைக்கேல் கிளார்க் உடன் மிட்செல் ஜான்சன் இணைந்தார். இந்த இணையும் நீண்ட நேரம் தாக்குப் பிடிக்கவில்லை. கிளார்க் 136 ரன்கள் எடுத்த நிலையில் ஸ்வான் பந்தில் போல்ட் ஆனார். கடைநிலை ஆட்டக்காரர்களான ஹாரிட்ஸ் ஒரு ரன், சிடில் 7 ரன் எடுத்து பிளின்டா∴ப் பந்தில் போல்ட் ஆகினர். அதிரடியாக விளையாடி அரைசதம் அடித்த மிட்செல் ஜான்சன் 63 ரன்கள் எடுத்த நிலையில் ஸ்வான் பந்தில் போல்ட் ஆனதால் அவுஸ்திரேலியா 115 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வியுற்றது. இந்தத் தோல்வியின் மூலம் கடந்த 75 ஆண்டுகளாக லார்ட்ஸ் மைதானத்தில் ஒரு டெஸ்ட் போட்டியில் கூட தோல்வியைச் சந்திக்காத அணி என்ற வரலாற்றுப் பெருமையை அவுஸ்திரேலியா இழந்துவிட்டது. இங்கிலாந்து பந்துவீச்சாளர் களில் பிளின்டா∴ப் 5 விக்கெட், ஸ்வான் 4 விக்கெட், பிராட் ஒரு விக்கெட் கைப்பற்றினர். இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணி 1-0 என்ற போட்டிக்கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. பிளின்டா∴ப் ஆட்ட நாயகனாக அறிவிக்கப்பட்டார்.

சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட்: அட்டவணை வெளியீடு

இந்தியா, அவுஸ்திரேலியா, தென்ஆப்ரிக்கா உட்பட 8 அணிகள் பங்கேற்கும் சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் தொடர் தென் ஆப்ரிக்காவில் வரும் செப்டம்பர் 22ஆம் தேதி துவங்குகிறது.

அக்டோபர் 5ஆம் தேதி வரை நடக்கும் இத்தொடரில் பங்கேற்கும் 8 அணிகளும் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. இதில் ஏ-பிரிவில் நடப்பு சாம்பியன் அவுஸ்திரேலியா, இந்தியா, பாகிஸ்தான், வெஸ்ட் இண்டீஸ் ஆகிய அணிகள் இடம்பெற்றுள்ளன.

இதேபோல் பி-பிரிவில் தென் ஆப்ரிக்கா, நியூசிலாந்து, இலங்கை, இங்கிலாந்து ஆகிய அணிகளும் இடம் பிடித்துள்ளன. லீக் ஆட்டங்கள் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெறும்.

போட்டி அட்டவணை விவரம்:

செப். 22: தென் ஆப்ரிக்கா-இலங்கை
செப். 23: பாகிஸ்தான்-வெஸ்ட் இண்டீஸ்
செப். 24: தென் ஆப்பிரிக்கா-நியூசிலாந்து
செப். 25: இலங்கை-இங்கிலாந்து
செப். 26: வெஸ்ட் இண்டீஸ்- அவுஸ்திரேலியா, இந்தியா-பாகிஸ்தான்
செப். 27: நியூசிலாந்து-இலங்கை, தென் ஆப்ரிக்கா-இங்கிலாந்து
செப். 28: அவுஸ்திரேலியா-இந்தியா
செப். 29: நியூசிலாந்து-இங்கிலாந்து
செப். 30: இந்தியா-வெஸ்ட்இண்டீஸ், அவுஸ்திரேலியா-பாகிஸ்தான்
அக். 2: முதல் அரையிறுதிப் போட்டி (ஏ1-பி2)
அக். 3: 2-வது அரையிறுதிப் போட்டி (பி1-ஏ2)
அக். 5: இறுதிப் போட்டி.

லண்டன் தடகளம்: உசைன் போல்ட் வெற்றி

லண்டனில் நடைபெற்ற கிராண்ட் பிரீ தடகளப் போட்டிகளில் உலகின் அதிவேக வீரர் என்று அழைக்கப்படும் ஜமைக்காவின் உலக சாம்பியன் உசை போல்ட் 100மீ ஓட்டப் பந்தயத்தில் 9.91 வினாடிகளில் இலக்கைக் கடந்து வெற்றி பெற்றார். இவருடன் இந்த போட்டியில் கலந்து கொண்ட மற்ற 5 ஜமைக்கா தடகள வீரர்கள் ஊக்க மருந்து எடுத்துக் கொண்டது கடைசி நேரத்தில் தெரிய வந்துள்ளது. நல்ல எதிர்காற்றில் ஓடினாலும் இறுதியில் சற்றே ஓட்டம் மந்தமடைந்தாலும் 9.91 வினாடிகளில் இலக்கை எட்டியது ஒரு பெரிய சாதனையாகவே கருதப்படுகிறது. பீஜிங் ஒலிம்பிக் போட்டிகளில் உசைன் போல்ட் 9.69 வினாடிகளில் இலக்கை எட்டி உலக சாதனை படைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மற்றொரு ஜமைக்கா வீரர் யோஹன் பிளேக் 10.11 வினாடிகளில் இலக்கை கடந்து இரண்டாவதாகவும், ஆண்டிகுவா வீரர் டேனியல் பெய்லி 3-வதாகவும் வந்தனர். உசைன் போல்ட்டை வீழ்த்தி விடலாம் என்று கூறிய முன்னாள் 100மீ உலக சாம்பியனும், ஜமைக்காவைச் சேர்ந்தவருமான அச∴பா போவெல் 6-வது இடத்தில் முடிந்து போனார். போல் வால்ட் பிரிவில் ரஷ்யாவின் இஸின் பயேவா 2003ஆம் ஆண்டிற்கு பிறகு பெரிய போட்டித் தொடர் ஒன்றில் தன் முதல் தோல்வியை சந்தித்தார். போலந்தைச் சேர்ந்த அன்னா ரொகோவ்ஸ்கா அவரை வீழ்த்தினார்.

போதை மருந்து பயன்படுத்திய ஜமைக்கா தடகள வீரர்கள்

தடகள போட்டியில் மிகவும் பிரசித்தி பெற்றது ஓட்டப்பந்தயம் ஆகும். இதில் ஜமைக்காவை சேர்ந்தவர்களே ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள். 100 மீட்டர் ஓட்டத்தில் உலக சாதனையாளரான உசேன் போல்ட் அந்நாட்டை சேர்ந்தவர் ஆவார். உலக தடகள சாம்பியன் போட்டி அடுத்த மாதம் நடக்கிறது. இந்தப் போட்டிக்கான ஜமைக்கா அணி அறிவிக்கப்பட்டது. தேசிய போட்டியின் அடிப்படையில் வீரர், வீராங்கனைகள் தேர்வு பெற்றனர். இவர்களுக்கு போதை மருந்து சோதனை செய்யப்பட்டது. இதில் 5 வீரர்கள் தடை செய்யப்பட்ட போதை பொருள் பயன்படுத்தி இருந்தது சோதனையில் தெரிய வந்தது. அவர்கள் பெயர் விவரம் வெளியிடப்படவில்லை. ஆனால் இந்த 5 பேரும் நட்சத்திர வீரர்கள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெஸ்ட்இண்டீசுக்கு எதிரான 2வது டெஸ்ட்: வங்கதேசம் 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி

வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான 2வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் வங்கதேச அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. இதன் மூலம் அந்த அணி 2 போட்டிகள் கொண்ட தொடரை 2-0 என்ற போட்டிக்கணக்கில் கைப்பற்றி அன்னிய மண்ணில் புதிய வரலாற்றைப் பதிவு செய்துள்ளது. வெஸ்ட் இண்டீஸ்-வங்கதேச அணிகளுக்கு இடையிலான 2வது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி செயின்ட் ஜார்ஜ் மைதானத்தில் நடந்தது. இதில் முதல் இன்னிங்சில் வெஸ்ட் இண்டீஸ் அணி 237 ரன்களில் ஆட்டம் இழந்தது. இதையடுத்து விளையாடிய வங்கதேசம் முதல் இன்னிங்சில் 232 ரன்களுக்கு ஆல்-அவுட் ஆனது. முதல் இன்னிங்சில் 5 ரன்கள் முன்னிலையுடன் 2-வது இன்னிங்சை தொடங்கிய வெஸ்ட் இண்டீஸ் அணி 3வது நாள் ஆட்டநேர முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 192 ரன்கள் எடுத்து இருந்தது. இந்நிலையில், 4வது நாள் ஆட்டம் மழை காரணமாக தாமதமாக தொடங்கியது. வெஸ்ட் இண்டீஸ் அணியின் பேர்னார்ட் 69 ரன்களில் ஆட்டமிழந்தார். பெஸ்ட் 12 ரன்னில் அவுட் ஆனார். 2வது இன்னிங்சில் 209 ரன்னில் அந்த அணி ஆல்-அவுட் ஆனது. வங்காளதேச அணி தரப்பில் 'கிப் உல்-ஹசன் 5 விக்கெட்டும், எனாமுல் ஹக் ஜுனியர் 3 விக்கெட்டும் வீழ்த்தினர். வெற்றி பெற 215 ரன்கள் தேவை என்ற இலக்குடன் களமிறங்கிய வங்கதேச அணி துவக்கத்தில் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தாலும் ரகிபுல் ஹசன், 'கிப் அல் ஹசன் ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் வெற்றி பெற்றது. துவக்க வீரர்கள் தமீம் இக்பால் 18 ரன்கள், இம்ருல் 8 ரன்கள் எடுத்தனர். முதல் விக்கெட்டுக்கு களமிறங்கிய சித்திக் 5 ரன்களும், ரகிபுல் ஹசன் 65 ரன்களும், முகமது அஷ்ர∴புல் 3 ரன்களும், முஷிபுர் ரஹ்மான் 12 ரன்களும் எடுத்தனர். அணித்தலைவர் சகில் அல் ஹசன் 96 ரன்கள் எடுத்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் அணியின் வெற்றியை உறுதி செய்தார். வங்கதேச அணி 54.4 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 217 ரன்கள் எடுத்து வரலாற்று வெற்றியைப் பதிவு செய்தது. வெஸ்ட்இண்டீஸ் தரப்பில் சிறப்பாகப் பந்துவீசிய சம்மி 5 விக்கெட்டுகளும், ரோவாச் ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர். இப்போட்டியில் 8 விக்கெட் வீழ்த்தியதுடன் 112 ரன்கள் சேர்த்த சகிப் அல் ஹசன் ஆட்ட நாயகனாகவும், தொடர் நாயகனாகவும் தேர்வு செய்யப்பட்டார்.

சங்கக்காரா அபாரம் 3-வது டெஸ்ட் டிரா

கொழும்பில் நடைபெற்ற இலங்கை-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 3-வது, இறுதி டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி ஒரு விக்கெட்டை மட்டுமே இழந்து 4 விக்கெட் இழப்பிற்கு 391 ரன்கள் எடுக்க ஆட்டம் எத்தரப்பிற்கும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. ஆட்ட நாயகன் சங்கக்காரா 130 ரன்கள் எடுத்து இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். 183-3 என்று துவங்கிய இலங்கை உணவு இடை வேளைக்குப் பிறகு சமரவீரா விக்கெட்டை இழந்ததோடு சரி. அதன் பிறகு அஞ்சேலோ மேத்யூஸ் (64 நாட் அவுட்), சங்கக்காரா இணைந்து 45 ஓவர்களில் 114 ரன்களைச் சேர்த்தனர். கடைசியில் 15 ஓவர்கள் மீதமிருக்கையில் வெற்றிக்கு தேவை 101 ரன்கள் என்ற நிலையில் இரு அணித் தலைவர்களும் ஆட்டத்தை முடித்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்தனர். இலங்கை அணி 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட இத்தொடரை 2- 0 என்று கைப்பற்றியது. தொடர் நாயகனாக இலங்கை வேகப்பந்து வீச்சாளர் நுவான் குலசேகரா தேர்வு செய்யப்பட்டார். இந்த டெஸ்ட் போட்டியுடன் சமிந்தா வாஸ் டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுகிறார். அவருக்கு இலங்கை கிரிக்கெட் வாரியம் சார்பாக ரூ.10 லட்சம் பரிசாக அளிக்கப்பட்டது. இரு அணிகளுக்கும் இடையே 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடர் இன்னும் சில தினங்களில் துவங்கவுள்ளது.

சங்ககரா "நம்பர்-1"

டெஸ்ட் பேட்ஸ்மேன்களுக்கான ரேங்கிங் பட்டியலில் இலங்கை கேப்டன் சங்ககரா முதலிடத்திற்கு முன்னேறினார். இந்திய வீரர் கவுதம் காம்பிர் இரண்டாவது இடத்துக்கு தள்ளப்பட்டார். சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.,) டெஸ்ட் பேட்ஸ்மேன்களுக்கான புதிய ரேங்கிங் பட்டியலை வெளியிட்டது. இதில் இலங்கை வீரர் சங்ககரா 862 புள்ளிகளுடன் முதலிடத்திற்கு முன்னேறினார். இவர், பாகிஸ்தானுக்கு எதிரான மூன்றாவது டெஸ்டில் சதமடித்து அணியை மீட்டார். இதுவே முதலிடம் பெறுவதற்கு முக்கிய காரணமாக அமைந்தது. முதலிடத்திலிருந்த இந்தியாவின் காம்பிர் (847 புள்ளி) இரண்டாவது இடம் பிடித்தார். இலங்கை அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சொதப்பிய பாகிஸ்தான் கேப்டன் யூனிஸ் கான் நான்கு இடம் பின்தங்கி, 6வது இடம் பிடித்தார். 3வது மற்றும் 4வது இடத்திற்கு முறையே வெஸ்ட் இண்டீசின் சந்தர்பால் மற்றும் பாகிஸ்தானின் முகமது யூசுப் முன்னேறினர். டெஸ்ட் பவுலர்களுக்கான ரேங்கிங்கில் இந்தியாவின் ஹர்பஜன் சிங் ஒரு இடம் பின்தங்கி 6வது இடம் பிடித்தார். ஜாகிர் கான் 9வது இடத்திற்கு முன்னேறினார். முதல் இரண்டு இடங்களில் தென் ஆப்ரிக்காவின் ஸ்டைன், இலங்கையின் முரளிதரன் நீடிக்கின்றனர்.

பரபரப்பான ஆட்டத்தில் வங்கதேசம் வெற்றி தொடரைக் கைப்பற்றியது

டோமினிகாவில் நடைபெற்ற மேற்கிந்திய அணிக்கும், வங்கதேச அணிக்கும் இடையிலான 2-வது ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்திய அணி எடுத்த 274 ரன்கள் இலக்கை வங்கதேச அணி வெற்றிகரமாக துரத்தில் ஒரு ஓவர் மீதமிருக்கையில் 276-5 என்று வெற்றி பெற்று, 3 போட்டிகள் கொண்ட இந்த தொடரை 2- 0 என்று கைப்பற்றியது.

பூவா தலையா வென்ற மேற்கிந்திய அணித் தலைவர் ரெய்∴பர் முதலில் பேட் செய்ய முடிவு



**எஸ். கணேஷ்**

தொடர்ச்சி25ஆம் பக்கம்

S.A.P HELPING HANDS உதவும் கரங்கள்
மக்கள் சேவை சதாசிவ சேவை

மூத்தோருக்கான சேவைகள்
- இருப்பிட வசதிகள் ஒழுங்கு செய்தல்
- சமூக நல பணிமனைக்கு அழைத்துச் செல்தல்
- கோவில் / தேவாலயம் அழைத்துச் செல்தல்
- வைத்தியரிடம் அழைத்துச்செல்தல்
- கடைகளுக்கு அழைத்துச் செல்தல்
- எல்லா வகையான படிவங்களும் நிரப்புதல்
- கோடைகால சுற்றுலா

சதாசிவா - 416.454.2810
ASATHN@hotmail.com

மற்றைய சேவைகள்
> All Mortgage / Refinance
> Personal Business Loan
> All kind of Insurances
> Line of Credits
> Bankruptcy
> Accident Claims

இலவச ஆலோசனைகளும், ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்

# ஒன்றாக்கிய வியாபார வரி

## *Harmonized Sales Tax (HST)*

இதுவரை நாங்கள் ஒன்ராறியோ மாகாணத்தின் வியாபார வரி (PST), பொருட்களிற்கும், சேவைகளுக்குமான வரி (GST)யும் தனித்தனியாக செலுத்தி வருவது யாவரும் அறிந்த விடயம். இந்த வரிகளில் நாம் வாங்கும் பொருட்கள் சிலவற்றிற்கு GST உம் சிலவற்றிற்கு PST யும் சில சேவைகள், பொருட்களுக்கும் இரண்டு வரிகளும் தனித்தனியாக அறவிடப்படுவதை அறிவோம்.



இந்த இருவரிகளும் (TAX) நாங்கள் வாங்கும் பொருட்களில் அனேமானவற்றிற்கும், செய்யப்படும் சேவைகளிற்குமாக அறவிடப்படுகின்றது.

மத்திய அரசு இந்த இருவகையான வரிகளையும் ஒன்றாக்க வேண்டும் என பல ஆண்டுகளாக ஒன்ராறியோ மாகாண அரசை வற்புறுத்தி வந்துள்ளது. இதற்காக மாகாணத்திற்கு மேலதிக பண உதவியும் செய்வதாகவும் கூறிவந்துள்ளது. இந் நிலைமை மக்கின்ரி அரசு பதவிக்கு வந்த காலம் தொடக்கம் ஆராயப்பட்டு வந்துள்ளது.

அண்மையில் மாகாண அரசின் தலைவர் டால்ரன் மக்கின்ரி இரு வரிகளையும் இணைத்து புதியவரி நடைமுறைப்படுத்த இருப்பதாக கூறினார். இதனைத்தொடர்ந்து, பல மட்டங்களிலிருந்து அதிர்வு அலை உருவாகியது. முக்கியமாக வீடு, மனை விற்றல் வாங்கலை நிர்வகிக்கும் சபையின் குரலும் எதிராக ஓங்கி ஒலித்தது. எதனையும் மாகாண அரசுத்தலைவர் செவி சாய்த்ததாக இல்லை. அத்துடன் புதிய முறையினால் இணைந்த (சேர்ந்த) விற்பனை வரி (Harmonized Sales Tax) அடுத்த வருடம் 2010, யூலை 1ஆம் திகதி (கனடாவின் பிறந்ததினம்)யிலிருந்து அமலிற்கு வருவதாக உறுதிப்படுத்தியுள்ளார். அரசிற்கு போதியளவு வாக்கு பலம் இருப்பதால் எதுவித இடையூறுகளும் இல்லாமல் அடுத்த வருடம் யூலை 1ஆம் திகதியிலிருந்து இந்த புதிதான வரி ஒன்ராரியோவில் நடைமுறைக்கு வரும் என்பதில் எதுவித அச்சமும் இருக்கமுடியாது. இதனை அரசிலுள்ள பல அமைச்சர்களும் உறுதி செய்துள்ளார்கள்.

ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் மாகாண விற்பனை வரி (PST) 8% உம் பொருட்களிற்கு, சேவைகளுக்குரிய வரி (GST) 5%உம் இணைந்து புதிய வரி 13% ஆக அறவிடப்பட இருக்கின்றது. இந்த வரியை Canada Revenue Agency (CRA) அறவிடும்.

இந்த புதிய வரியினால் வீடு, மனை விற்பனை மிகப்பாதிப்பு ஏற்படலாம். முக்கியமாக புதிதாக நிர்மாணம் செய்யப்படும் வீடுகளில் பலத்த தாக்கம் ஏற்படலாம். TREB போன்ற அமைப்புகள் ஏற்படுத்திய பயத்தை எதிர்ப்பை எழும்பியதைத் தொடர்ந்து, இந்த வரி அறவிடும் முறையில் சிறிய சிறிய மாற்றங்கள் மாகாண அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வீடு, மனை, விற்பனை சம்பந்தமாக (HST) இன் அறிவிப்புக்களைப் பார்ப்போம்.

1. யூலை 01, 2010 இலிருந்து இந்த வரி அறவிடப்படும்.
2. ஏற்கனவே வசித்த (Resales) வீடு மனைகளின் விற்பனைக்கு இந்த வரி அறவிடப்படமாட்டாது. (HST Included in the Sales Price)
3. வீடு, மனை விற்றல் வாங்குவதற்குரிய Commissionஇற்கு HST (13%) அறவிடப்படும்.
4. மற்றும் moving Cost, Legal Fees, Home Inspection இற்கு இந்த வரி அறவிடப்படும்.

தொடர்ச்சி 23ஆம் பக்கம்

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

**தொடர் - 303**


## HomeLife GTA Realty Inc., Brokerage*

Independently owned & operated

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"



Raja M. Mahendran, P. Eng. (Broker / Owner)

1711 McCowan Rd. #206, Toronto
Tel.: 416.321.6969

145 Traders Blvd # 28, Mississauga
Tel.: 905.712.2666

## DETACED HOUSE FOR SALE



- Morningside & Sheppard
- 2 Storey • 4 Bedrooms
- 3 Washrooms • Newer roof
- Unfinished Bsmt • single Garage
- upgraded windows
- Asking Only $289,000

## NEW CONDO. for Sale

- Markham & Sheppard
- Brand new 1 bedroom + den, lower floor Previous buyer selling the property, 5 appliances
- Asking $170,000

## Condo. for Sale

- Mccowan & Steeles
- 2 Bedroom, highrise, corner unit

Asking $189,900

## Condo. for SALE

- Finch & Middlefield

2 Bedroom, low highrise, less than 5 years old complex. Asking $179,900

## எதிர்பாருங்கள்

## Townhouse Project

"MORNINGSIDE HEIGHTS"

- 4 Buildings • 21,000 sqft. & 27 units
- Medical Building units available • Restaurant units available
- Food / Retail units available • Starting Price $169,900

Nantha Aiyadurai
Cell: 613 850 9931

COLDWELL BANKER COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

Buying or Selling

Relocation Service
OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# இணையிலா நாடகர் - ஹென்றிக் இப்சன்

## சென்ற இதழ் தொடர்ச்சி...

இப்சனின் நாடகங்களில் Hedda Gabler நாடகமே அதிக அளவில் அரங்கேற்றங் கண்ட பெருமைக்குரியது. இதன் பிரதான பாத்திரம் ஒரு பெண், கிட்டத்தட்ட ஒரு பாவையின் வீட்டு நோரா என்ற பாத்திரத்தைப்போல. எனினும் நோராவைப்போல் அல்லாது ஹெடா தனது சுதந்திரத்துக்காக மற்றவரின் விதியை மாற்றியமைப்பதில் முனைந்து நிற்கின்றாள். அதனால் ஹெடா என்ற பாத்திரம் நோராவிலும் பார்க்க ஊக்கமும் உறுதியுமுடைய ஒரு சவாற் பாத்திரம் என்பது தற்கால வாசகர் பலரது கருத்தாகும்.

இவ்விதம் இப்சனின் பிற்கால நாடகங்களிற் பாத்திரங்கள் மற்றவர் எக்கேடு கெட்டாலும் தங்கள் இலட்சியங்களை அடைவதில் தீவிரமாகச் செயற்படுவதைக் காணலாம். அதே சமயத்தில் தங்கள் பெருமைக்காகச் சொந்த விருப்பங்களைத் தியாகம் செய்வதற்கும் அவர்கள் தயங்குவதில்லை. இத்தகைதொரு பாத்திரந்தான் John Gabriel Borkman.

Little Eyolf என்ற நாடகம் நடக்கமுடியாத அழகான தன் மகனை வளர்க்கத் தனது எழுத்துப் பணியைத் தியாகம் செய்யும் ஒரு தந்தையைப் பற்றியது. இப்சனின் பிற்கால நாடகங்களில் இதுவே இளக்கமானது என்பது சில ஆய்வாளர் கருத்து.

இப்சனின் நாங்கள் நன்றாக விழித்திருந்த வேளை (When We Dead Awaken) என்ற நாடகத்தில் கலையின் குளிர்மைக்கும் வாழ்வின் வெம்மைக்கும் இடையிலுள்ள வேறுபாடு காட்டப்படுகின்றது. கலை ஒரு சிறைச்சாலை. கலைஞன் அதனின்றும் வெளியேறும் ஆற்றலற்றவனாக இருக்கின்றான் என்ற கருத்துப்பட அதில்வரும் ரூபெக் என்ற கலைஞர் ஐரீனுக்குச் சொல்கிறார். ஐரீன் ரூபெக் கற்பனை உலகத்தில் வாழ்பவர் என்றும் தன்னை மதிக்கும் மக்களின் நலன்களில் அக்கறை சிறிதும் இல்லாதவர் என்றும் குற்றஞ் சாட்டுகிறாள்.

நாங்கள் நன்றாக விழித்திருந்த வேளை ஒரு நாடகப் பின்னுரை ஆகும் என்று இப்சன் குறிப்பிட்டுள்ளார். அதுபோலவே அவரது வாழ்க்கையின் இறுதிப் படைப்பாகவும் இந்த நாடகம் அமைந்துவிட்டது. அவர் கிரிஸ்ரியானியாவில் 23.05.1906ல் - தமது 78ஆவது அகவையில் - காலமாகிவிட்டார்.

## மதிப்பு

மத்திய ஒசுலோவில் அவரது சடலம் புதைக்கப்பட்ட இடத்துக்கு 'எம்மைக் காத்தவரின் மயானம்' என்று பெயரிடப்பட்டுள்ளது. அவர் இறந்து ஐந்தாறு ஆண்டுகளுக்கு உள்ளாகவே சர்ச்சைக்குரிய அவரது நாடகங்கள் அனைத்தும் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இப்சன் தனது தாய்மொழியிலேயே நாடகங்கள் எல்லாவற்றையும் எழுதினார். எனினும் அவர் வாழும் காலத்திலேயே பிற ஐரோப்பிய மொழிகளில் பல மொழிபெயர்க்கப்பட்டன. பிற நாடுகளில் வாழ்ந்து கொண்டு பல நாடகங்களை எழுதியிருந்தாலும் எல்லா நாடகங்களிலுமே பாத்திரம் மற்றும் காட்சிப் பின்னணிகள் எல்லாம் நோர்வே நாட்டுக்குரியனவாகவே இருந்தன. அதனாலோ என்னவோ இப்சன் பிற்காலத்தில், 'எனது நாட்டுப் புவியியலை அறிந்தவர்களே நாடகங்களையும் நன்கு விளங்கிக்கொள்ள முடியும்' என்று கூறினார்.

2006ல் இப்சனின் நூற்றாண்டு நினைவு விழா நோர்வேயிலும் பிற நாடுகளிலும் கொண்டாடப்பட்டது. அந்த ஆண்டு நோர்வே அரசினால் 'இப்சன் ஆண்டு' என்று பிரகடனப்பட்டது. 23.05.2006 அன்று புனரமைப்புச் செய்யப்பட்ட இப்சன் தொல்பொருள் மனையும் மீளத் திறக்கப்பட்டது. அவர் இத்தாலி, யேர்மனி, தென்மாக்கு ஆகிய நாடுகளில் வாழ்ந்த காலம் (1864-1891) அவரது நாடக வாழ்க்கையின் பொற்காலம் என்று கூறப்படுகின்றது. தற்கால நாடகத்தின் தந்தை என்றும் தற்கால நாடகத்துக்குக் கலைத்துவத் தகைமை அளித்தவரென்றும் நாடகத்தால் ஐரோப்பியரின் மனப்பான்மையைப் புதுப்பித்தவர் என்றும் அவர் புகழப்படுகின்றார். சேக்ஸ்பியர் காலத்திலிருந்து சமூக முக்கியத்துவம் குன்றியிருந்த நாடக அரங்கத்துக்கு அறவியல் அழுத்தத்தாலும் உளவியல் ஆழத்தாலும் புத்தெழுச்சி அளித்தவர் என்றும் போற்றப்படுகின்றார். அவரது நாடகங்கள் இன்றும் ஆங்காங்கு அரங்கேற்றப்பட்டு வருகின்றன. அவற்றுள் இப்சனுக்குத் தொடர்ந்து புகழ்கொடுத்துவரும் நாடகம் ஒரு பாவையின் வீடு என்பது.

## ஒரு பாவையின் வீடு

இந்த நாடகத்தை எழுதுவதற்கு எட்டு ஆண்டுகளுக்கு முன்பதாக, 1871ல் இப்சன் லோரா பீற்றசன் என்ற நோர்வே இளம்பெண் ஒருவரைச் சந்திக்க நேர்ந்தது. ஒரு வானம்பாடியைப் போல இந்தப் பெண் இப்சனுக்குக் காட்சியளித்தாள். 1872ல் விக்டர் கீலர் என்ற தென்மாக்குப் பாடசாலை ஆசிரியரை லோரா திருமணஞ் செய்துகொண்டார். கணவனுக்குக் காசநோய் வந்தது. மருத்துவர் வெப்ப நாடொன்றிற் போய் இருக்கச் சொன்னார்கள். இவர்களிடம் பணம் இல்லை. பணம் என்ற பேச்சை எடுத்தாலே விக்டர் விசரர்போல் உளறத் தொடங்கும் இயல்புள்ளவராக இருந்தார். அதனால் கணவனுக்குத் தெரியாமல் லோரா கடன் எடுத்தார். கடனுக்கு அவரது நண்பர் ஒருவர் பிணைநின்றார். தம்பதியர் இத்தாலிக்கு இடம் மாறி இனிதே வாழ்ந்து வந்தனர். விக்டருக்கு நோயும் மாறிவிட்டது.

இரண்டு ஆண்டுகளின்பின் கடனைத் திருப்பிக்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. லோராவிடம் பணம் இருக்கவில்லை. கணவனுக்குச் சொல்லவும் துணிவு வரவில்லை. பிணைநின்றவரும் பணத்தொல்லைக்கு உள்ளானார். பொய்யான காசோலை ஒன்றைக் கொடுத்துக் கடனை அடைக்க லோரா முயன்றார். வங்கியிற் பணம் இல்லாததாற் காசோலை செல்லாததாகிவிட்டது. நிகழ்ந்ததைக் கணவனுக்குச் சொல்லவேண்டிய நிலைமைக்கு லோரா தள்ளப்பட்டார்.

தன்பொருட்டுத்தான் லோரா கடன் எடுத்தார் என்பதைக்கூடக் கருத்திற் கொள்ளாது, விக்டர் மனைவியை ஒரு குற்றவாளிபோல நடத்தத் தொடங்கினார். மனைவியாகவும் பிள்ளைகளுக்குத் தாயாகவும் இருக்குந் தகுதி லோராவுக்கு இல்லை என்று வாதாடினார். லோராவுக்கு நரம்புத்தளர்ச்சி வருத்தம் வரலாயிற்று. அவரை ஓர் அரசாங்கப் பராமரிப்பு நிலையத்துக்கு விக்டர் அனுப்பினார். கூடவே லோராவுடன் இனிக் கூடிவாழ முடியாது என்று கூறிப் பிள்ளைகளையும் அவரிடம் இருந்து பிரிக்க முயன்றார். ஒரு மாதத்துள் லோராவுக்குச் சுகம் வந்தது. பிள்ளைகளின் பொருட்டுத் தன்னை ஏற்றுக்கொள்ளும்படி கணவனை வற்புறுத்தினாள். விக்டர் வேண்டா வெறுப்பாகச் சம்மதித்தார்.

இந்தச் செய்தியை அறிந்த இப்சன் 1878 செப்தம்பரில் ஒரு பாவையின் வீடு என்ற நாடகத்தை எழுதத் தொடங்கினார். சில மாற்றங்களுடன் கிட்டத்தட்ட உண்மைக் கதையையொட்டியே நாடகத்தை எழுதினார். ஆனால் முடிவு முற்றிலும் இப்சனுடையது. நோரா என்ற மனைவி திருமண மோதிரத்தைக் கழற்றித் தன்னை மதியாத கணவன் தோவால்ட (Torvald) இடம் கொடுத்து, தனது மோதிரத்தை அவனிடமிருந்து பெற்றுக்கொண்டு வீட்டைவிட்டு வெளியேறுகின்றாள்.

நாடகம் படிப்பிக்கும் பாடம்: ஒருவர் மற்றொருவர் வகுத்த வழியில் நடக்க முடியாது. மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென்றால் அவர் தன்னைத்தான் அறிதல் வேண்டும், தன்வழி நடக்க வேண்டும். மனைவி என்பவளுக்கும் குடும்ப நன்மைகுறித்துச் சில தீர்மானங்களை எடுக்க உரிமையுண்டு. அந்த உரிமையைக் கணவன் மதிக்க வேண்டும்.

இந்த நாடகம் முதன்முதலாக கோப்பன்ஹாகன் நகரத்தில் 1879ல் மேடையேற்றப்பட்டது. ஒரு வருடத்துக்குள் ஸ்கண்டினேவியாவிலும் யேர்மனியிலும் அது பல அரங்கேற்றங்களைக் கண்டது. கண்டதோடு மட்டுமல்லாது அந்நாடுகளிற் பெரும் புயலையும் கிளப்பிவிட்டது.

கணவனை விட்டுப் பிரிந்த நோராவின் செட்டும் அவளது சுதந்திரப் போக்கும் கண்டனங்களை மூட்டின. எனினும் பெண்கள் முன்னேற்றத்தை விரும்பியவர் இப்சன் செய்த புரட்சியை மிகவே வரவேற்றனர். நோரா பாத்திரம் அக்காலத்து மக்களின் அன்றாடப் பேச்சுப்பொருளாகவும் மாறியது. விவாதங்கள் சண்டைச்சச்சரவுகளையும் உண்டுபண்ணின. அதனால் கடைகள் மற்றும் பொது இடங்களில் ஒரு பாவையின் வீடு பற்றிப் பேசலாகாது என்று தடைகளும் விதிக்கப்பட்டன. தடைகள் பெண் உரிமைச் சங்கங்களைத் தோற்றுவித்தன.

நாடகத்துடன் பெண்பாலைத் தொடர்புபடுத்தியது இப்சனுக்குப் பெரிதாகப் பிடிக்கவில்லை. பல ஆண்டுகள் கழித்து நோர்விய பெண் உரிமைச் சங்கம் ஒழுங்குசெய்த கூட்டம் ஒன்றிலே பேசுகையில் இப்சன், 'பெண் உரிமை இயக்கத்துக்கு உழைப்பவன் என்ற பெருமைக்குரியவனாக நான் என்னைக் கருதவில்லை. உண்மையில் பெண் உரிமைகள் எவை என்றும் எனக்குத் தெரியாது. என்னைப் பொறுத்தவரையில் மனித உரிமையே முக்கியமாகின்றது' என்று குறிப்பிட்டார்.

ஒரு பாவையின் வீடு திரு. வேணன் அபயசேகரா அரசாங்க அதிபராக இருந்த காலத்தில் யாழ்ப்பாணத்திலும் மேடையேற்றப்பட்டது. அதனைத் தமிழாக்கம் செய்த பிரபல எழுத்தாளர் தேவன் - யாழ்ப்பாணம், நோராவின் மோதிரத்தைத் தாலியாக்கியதால், நாடகத்தை யாழ்ப்பாணத்தவர் நிராகரித்தனர். மேல் நாட்டவரின் திருமண மோதிரம் தமிழரின் தாலிக்கு நிகரானதல்ல என்ற வாதம் ஓயச் சில மாதங்கள் பிடித்தன.

*பார்க்க: இணையத்தளக் கட்டுரை The Dramatist: HENRICK IBSEN என்ற தலைப்பில் ஒசுலோ பல்கலைக்கழகப் பேராசிரியர் Bjorn Hemmer அவர்கள் எழுதியது.* ***(www.mnc.net/norway/Ibsen.htm)***



கவிஞர் வி. கந்தவனம்

A1 கொழும்பு
போட்டோ ஸ்ரூடியோ & வீடியோ
அனைத்து போட்டோ, வீடியோ படப்பிடிப்புகள்
எல்லா வகையான போட்டோ வீடியோ வேலைகள்
2 பாஸ்போட் $5.00 2 லாண்டட் காட் $5.00
2 சிற்றிசன் $5.00 - 2 அனைத்துவிதமான ஐ. டி.$5.00
3 - 5X7 ஸ்ரூடியோ போட்டோ $15.00
From: அல்பத்துடன் போட்டோ PACKAGES
25 - 5X7 பிறந்த நாள் போட்டோக்கள் $75.00
50 - 5x7 பூப்புனித நீராட்டு விழா $150.00
100 - 5x7 திருமணவிழா $300.00
2296 EGLINTON AVE. EAST @ BIRCHMOUNT ROAD
UNIT 3 LOWER LEVEL, Web: www.tamilsyellowpeages.com
Mobile: 416-752-4444 Tel: 416-755-2333

# வாழ்க்கை சுவர்க்கமாகது இனிய இல்லமொன்றில்...


## Elaguppllai (Mike) Srinathan B.Sc

**Sales Representative**

**Dir: 416-276-1225 Off: 905-470-9800**

**Email: esrinathan@trebnet.com**







**$279,000**
Detached Bungalow, Bed rooms 3, Washrooms1
All Brick Bungalow, 5 Cars Parking Driveway, Walking Distance To Ttc, Go Transit,



**$279,000**
Town house 2 story, Bed rooms 3 , Washrooms 2
Beautifully Maintained Townhome 3 1/2 Years Old Shows Like New,



**$333,000**
Link 2 Story Bed rooms3+1, Washrooms 3
Well Maintained, 1600 Sq Ft Plus Bsmt Apartment With Sep Entrance, Walk To Ran-



**$354,900**
Detached 2 story, Bed rooms 3, Washrooms 2
All Brick Spacious 3 Bedroom House, Laminated Walkout Basement



**$369,000**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 3,
New Windows 2006. 2080 Square Foot, Demand Area Of Markham



**$375,900**
Detached 2 Story, Bedrooms 4 Wasroom 3,
Almost New 4 Bdrm Home. Apprx 1885 Sq Ft Of Luxurious Open Concept Living



**$399,000**
Detached 2 Story, Bed rooms 4 Washrooms 3, Demand Location. Newly Painted. A Spacious Breakfast Area. Access To Garage From The House



**$399,900**
Detached 2 Story, Bed rooms 3 Washrooms 3, Directly Access To House With Garage, Basement Professionally Finished With Panelled Wall



**$409,800**
Detached 2 Story, Bed rooms 3+1, Washrooms 3
Detached W/Fin.Bsmt. +Sep.Entrance W/Long Driveway For 4 Cars



**$429,000**
Detached 2 story, Bed rooms 3 Washrooms 3,
Only 2 Year Old,Hardwood Floor & Solid Oak Staircase-Closed To Shoping



**$469,000**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 4,
Two Years Gorgeous Custom-Built 2500+ Sf. House.Big Windows



**$469,900**
Detached 2 Storys, Bed rooms 3, Washrooms 3
This New Home Loaded With Upgrades Featuring, Hardwood Floors,Oak Staircas



**$469,900**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 4,
More Than $70K In Upgrades 9Ft Ceilings With Lots Of Natural Light.



**$519,900**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3
Less Than 5 Years Old House, Steps To School And Ttc. Over 2800 Sq.Ft



**$535,000**
Detached 2 Story, Bedrooms 4, Washroom 4
Main Floor 9 Ft Ceiling. All 4 Bedroom Have Washroom. Gas Fireplace



**$549,900**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 3,
Upgraded Kitchen W/Granite Counter Top, Pot Lights, Upgraded Entry Door



**$1,588,000**
Detached 2 Story, Bedrooms 7+1 Washrooms 6,
Custom Built 6000Sf. On 1.1 Ac Lot With 2 Sep.Houses Fin.Bsmt Sep.Ent



**$299,900**
Detached 2 Story, Bedrooms 3 Washrooms 3
Ideal For A Young Family. Features Large Family Room W/ Fireplace



**$319,000**
Detached 2 Story, Bed rooms 3 ,Was rooms 2
Detached Starter Home With An Entertainer's Yard! This Fully Fenced



**$289,800**
Detached 2 Story Bed rooms 3, Washrooms 2,
Affordable Detached All Brick Two Storey, Laminate Floors In Living/Dining Rooms



**$369,900**
Detached 2 Story Bed rooms 4, Washrooms 3,
Large Family Room W/Gas Fireplace. Steps To School & Transit



**$$749,000**
Sale Of Business With Property Gas Stations. Full Service Esso Gas Station, Video 99 Rental, Coffee Time



**$159,000 For Sale**
Sale Of Business Without Property Gas Stations. Self-Service Gas Bar And Convenience Recently Renovated

RE/MAX
**Realtron Realty Inc. Brokerage**
Independently Owned and Operated
7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7

**'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'**

# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி? கண்



## The Eye

இதனை நயனம், நேத்திரம் என அழைப்பர். நமது உறுப்புக்களில் கண்ணும் முக்கிய இடத்தை வகிக்கின்றது. முகத்தில் வலது, இடதாக இரு கண்கள் அமைந்துள்ளன. கண்களுக்கு பொருட்கள் தென்பட்டவுடன் பார்வை - நரம்பு மூலம் மூளைக்குச் செய்திகள் அனுப்பப்படுகின்றது. அவ்வேளை பார்வையிட்ட நிகழ்வுகளுக்கு ஏற்ப உணர்வுகளை எமக்கு வெளிப்படுத்துகின்றது. அத்துடன் நமது உடல் நிலையில் ஏற்படும் நோய்களைக் கண்டு கொள்வதற்கும் வைத்தியர்களுக்குப் பெரும் உதவியாக உள்ளது. எனவே நமது கண்களை நாம் கண்ணும் கருத்துமாக பாதுகாத்து வரவேண்டும். கவனக்குறைவாக இருந்தால் நமது கண்பார்வை கெட்டுப் பரிதவிக்க வேண்டியநிலை ஏற்படும்.

எனவே எமது கண்களைப்பற்றி நன்கு அறிந்து கொள்வதினால் எம்மை நாம் பாதுகாத்து இன்புற்றுச் சுகத்துடன் வாழமுடியும். கண்ணின் பாகங்களையும் அதில் ஏற்படும் வியாதிகள் பற்றியும் பார்ப்போம்.

வில்லை - Lens கண்மணி - Pupil
கதிராளி - Iris கண்ணீர் - Tears
இமை இணைப்படலம் - Conjunctiva
விழிவெண்படலம் - Cornea
கண்ணாடியுடனீர் - Vitreous Body
கண்மடல் - Eye lid விழித்திரை - Ketina
கண்ணீர்க்கான் - Lachrymal Duct
கண்ணீர்ச்சுரப்பி - Lachrymal Gland
கண்ணீர்பை - Lachrymal Sac
கண்தசை - Eye Muscles
கண்புருவம் - Eye Brow கண்இமை - Eyelash
பார்வை நரம்பு - Optic Nerve என்பவாகும்.

இதன் அகத்தே ஏற்படும் நோய்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

அழற்சி - Pink Eye குருடு - Blind
இமை வீக்கம் - Blepharitis
குருட்டுத்தன்மை - Blindness
ஒளிமுனைப்பமைதிக் குறைபாடு - Astigmatism
விழுப்புண்பட்ட கண் - Black Eye
நிறக்குருடு - Colour Blindness
கண்ணில் பசலை படர்தல் - (பூவளர்தல்) Cataract கண்கட்டி - Sty
கண்விழி விறைப்புநோய் - Glaucoma
கண்ணின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டும் பார்வை உணர்ச்சி காணப்படல் - Tunnel Vision தூரத்துப் பார்வை - Long sightedness
மாலைக்கண் - Night Blindness
விழித்திரைத் தளர்வு - Retinal Detachment
கிட்டப்பார்வை - Shortsightedness
வாக்குக் கண் - Squint Eyed
பக்கவாட்டுப் பார்வை - Squinting
கண்ணில் தொற்று - Inflammation of the Eye
கண் மின்னுதல் Flickering in front of the Eyes
கண்கள் நோ - Pain in the Eyes
வரட்டியான கண்கள் - Dry Eye
கண் எரிவு - Irritation of the Eye
கண்ணால் நீர்வடிதல் - Watering of the Eye
கண்கள் சிவப்பாகுதல் - Pink Eye
என்பனவற்றை எடுத்துக்கூறலாம்.

கண்ணுக்குள் நுழையும் ஒளிக்கதிர்கள் விழிவெண்படலம் வழியாக விழித்திரைப் படலத்தில் உள்ள கண்ணின் மணி (Pupil) மூலம் விழி ஆடியை (Lens) அடைகிறது. விழி-ஆடி ஒளிக்கதிர்களை விழித்திரை என்ற விழியின் பின்திரை மீது தலைகீழாக விழச் செய்கிறது. விழித்திரையிலுள்ள திசுக்கள் ஒளிக்கதிர்களை உணர்வுகளாக மாற்றி பார்வை நரம்புகள் மூலம் மூளையின் பின்பக்கமுள்ள Visual Cortex க்கு அனுப்புகின்றது. கண்களில் இருந்து வரும் உணர்வு நரம்புகள் ஒழுங்கு செய்யப்பட்டுச் சரியாக பார்வை மூளையில் பதிவாகிறது.

விழி நீர் உற்பத்தி செய்யும் நாளங்கள், கண்ணின் மேலே வலது உட்புறம் உள்ளது. சிறிய நாளங்களின் வழியாக கண்ணுக்கு நீர் வந்து கொண்டிருக்கின்றது. இந்நீரே கண்களைச் சுத்தப்படுத்துகின்றது. இமையினுள் உள்ள சிறு துவாரத்தின் மூலம் கசிகின்ற நீர் விழிகளை ஈரப்பசுமையாக வைத்திருக்க உதவுகின்றது. இந்நீர், இமைகளை நாம் மூடும் போது வெளியே வருவதும் உண்டு. காரம் உள்ள சாறுகள் கண்களில் பட்டாலும் நீர் கண்ணில் இருந்து சொரிவதை நாம் அறிவோம். உ+ம் வெங்காயச்சாற்றை எடுத்துக் கொள்ளலாம். சிலருக்கு கண்களில் பூளை அழுக்கு ஏற்படுவதுண்டு. இதற்குப் பல காரணங்கள் உண்டு. ஆனால் எல்லோருக்கும் ஏற்படுவதில்லை. அவரவர் பார்க்கின்ற வேலைக்கு ஏற்ப வருவதுண்டு. சாதாரணமாக கண்களில் வெண்படலத்தில் பாக்டீரியாக்கள் மற்றும் வைரஸ்கள் தாக்குவதனால் கண்கள் சிவப்பு நிறம் ஏற்பட்டுப் பின் பூளை வெளிப்படும். தங்கள் வைத்தியர்களிடம் சென்றால் தகுந்த பரிசோதனை செய்து மருந்தைப் பெற்றுச் சுகம் பெறமுடியும்.

40, 45 வயதிற்கு மேற்பட்ட சிலருக்கு கண்களினால் சிறிய எழுத்துக்களை வாசிக்கமுடியாமல் இருப்பதுண்டு. காரணம் விழிவெண்படலம் கிட்டப் பார்வையை படிப்படியாக இழக்கிறது (Loss of Accommodation). இதனால் சிறிய எழுத்துக்களை பார்த்து வாசிப்பதற்கு கஷ்டமாக இருக்கும். இதற்கு கண்ணாடி அணிவதே நன்று. எனவே உரிய வைத்தியர்களிடம் சென்றால் யாவற்றையும் நன்கு அறிந்து கொள்ளலாம்.

சிலருக்கு கண்களில் கண்ணீர் வருவதில்லை. இது பார்வைக்கு பங்கம் விளைவிக்கும். விழியானது உலர்ந்து போய்விடும். உடன் உரிய வைத்தியர்களை நாடி சிகிச்சை பெற்றுக்கொள்ளுங்கள்.
சிலருக்கு கண்களில் இருந்து கண்ணீர் கசிந்த வண்ணம் இருக்கும். அத்துடன் கண்கூச்சமும் ஏற்படும். கண்ணீர்ப்பையில் அல்லது கண்ணுக்கு வரும் நாளத்தில் அடைப்பு ஏற்பட்டிருந்தால் இந்நிலை ஏற்படும். இதற்கு பெரும்பாலும் சத்திரசிகிச்சை தான் மிக நன்று. எனவே உரிய வைத்தியரிடம் சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ளவும்.

சிலருக்கு மாலைக்கண் உண்டு. குழந்தைக-ளைப் பொறுத்தமட்டில் உயிர்ச்சத்து 'ஏ' குறைவால் ஏற்படும். இதனை தவறாமல் கொடுத்து வந்தால் நிவர்த்தியாகும். அடுத்து சிறியோர், பெரியோருக்கு வயிற்றோட்டம் ஏற்படும்போது 'A' உயிர்ச்சத்து குடலில் இருந்து உறிஞ்சப்படுவதில்லை. இதனால் விழித்திரையும் கருவிழியும் பாதிக்கப்பட்டு மாலைக்கண் நோய் ஏற்படவாய்ப்புண்டு. இதற்கு உரிய வைத்தியர்கள் தங்களுக்கு ஏற்றவற்றை எடுத்துக் கூறுவார்கள்.

சிலருக்கு நீண்டநேரம் தொலைக்காட்சி அல்லது புத்தகத்தைப் பார்த்தபின் மற்றவற்றைப் பார்வையிடும்போது தெளிவாக பார்ப்பது கஷ்டமாக இருக்கும். இதை After Image என அழைப்பர். நீண்ட நேரம் தெளிவான பார்வையிருந்தால் சற்று விழித்திரை விரிவடைந்திருக்கும். சிறிது நேரம் கழிந்த பின் சாதாரண நிலைக்கு வந்து விடும் எனக் கூறப்படுகின்றது.

சிறுவர்களுக்கு அடிக்கடி கண்களில் கட்டி ஏற்படுமானால், சிலவேளை கண்ணாடி போட வேண்டியவரானால் அக்கண்ணாடியை போடாமல் இருந்தால் இக்கட்டி ஏற்பட வாய்ப்புண்டு. ஆனால் பெரியவர்களுக்கு இக்கட்டி ஏற்படுமானால் அது நீரிழிவு நோயினால் வரலாம்.

கண்களின் கீழ் இமைகளில் தளர்வான திசுக்கள் இருப்பதனால் நீர் தேங்குவது சுலப-மாக இருக்கின்றது. தைராய்ட் குறைவால் கண் கீழ் இமையில் நீர்தேக்கம் ஏற்படும். அத்துடன் சிறுநீரக வியாதியாலும் இந்நிலை ஏற்படும்.

மேலும் சிலருக்கு கண்களைச் சுற்றி கட்டிகளாக திரண்டிருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. இதன் ஒரு காரணம் கொழுப்பு பொருட்கள் அதிகம் பாவிப்பதாகும். எனவே இப்பதார்த்தங்களை தவிர்த்தால் உடல் மெலிந்து அழகு ஏற்படுவதுடன் திரண்டு காணப்பட்ட கட்டிகளும் நீங்கிவிடும்.

கண்கள் மூடித்திறந்து கொண்டிருப்பதினால் கண்களில் ஈரப்பசை ஏற்படுகின்றது. எனவே கண்களை நீண்டநேரம் இமைக்காமல் இருப்பது நன்மையல்ல. இதனால் வரட்சிநிலை ஏற்படலாம்.

மது அதிகம் அருந்துவோருக்கு இருதய இரத்தோட்டம் அதிகரிக்கும். இதனால் இரத்த நாளங்கள் விரிவடைந்து கண்கள் சிவப்பு நிறம் கொண்டதாக இருக்கும். சிலருக்கு கண்ணீர் வடிவது கண்ணீர்ப்பையில் அடைப்பு காரணமாக இருக்கலாம். கண்ணீர் மூக்கினுள் வடியலாம். எனவே மூக்கினுள் வடிகால் அமைந்துள்ளதா? என்று அறிய வேண்டும். சிலருக்கு கண்களில் புண் ஏற்பட்டாலும் அதிக நீர் வடியும். கண்நோய் தொற்று வியாதியாலும் நீர்வடிய இடமுண்டு. மூக்கு அடைப்பினாலும் ஏற்படலாம். எனவே எதற்கும் உரிய வைத்தியர்களை நாடவேண்டும்.

சிலருக்கு கண்களில் இருக்கும் நீரானது இரத்தத்துடன் கலந்து வடிந்து வெளியேறும். இவர்களுக்கு சரியான முறையில் வடிதல் நடைபெறமாட்டாது. இதனால் கண்ணில் நீர் தேக்கமடைந்து அதிக அழுத்தம் ஏற்படும். ஆகையினால் கண்ணில் உள்ள நரம்புகள் சேதமடைய வழியமைக்கும். பார்வையும் மங்கத் தொடங்கும். முதலில் பக்கப்பார்வை கெடும். இதனால் வலது இடது பக்கங்களில் என்ன நடைபெறுகின்றது என்பதை அறிய முடியாது. ஆகையினால் வயது வந்தவர்கள் அதாவது 40, 45 வயதிற்கு மேற்பட்டோர் இந்நோய் உள்ளதா? என்பதை நன்கு வைத்தியர்கள் மூலம் அறிந்து கொள்ள வேண்டும். தவறின் பார்வையற்று குருட்டுத் தன்மை ஏற்பட்டு கவலையடைய வேண்டிய நிலை வரும். வருமுன் காப்பாற்றிக்கொள்ளுங்கள்.

சிலருக்கு பிறப்பிலே ஒரு கண் மூடியபடியும் மறுகண் திறந்தபடியும் நிகழ்வதுண்டு. ஆனால் பிறப்பிலே இருந்தால் பெரும்பாலும் இரு கண்களும் பாதிப்படையலாம். பிற்காலத்தில் இந்நிலை ஏற்படின் அதாவது கபால நரம்புகள் பாதிப்பதினால் ஒரு கண் திறந்து மறுகண் மூடியும் காணப்படும். சிலருக்கு மேல் 'இமை வாதம்' ஏற்பட்டு கண்கள் மூடிக்காணப்படலாம். அதாவது மூன்றாவது கபால நரம்பு பாதிப்பதினால் இந்நிலை ஏற்படும். அத்துடன் பால்வினையால் ஏற்பட்ட பாதிப்பாலும் வரும். கபால நரம்புகளின் பாதிப்பு அல்லது சில வைரஸ் கிருமி களினாலும் ஏற்படும். கபாலம் அடிபடுவதினாலும் இந்நிலை ஏற்படவழியுண்டு.

இரத்த அழுத்தம் காரணமாகவும் கண் அழுத்தம் கூடும். நீரிழிவு நோயினால் துன்பமடைவோர் மற்றும் உடலில் வேண்டிய நீர் இல்லாதவர்களுக்கும் கண் அழுத்தம் காணப்படும். எனவே கண் அழுத்தத்தை 'கிளாக்கோமா' Glaucoma எனக் கூறுவர்.

**வைத்திய கலாநிதி**
**கே.ரி. கோபால்**



D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 416.939.2013

தொடர்ச்சி 29ஆம் பக்கம்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் - இலவச ஆலோசனை வழங்கப்படும்

**தீராத நோயினால் பீடிக்கப்பட்டுள்ளீர்களா?**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் சர்மத்தின் வெளிப்புறத்தே ஏற்பட்டிருக்கும் மாறாத நாள்பட்ட புண்களுக்கும், சொறியினால் ஏற்பட்டிருக்கும் காயங்களுக்கும் விபத்தினால் ஏற்பட்ட அடிகாய நோவிற்கும் ஏற்ற அனுபவ ரீதியாக கையாண்ட எண்ணையினால் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர தகுந்த அன்ன ஆகாரங்களினாலும் நோய்கள் நிவர்த்தி பெற வழியுண்டு.

இலவச ஆலோசனைகளுக்கு:**416.939.2013**

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**
D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada)
Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician
LG.Ayurvedic Medical Services (SriLanka)

# விமான பிரயாணத்தின் போது ஏற்படும் பாதிப்புகள் & இழப்புகளை தீர்த்து வைக்கும் கனடிய நிறுவனம

## கனடிய தகவல் தொடர் 106

## Air Travel Complaints Directorate

கனடாவில் வசிக்கும் ஒருவர் கனடாவிற்கு உள்ளேயோ அல்லது கனடாவிலிருந்து ஏனைய நாடுகளுக்கோ, விமானத்தில் பிரயாணம் செய்யும் போது பல்வேறு வகையான பாதிப்புகள், சில நேரங்களில் இழப்புகள், அசௌகரியங்கள் என பலவற்றினை எதிர்கொள்ள வேண்டிய நிலைமைகள் பிரயாணிகளுக்கு உருவாகலாம் என்ற காரணத்தினால், இத்தகைய பிரயாணிகளின் பிரச்சினைகள், முறைப்பாடுகளை எதுவித செலவுகளும் இல்லாது நடு நிலைமையோடு இரு பக்கமும் தகவல்களை பெற்று விசாரித்து தீர்த்து வைக்கும் நிறுவனம் ஒன்று கனடிய மத்திய போக்குவரத்து அமைச்சின் கீழ் இயங்கி வருகின்றது என்பதனை அறிந்து கொண்டீர்களா?

இந்நிறுவனத்தின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் இதுவேயாகும்.

*Canadian Transporatation Agency*
*Air Travel Complaints Directorate*
*Ottawa*
*Ontario K1A 0N9*

தொலைபேசி: 1.888.222.2592
தொலைநகல்: 819.997.6727
மின்அஞ்சல்: Info@otc.ga.ca
இணையதளம்: www.cta.gc.ca

ஒரு சம்பவம் நடந்து இரு வருடங்களுக்குள், முழுமையான தகவல்களுடன் (தகவல்களுக்கு உதாரணம்: விமான ரிக்கற்றின் பிரதி, ரிக்கற்றுக்கு பணம் செலுத்திய ரிசீற்றுகள், விமான கம்பனியிடமிருந்து வந்த கடிதங்கள் போன்றவையினை குறிப்பிடலாம்.)

எழுத்து மூலமான தங்கள் முறைப்பாடுகள், பிரச்சினைகளை தபால் மூலமோ அல்லது தொலைநகல் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

'முறைப்பாட்டு விண்ணப்ப படிவம்' (Air Travel Complaint Form) விரும்பினால் இந்நிறுவனத்தின் இணைய தளத்திலிருந்து பதிவு இறக்கம் செய்து பெற்று கொள்ளலாம். முறைப்பாடுகளை இந்நிறுவனத்தின் கையில் வழங்கி விட்டு அமைதியாக இருந்து விட்டால் போதும். மேலதிக தகவல்கள் விசாரணைக்கு தேவையென்றால் அவர்களே தங்களுடன் தொடர்பு கொண்டு பெற்று கொள்வார்கள். தாங்களும் புலன்விசாரணை எந்த அளவில் உள்ளது என்பதனை தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம். இந்நிறுவனத்தின் நியாய ஆதிக்க எல்லைக்குள் நின்று கொண்டு, குறிப்பிடப்பட்ட வரையறைக்குள் உட்பட்ட பிரச்சினைகள், முறைப்பாடுகளில் தங்கள் பக்கம் நிஜமான நியாயம் இருந்தால் இந்நியாயத்திற்குரிய தீர்வு தேடி வரும் என்பதில் சந்தேகமேயில்லை.

ஆனால் இந்நிறுவனம் விமான பயணத்தில் ஒருவருக்கு ஏற்படும் பின்வரும் வரையறைக்குள் மட்டும் உருவாகும் பிரச்சினைகளை மட்டுமே கையாள்வார்கள். உதாரணத்திற்கு பின்வரும் பிரச்சினைகளைக் குறிப்பிடால்

**1. பொதிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் *(Baggage & Cargo)***



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

விமானத்தில் அனுப்பப்பட்ட பொதிகள் சில நேரங்களில் தொலைந்து இருக்கலாம். அல்லது விமானத்துடன் சேர்ந்து வர தவறியிருக்கலாம். இந்த நிலை பிரயாணி ஒருவருக்கு ஏற்பட்டு அதற்கு விமான கம்பனி விமான நிலையத்தில் வைத்து எதுவிதமான தீர்வும் வைக்கவில்லையானால் இந் நிறுவனத்திற்கு பிரச்சினையினை முன் எடுக்கும் போது அதனை ஏதோ ஒரு வழியில் தீர்த்து வைக்க முயல்வார்கள்.

**2. விமான தடங்கல்கள் *(Flight Disruptions)***

விமான பிரயாணத்தில் புறப்படும் நேரம், வந்து சேரும் நேரம் என குறிப்பிட்டு இருந்தாலும் இதற்கு உத்தரவாதமோ அல்லது பாதிக்கப்பட்டவருக்கு நட்டஈடு வழங்கும் பொறுப்புகளையோ விமான கம்பனி என்றும் ஏற்பதில்லை. இதேபோல் 'தொடுத்து வைக்கும் பிரயாண விமானங்களின் தவறுகள்' (Missed Connection) ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு நட்டஈடு வழங்குவதனையும் விமான கம்பனிகள் பொறுப்பு ஏற்பதில்லை.

இந்த நிலை ஒன்று ஏற்படும் போது பிரயாணி ஒருவரின் இன்னொரு வேலை ஒன்றில் பாதிப்பு ஏற்படுமாயின் ஏற்பட்ட பாதிப்புகளை ஆதாரங்களுடன் இந்நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கும் போது ஏதோ ஒரு தொகை நட்டஈடு பாதிப்புகளின் அடிப்படையில் விமானக்கம்பனியில் இருந்து ஏதோ ஒருவகையில் பெற்று தர முயற்சிப்பார்கள்.

**3. ரிக்கற் & ரிசேர்வேர்சன் *(Ticket & Reservation)***

கையில் ரிக்கற் இருக்கும். இவ் ரிக்கற்றில் பிரயாணம் செய்யவும் நேரம் உட்பட எந்த வகுப்பில் பிரயாணம் செய்கின்றார் என்பதும் ஒதுக்கப்பட்டு இருக்கும். ஆனால் மூல பதிவில் இவை இல்லாததால் அல்லது ஏதாவது தவறு ஏற்பட்டால் விமான பிரயாணம் செய்ய முடியாமல் போயிருக்க வேண்டிய நிலைமை ஏற்படலாம்.

இத்தகைய பிரச்சினைகளை எதிர்கொண்டவர்களும் இந் நிறுவனத்திற்கு முறைப்பாடு செய்யலாம்.

**4. தேவையற்ற முறையில் விமான நிலையத்தில் கட்டணம் அறவிட்டிருந்தால்**

சிலநேரங்களில் எதிர்பாராத விதமாக தேவையற்ற முறையில் கட்டணம் அறவிட்டிருந்தால் அதனை மீள்பெறுவதற்கும் முறைப்பாடு செய்யலாம்.

**5. விமானம் ஏறுவதற்கு அனுமதி மறுத்தல் *(Denied Boarding)***

உதாரணமாக 800 ஆசனங்கள் உள்ள விமானத்தில் இரண்டு பேருக்கு மேலதிகமாக ரிக்கற்றினை வழங்கி விட்டார்கள் என வைத்துகொள்வோம். பிரயாணம் செய்ய வந்தவர்கள் 802 பேர். ஆனால் விமானத்தில் உள்ள ஆசனங்கள் 800 மட்டுமே. மிகுதி இரண்டு பேருக்கு அதே விமானத்தில் இடம் கிடைக்கவில்லை. இந்த நிலையில் பாதிக்கப்பட்ட இவ் இருவரும் இந்நிறுவனத்திற்கு முறைப்பாடு செய்யலாம்.

எல்லா வகையான முறைப்பாடுகளையும் கனடிய மத்திய அரசின் இக்குறிப்பிட்ட நிறுவனம் ஏற்று கொள்ளாதது. சிலகுறிப்பிட்ட தங்களின் சட்ட வரையறைக்கு உட்பட்ட முறைப்பாடுகளை மட்டுமே தீர்த்து வைப்பதற்காக ஏற்றுக்கொள்ளும். உதாரணமாக விமான ரிக்கற் விற்பனை முகவர் அலுவலகத்திற்கு எதிரான புகார்களை இங்கு குறிப்பிடலாம். இத்தகைய நிலையில் உள்ள பிரச்சினைகளுக்கு உதாரணமாக ஒன்ராரியோ மாகாணத்தில் உள்ளவர்கள் அணுக வேண்டிய நிறுவனம் இதுவேயாகும்.

*Travel Industry Council of Ontario*
*2700, Matheson Blvd East*
*Suite #402, West Tower*
*Mississauga, Ontario L4W 4V9*

தொலைபேசி - 905.624.6241 அல்லது 1.888.451.8426
இணையதளம் - www.tico.on.ca

மாகாண அரசுகளின் கண்காணிப்பின் கீழ் கனடாவின் சகல மாகாணங்களிலும் இந் நிறுவனம் செயல்படுகின்றது.



MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# மீள உயிர்ப்பித்தல்

**1. மீள உயிர்ப்பித்தல் என்றால் என்ன?**

இருதய வியாதியாலோ, அதிர்ச்சியாலோ அல்லது வேறு ஏதாவது காரணத்தாலோ மூச்சடங்கி, இருதயத்துடிப்பு நின்ற தறுவாயில் அருகில் நிற்கும் ஒருவரால் மீளவும் அவரை உயிர்ப்பிக்கும் செய்முறை இதுவாகும்.

**2. மூச்சடங்கி, இதயத்துடிப்பு நின்ற ஒருவர் இறந்தவராகக் கணிக்கப்படுவாரா?**

ஆம், இதை சிகிச்சை நிலை இறப்பு (Clinical death) என்று கூறுவர். இதில் நேரம் பிரதானமானது. ஏனெனில் எமது மூளை பிராணவாயு இன்றி 4 நிமிடம் தான் உயிர்வாழும். அதன் பின்பு 4 நிமிடத்தில் இருந்து 8 நிமிடம் வரை படிப்படியாக தனது நரம்புக்கலங்களை இழந்து 8 நிமிடத்தின் பின்பு முற்றாக இறந்து விடும்.

**3. அருகில் நிற்பவரால் தான் அவரை உயிர்ப்பிக்க முடியும் என்பதன் அர்த்தம் என்ன?**

நேரம் பிரதானமானது, நான்கு நிமிடங்களில் இதயத்தை மீளத் தொழிற்படுத்துவது அவசியம். இதயம் நின்று விட்டபொழுது அவ் இதயத்தை நெஞ்சறை மீது கை வைத்து அழுத்துவதன் மூலம் இதய அறைகள் நான்கும் அழுத்தப்படுகின்றன. அப்பொழுது அந்த இருதய அறைகளில் இருக்கும் இரத்தம் மூளைக்குப் பாய்ச்சப்படுகின்றது. இப்படியாகக் குருதியை மூளைக்கு செலுத்தும்பொழுது மூளைக்கலங்கள் இறக்காது பாதுகாக்கப்படு கின்றன. அருகில் இருப்பவரால்தான் இதனை செய்யமுடியும்

**3. நெஞ்சறை மீது எவ்விடத்தில் அழுத்துதல் வேண்டும்?**

மார்புப்பட்டை எலும்பின் மீது ஓரளவு நடுக்கொள்ள எமது உள்ளங்கையின் குதிப் பகுதியை வைத்து அழுத்துதல் வேண்டும். சரியான பயிற்சியை ஒரு முதலுதவி பயிற்றுனரிடம் பயின்றபின்பு செய்வது மிகவும் அவசியம். சரியான முறையில் நெஞ்சறை மீது எங்கு, எப்படிக் கையை வைத்து அழுத்த வேண்டும் என்பதை அவர் செய்முறை பயிற்சியின்போது பயிற்றுவிப்பார்.

**4. மூச்சுவிடாத ஒருவருக்கு சுவாசம் எப்படிக் கொடுப்பது?**

அவரது வாய் மீது எமது வாயை வைத்து எமது சுவாசக்காற்றை அவரது வாய்க்குள் ஊதுதல் வேண்டும். ஊதப்படும் காற்று அவரது மூக்கினால் வெளியேறாதவாறு மூக்குத்துவாரங்களை பொத்துதல் வேண்டும். அப்பொழுது தான் அவரது சுவாசப்பைக்குள் நாம் ஊதும் காற்று உட்செல்லும்.

**5. ஊதும் பொழுது காற்று உட்புகா விட்டால் அதன் காரணம் என்ன?**

சடுதியாக இறந்த அல்லது மயக்க நிலையில் உள்ள ஒருவரது நாக்கு சுருண்டு தொண்டையை அடைத்து இருக்கும். அப்பொழுது அவரது தலையைச் சரித்து நாடியை உயர்த்துவதன் மூலம் அந்த அடைப்பை எடுத்து சுவாச வழியைச் சீர் செய்யலாம். சிலர் பல்லுக்கட்டியிருந்தால்



## நலந்தானா! - 4

**Dr. K. Senthilnathan**
Health Educator
(Certified First and CPR Instructor)
***To learn and receive certificates on First aid and CPR courses. Pl. call 416-502-9252***

அதுவும் தொண்டையில் சிக்கி இருக்கலாம். அதை விரல்களால் எடுத்து விடலாம். முதலுதவிப் பயிற்சியின் பொழுது இம்முறைகள் எல்லாம் செய்முறைப்பயிற்சியாகக் கற்பிக்கப்படுகின்றன.

**6. சுவாசம் எத்தனை தடவை கொடுத்தல் வேண்டும்?**

உடனேயே உயிர்காக்கும் சுவாசம் என இரண்டு தடவைகள் வாய் மீது வாய் வைத்துச் சுவாசம் கொடுக்கப்படும்.

**7. அதன்பின்பு என்ன செய்வார்கள்?**

இதயம் துடிக்காத விடத்து அதனை அழுத்துவதன் மூலம் இதயத்தை இயக்குவார்கள். ஒரு முறைக்கு 30 தரம் இதயத்தை அழுத்துவார்கள்.

**8. ஒரு முறை சுவாசமும், ஒருமுறை இதய அழுத்தமும் கொடுத்தால் போதுமா?**

இல்லை. இங்கு ஒருமுறை சுவாசம் என்பது 2 தரம் அடுத்தடுத்து வாய்க்குவாய் வைத்து ஊதுவாதைக்குறிக்கும். அதுபோல் ஒருமுறை இதய அழுத்தம் என்பது 30 தரம் அடுத்தடுத்து இதயவறையை அழுத்துவதாகும். அதாவது 2 தரம் சுவாசமும், 30 தரம் இதய அழுத்தமும் செய்வதை ஒரு வட்டம் எனலாம். இப்படியாக 5 வட்டங்கள் செய்வதை ஒரு சுற்று என்பர்.

**9. நாம் சுவாசிக்கும் காற்றை இன்னுமொருவருக்கு கொடுக்குபொழுது அதில் பிராணவாயு இருக்குமா?**

வளிமண்டலத்தில் 21 வீதம் பிராணவாயு உண்டு. நாம் சுவாசிக்கும்போது 5 வீதமான பிராணவாயுவை எமது உடல் பாவிக்கும். மிகுதியான 16 வீதமான பிராணவாயு வெளிச்சுவாசத்தின்போது வெளியிடப்படும்.

**10. ஒரு சுற்று செய்வதற்கு 2 நிமிடம் பிடிக்கும். அதன் முக்கியத்துவம் என்ன?**

ஒவ்வொரு சுற்று செய்த பின்பும் அவருக்கு மூச்சும், இதயமும், மீள இயங்கத் தொடங்கி விட்டதா என்பதை அறிந்து கொள்வர். ஒவ்வொரு சுற்றிலும் அவரது இதயமும், சுவாசமும் தொழிற்பட ஆரம்பிக்கவில்லை என்றால் முதலுதவி கொடுப்பவர் சளைக்காமல் தொடர்ந்து 2வது, 3வது, 4வது என்று தொடர்ந்து கொடுத்தல் வேண்டும். ஆனால் ஒவ்வொரு சுற்றிலும் மூச்சும், இதயமும் தொழிற்பட ஆரம்பித்து விட்டனவா என்று சரிபார்த்துக் கொள்ளவேண்டும்.

**11. AED என்றால் என்ன?**

Automated External Defibrillator என்று கூறுவர். இருதய மின்சாரத்தைச் சீர் செய்யும் தானியங்கி இயந்திரம் ஆகும்.

**12. மூச்சும், இருதயத்துடிப்பு நின்ற ஒருவருக்கு இந்த AED இயந்திரத்தைப் பாவிக்கலாமா?**

AED இயந்திரம் பிராணாவாயுவைக் கொடுக்கமாட்டாது. இதனால் சுவாசமும், இருதய அழுத்தமும், கொடுத்த பின்பு தான் இவ் இயந்திரத்தைப் பாவித்தல் வேண்டும். நிலைமையைப் பொறுத்து இரண்டையும் மாறிமாறிச் செய்யலாம்.

**13. AED எங்கு உள்ளது?**

வைத்தியசாலைகளிலும், ஐம்புலன்ஸ் வண்டிகளிலும் காணப்படும். தற்சமயம் பெரிய, பெரிய கட்டிடத்தொகுதிகளில் இவை பொருத்தப்பட்டுள்ளன. அங்கு வேலை செய்பவர்களிற்கு எப்படி இதைப் பாவிப்பது என்று பயிற்சி கொடுத்துள்ளார்கள்.

**14. AED எப்படி இயங்குகிறது?**

எமது இதயத்தில் குடாச் சோனைக்கணு என்று கூறப்படும் சில விசேடித்த தானியங்கி கலங்கள் உண்டு. இதை மின்னாக்கற்கணு என்றும் கூறலாம். இதில் இருந்து 80 மில்லி வோல்ற் அளவு மின்சாரம் உற்பத்தியாகி எமது இருதயத்தை ஒவ்வொருதடவையும் சுருங்கிவிரிய வைக்கின்றது. அந்த மின்னாக்கற்கணுவில் இருந்து 72 தடவைகள் மின்சாரம் உற்பத்தியாகி 72 தடவைகள் இருதயத்தை இயக்குகின்றது. இம்மின்சாரம் இதயம் பூராகவும் ஒரு ஒழுங்கு முறையில் பரவுகின்றது. அதனால் இருதயம் ஒழுங்காக விரிந்து சுருங்குகின்றது.

AED மூலம் கொடுக்கப்படுவதும் மின்சாரம் தான். இம்மின்சாரம் இருதயத் தசைகளில் உள்ள மின்னாக்கற் கணுவைத் தூண்டி விடுகின்றது. அப்பொழுது இதயம் தொழிற்பட ஆரம்பிக்கின்றது.

**15. இப்படியாக முதலுதவியாலும், AED யாலும் எல்லாரையும் காப்பாற்ற முடியுமா?**

முதலுதவி தெரிந்தவர் அருகில் இருந்து AED இயந்திரமும் அருகில் இருந்தால் பலரைக் காப்பாற்ற முடியும். எல்லோரையும் என்று கூற முடியாது.

**16. ஏன் எல்லோரையும் காப்பாற்ற முடியாது?**

இதற்குப் பலகாரணங்கள் உண்டு. முதுமை, நாட்பட்ட நோய்கள், முற்றிய நோய்கள், வாழ்க்கை முறைகள், முதலுதவியாளர் உடன் அருகில் இல்லாமை, பாரிய குருதி ஓட்டத் தடைகள் என்று அடுக்கிச் செல்லலாம். எக்காரணங்கள் இருப்பினும் ஒரு உயிரைக் காப்பாற்றுவதற்கு வைத்திய சேவையில் உள்ளவர்கள் தங்களால் இயன்ற எல்லாப் பிரயத்தனங்களையும் பாவிப்பார்கள்.

**17. CPR என்று கூறுவது எதனை?**

Cardiopulmonary Resuscitation (CPR) என்பது. இருதயத்தையும், சுவாசத்தையும் மீளச் செயற்படுத்துதல் என்று பொருள்படும். மீளவுயிர்ப்பித்தல் என்பது இதன் மறுபெயராகும்.

**18. மீளவுயிர்ப்பித்தல் செய்முறை இருதய நோயாளிக்கு மாத்திரம் பாவிப்பதா?**

இல்லை. எந்த நோயாக இருந்தாலும் அதன் பொழுது இருதயமும் சுவாசமும் தொழிற்படாதவிடத்து அவற்றை மீளச் செயற்படுத்துதல் அவசியம். நீரில் மூழ்குதல், மின்சாரத்தாக்கு அதிர்ச்சி போன்ற பல உதாரணங்களை இங்கு கூறலாம்.



# பலமான அத்திவாரம்

## ஓடும் நீர் உறைவதில்லை

வாழ்வியலில், நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை எண்ணில் அடங்காதவை. ஒவ்வொருவரும் எவ்வளவு தூரம் கற்க வேண்டும் என்பதும் எவற்றைக் கற்றல் வேண்டும் என்பதும் அவரவரது வாழ்வியல் எதிர்பார்ப்புக்களையும் புரிந்துணர்வையும் அடிப்படையாகக் கொண்டது. ஒவ்வொருவரது எதிர்பார்ப்பும், வாழ்வியல் நோக்கமும் மற்றவர்களில் இருந்து வேறுபடுவதால் அவரவரது கற்றல் அளவும் வேறுபடுகின்றது. சில சந்தர்ப்பங்களில் இருவரது நோக்கம் ஒன்றாகக் காணப்படினும் அதன் அளவுப் பரிமாணம் வேறுபட்டதாக அமைவதை யும் காணலாம். எனவே கற்றல் என்பது எவ்வளவு என்பதை கற்பவரில் இருந்து கற்பிப்பவர்வரை வரையறை செய்ய முடியவில்லை. இங்கே கற்றல் எனக் குறிப்பிடப்படுவது வாழ்க்கைக் கல்வியேயன்றி ஏட்டுக்கல்வியல்ல.

நாம் ஒவ்வொருவரும் ஏதோ ஒருவகையான அடிப்படைகளை ஏற்றுக்கொண்டவர்களா கின்றோம். இந்த அடிப்படைகள் எம்மால் தரம்பிரித்துப்பார்ப்பதற்கான தகுதியைப் பெறுவதற்கு முன்னர் நாம் வாழ்ந்த சூழலில் தரப்பட்டவை மட்டுமல்ல எந்தவித எதிர்ப்பும் இன்றி எம்மால் முற்றுமுழுதாக ஏற்றுக் கொள்ளப்பட்டவையும் கூட. இவ்வாறு நாம் ஏற்றுக்கொண்டமைக்கு யார் காரணகர்த்தாக் கள் என்பதைச் சிறிது ஆழமாகப் பார்ப்போமாயின் பகுத்தறிவும், பிரித்தறிவும் என்ன என்பது பற்றிய கேள்வி ஞானம் கூடப் புரியாத காலப்பகுதியில் எம்மைப் பொறுப்பேற்று வழிப்படுத்தியவர்களும், வழிப்படுத்தியவை களுமாகும். அதாவது எமது ஆரம்ப காலப்பகுதியில் எண்ணங்களையும் நம்பிக்கை களையும் உருவாக்குவதற்குத் துணை புரிந்த சூழல் தான் எமது அடிப்படை-களை உறுதிப்படுத்தியுள்ளன. இந்தச் சூழல் என்பது நமது பெற்றோர்களில் இருந்து ஒவ்வொரு கணப்பொழுதும் எம்மீது செல்வாக்கைச் செலுத்திய உற்றார் உறவினர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள், தொலைக்காட்சி, வானொலி, புத்தகங்கள், பத்திரிகைகள் எனப்பல குறிப்பிடப்படக் கூடியவை. இவையனைத்தும் எவ்வாறான தகவல்களை வெளிப்படுத்தினவோ அவற்றை நாம் ஆரம்பகாலங்களில் முழு மனதுடன் ஏற்றுக்கொண்டுள்ளோம். இவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட விடயங்களில் எவை எவை மீண்டும் மீண்டும் எமது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டவையோ அவை நமது ஆழ்மனதில் உறுதியாகப் பதியப்பட்டுள்ளன. இவ்வாறு பதியப்பட்டுள்ள விடயங்களின் நகர்வாகவே நமது வாழ்க்கை முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

ஆரம்பகாலங்களில் நமது கற்கையானது எவற்றையெல்லாம் அறிந்து கொள்ள முடியுமோ அவற்றையெல்லாம் அறிவதற்கான வரைய-றையற்ற ஆர்வமாக நமக்கு இருந்தது.

> அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் வாரம் தோறும் திங்கட்கிழமைகளில் இரவு 9.30 மணிக்கு கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.
>
> *நன்றியுடன் KG Master*

கற்கப்படுகின்ற ஒவ்வொரு விடயமும் கவர்ச்சியாக இருந்தது. அவையனைத்தையும் காரணகாரிய வேறுபாடின்றி முழுமனதுடன் ஏற்றுக்கொள்ளப் பட்டது. அவ்வாறு ஏற்றுக் கொள்ளப்பட்டவை எதிர்காலத்திற் கானவையா அல்லவா என்பது கூடப் புரியாத நிலையில் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆனால் எமது வாழ்வியல் நகர்வின் போது நாம் எதிர்நோக்கும் விடயங்கள் ஏதோ ஒருவகையான உள்ளுணர்வுத் தாக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் நமது எண்ணங்களையும் நம்பிக்கைகளையும் உருவாக்குகின்றன. இந்த உணர்வுகள் ஏற்கனவே நமது ஆழ்மனதில் பதிந்துள்ள விடயங்களுடன் தொடர்புபடுத்தப்படுவதால் அவற்றுக்கேற்றவாறு நமது இயல்புகளை அமைத்து விடுகின்றன. இவை அவற்றின் தன்மைக்கேற்ப நேர்த்தியானவை யாகவோ அல்லது எதிர்மறையானவையாகவோ அமைந்து விடுகின்றன.

**KG Master-*kgmaster@rogers.com***

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நமது எண்ணங்களும் நம்பிக்கைகளும் நமது பெற்றோர்களுக்கே வியப்பைத் தரக்கூடிய வகையில் அமைந்து விடுகின்றன. எமது பிள்ளை இப்படியிருப்பான் என்று கனவிலும் நினைக்க வில்லை என்று கதறுகின்ற பெற்றோர் பலர். எமது பிள்ளை எதிர்பாராத அளவிற்கு பெருமையைத் தனக்கும் பெற்றோருக்கும் உருவாக்கிக் கொண்டிருக்கின்றான் எனப் பூரிப்படையும் பெற்றோர்கள் சிலர். இவ்வாறு நாம் ஒவ்வொருவரும் ஏதோ ஒருவகையில் நமது பெற்றோர்களை ஆச்சரியத்துக்குள்ளாக்கு பவர்களாக இருக்கின்றோம். இந்த இரண்டு வகையான ஆச்சரியத்திற்கான காரணங்களை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இந்த ஆய்வின் மூலம் வெளிப்படுத்தப்படுபவை நமது பிள்ளைகள் எந்த வகையான ஆச்சரியத்தைத் தரவுள்ளார்கள் என்பதை முன்கூட்டியே புரிந்து கொள்வதற்கு வழிவகுக்கும். இதன் மூலம் நாமும் எம்மை மிகவும் தயார்படுத்தி அந்த ஆச்சரியத்தின் தாக்கத்தால் அளவுக்கதிகமாக உணர்ச்சி வசப்படுவதையும் தவிர்த்துக் கொள்ளலாம். ஒவ்வொரு பெற்றோரினதும் வாழ்வியல் எதிர்பார்ப்புக்களில் மிக முக்கியமான இடத்தைப் பெறுவது அவர்களது குழந்தைகளின் எதிர்காலம் பற்றியதே. குழந்தை பிறந்தது முதல் அதன் எதிர்காலம் பற்றிய சிந்தனைகளே முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இந்த எதிர்கால எதிர்பார்ப்புக்களின் ஆரம்பம் ஒரு குழந்தையின் உடலியல் ரீதியிலாக அமைகின்றது. குழந்தையானது தனது புரிந்து கொள்ளும் தன்மையை வார்த்தைகளால் அல்லது உடற்பாசையால் வெளிப்படுத்த முடியாத காலப்பகுதிகளில் பெற்றோர்களின் முயற்சியில் பெரும்பங்கு அதன் உடல்வளர்ச்சி யுடன் தொடர்புபடுகின்றது. ஒரு குழந்தைக்கு உணவூட்டும் நேரம், உறக்கத்திற்கான நேரம் என்பன ஒழுங்குபடுத்தப்பட்டு அவை நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இவை கூட அக்குழந்தையானது உடல்நலம் மிக்கதாக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பேயாகும்.

குழந்தைகளின் மீது அவர்களது ஆரம்ப காலங்களில் உடல்வளர்ச்சியில் கவனம் செலுத்தும் அளவுக்கு அவர்களது உளவளர்ச்சி யில் நாம் கவனம் செலுத்துவதில்லை. இது பெரும்பாலும் அதன் முக்கியத்துவம் தொடர்பான விளக்கமின்மையால் இடம்பெறுகின்து.குழந்தை சிறிதாக இருக்கும்போது, அதனது உணர்வு களையும், எண்ணங்களையும் வெளிப்படுத்தக் கூடிய நிலையை அடையும்வரை உளவியல் சார்ந்த எந்த விடயத்தையும் அக் குழந்தை கற்றுக்கொள்ளாது என்ற தவறான அல்லது தவறவிடப்படுகின்ற நிலைமை பெற்றோர்களிடம் காணப்படுகின்றது. ஆனால் குழந்தைகள் பிறந்த கணப்பொழுது முதல் அவர்களது கற்றல் இயல்பும் ஆரம்பமாகின்றது என்பதை நாம் நினைவில் நிறுத்திக் கொள்ளல் வேண்டும்.

குழந்தைகள் படிப்படியாக வளர்ந்து வருகின்றபோது அவர்களது எதிர்காலம் பற்றிய நமது எதிர்பார்ப்புக்களும் வேகமடைகின்றன. ஒவ்வொரு வருடமும் நகர்ந்து செல்லும் போது அவர்கள் எதிர்காலத்தை எப்படிப்பட்டது எனத் தீர்மானத்தில் ஒரு வேகத்தையும், பல்வேறுபட்ட நடைமுறைகளையும் முன்னெடுத்துகின்றோம். இந்த வேகமும் நடைமுறைகளும் பெரும் பாலான சந்தர்ப்பங்களில் பெரும்பாலான பெற்றோர்களால் தவறாகப் பயன்படுத்தப்படுவ-தால் ஒப்பீட்டு ரீதியில், மிகக்குறைந்த அளவிலான குழந்தைகளே எதிர்காலத்தை தமக்குச் சொந்தமாக்கக் கூடியவர்களாக உருவாக்கப்படுகின்றார்கள். உண்மையில் சூழல்களே நமது எண்ணங்களையும் நம்பிக்கை களையும் உருவாக்குகின்றன என்பதால் இந்தச் சூழலின் அமைப்பு முறை ஒன்று வடிவமைப்பதில் மிகச் சில பெற்றோர்களே வெற்றியடைகின்றனர். இதற்கான காரணத்தைச் சிறிது ஆழமாகப் பார்ப்போம்.

பெரும்பாலான பெற்றோர்கள் மேற்கொள்ளும் மிகவும் மோசமான தவறு என்னவெனில் தமது குழந்தைகளுக்கான ஒரு எதிர்காலத்தை கட்டியெழுப்ப முயற்சிப்பதுதான். இந்த முயற்சியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி இரவும் பகலுமாக ஓடி ஓடி ஒழுங்கான ஊனுமின்றி உறக்கமுமின்றி அவதிப்படுகிறார்கள். ஒருவகையில் மாடாக உழைத்து ஓடாகத் தேய்ந்து விடுகிறார்கள். குழந்தைகளுக்கான எதிர்காலம் ஒன்றைக் கட்டியெழுப்புவதன் மூலம் ஒரு கற்பனையான உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். வாயையும் வயிற்றை யும் கட்டி வங்கியிலே வைப்புப்பணம், உயர்கல்விக்கான முதலீடு சொத்துக்கள், அவை இவை எனப்பல விடயங்களைக் உருவாக்குவதில் அல்லும் பகலுமாய் ஈடுபடுகிறார்கள். இங்கே ஒரு அடிப்படை உண்மையை இவர்கள் புரிந்து கொள்ளத் தவறுவதாலேயே இவ்வாறான விடயங்களில் தம்மை முழுமையாக உட்படுத்தி அவதிப்படுகிறார்கள். இங்கே ஒரு முக்கியமான விடயத்தை வாசகர்கள் அறிந்து கொள்ளல் வேண்டும். குழந்தைகளின் எதிர்காலத்திற்காகப் பொருளாதார ரீதியான விடயங்களைக் கட்டியெழுப்புவது தவறு என்று நான் கூறவில்லை. ஆனால் குழந்தைகளின் வளர்ச்சிக் காலங்களில் பொருளாதார ரீதியான காரணிகளில் அதிக கவனத்தையும் முயற்சியையும் மேற்கொள்வது தான் தவறு என்கிறேன். ஏனெனில் குழந்தைகளுக்கான, எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் பெற்றோர்களில் அதில் பெரும்பான்மையான பெற்றோர்கள் ஏமாற்றப் பட்டு விடுகிறார்கள் அல்லது அவர்களது எதிர்பார்ப்புக்கள் முற்றாக நிராகரிக்கப்பட்டு விடுகின்றன. இன்னொரு வகையில் கூறுவதா யின் பெற்றோர்கள் முற்றுமுழுதாகத் தோல்வி யடைந்து விடுகின்றார்கள். அதுமட்டுமல்ல அவர்கள் குழந்தைகளும் முற்றுமுழுதாகத் தோல்வியடைந்து விடுகிறார்கள். ஏனெனில் குழந்தைகளுக்கு ஒரு எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவது என்பது முற்றிலும் ஒரு பலமற்ற அத்திவாரமாகும்.

இப்போது குழந்தைகளுக்கான ஒரு பலமாக அத்திவாரத்தை அதாவது உறுதியான எதிர் காலத்தை எவ்வாறு உருவாக்கலாம் என்பதைப் பார்ப்போம். எதிர்காலம் என்பது எதிர்வுகூறல் மூலம் அல்லது ஒரு ஊகத்தின் அடிப்படையில் கணிப்பிடப்படுவது. நமது எதிர்பார்ப்புக்கள் ஒரு கற்பனை அடிப்படையில் முன்வைக்கப்படுவது எந்தவிதமான உறுதிப்பாடும் உத்தரவாதமும் இன்றிக் காணப்படுவது. இதனால்தான் பௌதீக, பொருளாதார அடிப்படையிலானவற்றின் வெளிப்பாடுகள் ஒரு அனுமானத்தின் அடிப்படை யிலேயே மேற்கொள்ளப்படல் வேண்டியவை. ஆனால் குழந்தைகளின் எதிர்காலமானது ஒரு அனுமானத்தின் அடிப்படையில் அமையக் கூடாதவை. ஒரு உறுதியான, திட்டவட்டமான எதிர்காலம் அவர்களுக்குச் சொந்தமாக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது. இதற்குப் பெற்றோர்களின் பங்கு முதன்மையானதாகும். இதற்குப் பலமான அத்திவாரம் ஒன்று அவர்களுக்கு அவசியமாகின்றது.

**ஆம் வாசகர்களே!**

உறுதியானதும், திட்டவட்டமானதும் சிறப்பானது-மான எதிர்காலம் என்பது ஒவ்வொரு குழந்தை களுக்கும் சொந்தமானது. இந்த எதிர்காலத்தை தமக்கு சொந்தமாக்குவதற்கான அத்தனை தகுதிகளும் குழந்தைகளுக்கு உண்டு. குழந்தைகள் இந்தத் தகுதியை பெறுவதற்குப் பெற்றோர்கள் செய்யவேண்டியது ஒன்றே யொன்றுதான். அதாவது குழந்தைகளுக்கான எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக குழந்தைகளை எதிர்காலத்திற்காகக் கட்டி யெழுப்புங்கள். நேர்மை, நெஞ்சுத்துணிவு, தன்னம்பிக்கை என்பவற்றில் உங்கள் குழந்தை களைக் கட்டியெழுப்புங்கள். இவையே குழந்தைகள் மீதான உங்கள் முதலீடு களாகட்டும். ஏனெனில் இவையே ஒரு பலமான அத்திவாரத்திற்கான அடிப்படைகளாகும். அதுமட்டுமன்றி நேர்மை, நெஞ்சுத்துணிவு, தன்னம்பிக்கை என்பவற்றின் சொந்தக்காரர் களுக்கு மட்டுமே எதிர்காலமும் சொந்தமானதாகும்.


**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

**1-877-707-3223 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**

**மஹராஜியின் உரைகள்**

**On DVD**

இலவச DVDக்கு அழையுங்கள்

(416) 431-5000

1 877 707 3223

**On TV**

Saturdays at 10:30 am

Rogers Cable Channel - 20

Bell Express vu Channel - 219



# பதமலர் பரவும் அடியாரை இதமுடன் காக்கும் நல்லூர் கந்தன்




கலியுகத்தின் கண்கண்ட கடவுளாக விளங்கும் கந்தப் பெருமான் கலியுகவரதன் எனப்படுகின்றான். குறிஞ்சி நிலக்கடவுள் ஆனதால் குறிஞ்சிக்கிழவன், மலைக்கிழவன் எனவும் அழைக்கப்படுகின்றான். ஆறு குழந்தைகளும் அம்மையால் ஒன்றிணைக்கப் பட்டமையினாலும், வாசனை உடையவன் ஆனமையாலும், கந்தன் எனவும், அக்கினியின் கரத்தால் ஏந்தப்பட்டமையினால் அக்கினிப்பூ எனவும், கங்கையில் வளர்ந்தமையினால் காங்கேயன் எனவும், சரவணப்பொய்கையில் தோன்றியமையால் சரவணபவன் எனவும், கார்த்திகைப் பெண்களிடம் பால் உண்டமையினால் கார்த்திகேயன் எனவும் கடம்ப மாலை அணிபவன் ஆனமையால் கடம்பன் எனவும், விசாக நட்சத்திரக்குரியவன் ஆனமையால் விசாகன் எனவும், ஆறுமுகங்கள் உடையவன் ஆனமையால் ஆறுமுகன் எனவும் அடியார் மனத்தில் உறைபவன் ஆனமையால் குகன் எனவும், இனிமையான நலனை விரும்பி அதனை அடியவர்க்கு அருள்கின்றமையால் சுப்பிரமணியன் எனவும், குழந்தைச் சாமி ஆனமையால் உமைபாலன் எனவும் தேவரைக் காத்தமையால் தேவ சேனாதிபதி எனவும் முருகனை பல்வேறு பெயர் கொண்டு அழைப்பர். மேலும் சிவகுரு, தகப்பன் சாமி, ஞானகுரு, வேலன், கதிரேசன் என்ற பெயர்களும் முருகனுக்கு உண்டு. சிவம் - சக்தி ஆகிய இரண்டும் ஒன்றுபடும் நிலையே சுப்பிரமணியம் என்று சொல்லப்படும்.

முருகு என்றால்ல அழகு, இளமை, இனிமை, மணம், தெய்வத்தன்மை எனப்பொருள்படும். அவன் அழகன் - குழகன். அழகினை அனைத்து மக்களும் ஆராதனை செய்வதனால் தான் முருகனை வழிபடும் அடியவர் தொகை அதிகமாக உள்ளது. மெய்தான் அரும்பி, விதிர்விதித்து, கைதான் தலைவைத்து கண்ணீர் ததும்பி, உள்ளம் வெதும்பி, பள்ளம் நோக்கிப்பாயும் வெள்ளம்போல முந்தியடித்துக் கொண்டு முருகனின் அருகணைந்து அடியவர் பரவுவர். வைதாரையும் வாழவைப்பவன் என்பது அவனது விசேட தன்மை.

இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என்ற இம்மூன்று சக்திகளும் முருகனிடம் அமைந்துள்ளன. வள்ளியம்மை - இச்சாசக்தி. கிரியாசக்தி - தெய்வயானை. ஞானசக்தி - வேல். வேலாயுதம் அம்மையால் அழகனுக்கு வழங்கப்பட்டதாகும். ஆணவத்தை அழித்து அளப்பிலா நன்மைகளை அருளவல்லது ஞான வேல்.

சூரன், சிங்கன், தாரகன் ஆகிய மும்மலங்களும் முருகனால் அடக்கப்பட்டன. அவை அழிக்கப்படவில்லை. தாரகன் யானையாகி ஐயனாருக்கு வாகனமானான். சிங்கன் சிங்கமாகி அம்பிகைக்கு வாகனமானான். சூரன் சேவலும் மயிலுமாகி முருகனுக்கு கொடியும், வாகனமும் ஆனான். ஆறுமுகங்கள், ஆறுகுணங்கள், ஆறுபடைவீடுகள் முருகனுக்கு அணி சேர்க்கின்றன. முருகனுடைய ஐந்து முகங்களும் சிவசொரூபமானவை. ஆறாவது முகம் சக்தி சொரூபமானது. திருப்பரங்குன்றம், திருச் செந்தூர், திருவாவினன்குடி, குன்றுதோன்றாடல், திருவேரகம், பழமுதிர்சோலை என்பன ஆறுபடை வீடுகளாகும். முற்றறிவுடமை, வரம்பிலின்ப முடமை, இயல்பாகவே பாசமின்மை, முடிவிலா ஆற்றலுடமை, பேரருளுடமை, தம்வயமுடைமை முருகனின் ஆறு குணங்களாகும். யுத்த கணத்தில் சூரனுக்கு காட்டப்பட்ட விஸ்வரூபம் என்னும் திருப்பெரும் வடிவம் முருகப்பெருமானும் சிவனும் ஒருவரே என்பதைக் காட்டுவதாகும். சிவனே அவன் ஆடலால் மதலையாயினன் என்பது இதனை உணர்த்தும்.

காவடி எடுத்தல் முருகனுக்குரிய விசேட வழிபாடாகும். கதிர்காமக்கந்தன் காவடிக்கந்தன் எனப்படுகின்றார். சிவகிரி, சக்திகிரி என்னும் மலைகளை காவடியாக எடுத்து வந்த இடும்பனை ஆட்கொண்டு அருள்புரிந்தவன் முருகனே. கா+அடி என்பதே காவடியாகும். சரண்புகுந்தோரை காக்கும் சேவடி என்பது அதன் பொருள். நமது பூவடி நோக தோளில் காவடி சுமந்து நாவால் பாவடி பாடி பக்தர்கள் கந்தனின் சேவடி பரவும் காட்சி கண் கொள்ளாக்காட்சியாகும். ஆடி அமாவாசைக்கு ஆறாம் நாள் நல்லூர் கந்தனுக்கு ஆண்டு மகோற்சவம் ஆரம்பமாகி இருபத்தைந்து நாட்கள் மிகவும் சிறப்பாக நடைபெறும். இக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்துக்கு சைவமக்கள் மனதில் பக்தி உணர்வு மேலோங்கி இருக்கும். முருகா, கந்தா, கடம்பா, கார்த்திகேயா, வேலவா என்றே பக்தர்களின் வாய் ஓயாது உரைக்கும். அதனை மணிவாசகர் வார்த்தையில் பின்வருமாறு கூறலாம்.

என்பு நைந்து உருகி நெக்கு நெக்கேங்கி
அன்பு என்னும் ஆறுகரையயது புரள
நன்புலன் ஒன்றி நாதவென்று அரற்றி
உரைதடுமாறி உரோமம் சிலிர்ப்ப
கரமலர் மொட்டித்'து' இருதயம் மலர
கண்களி கூர.

அப்போது உடல் சிலிர்க்கின்றது. வாய்ச் சொற்கள் தடுமாறுகின்றன. இருதயம் விரிந்து மலர்கின்றது. கண்களில் ஆனந்தக்கண்ணீர் துளிர்க்கின்றது. ஒரு ஆனந்த பரவசநிலை ஏற்படுகின்றது. மனதைக் கட்டுப்படுத்தி ஒழுங்கு முறையுடன் அதனை செயற்படவைக்கும் ஒரு சாதனம் தெய்வ வழிச் சிந்தனைகளாகும். இறைவனிடம் மனம் ஒன்றி விடும்போது நமது உடல், உணர்வு சிந்தனை, செயல் அனைத்துமே ஒருமுனைப்பட்டு இறைவன் நினைவன்றி வேறில்லை என்ற ஒரு மோன நிலையை அடைகின்றது. அடியவரின் இந்த இன்ப அன்பு நிலையை யோகசுவாமிகள் பின்வருமாறு அருளியுள்ளார்.

ஆடுவர் பாடுவர் அந்தியும் சந்தியும்
கூடுவர் குணம்பல பேசிக் கும்பிடுவர்
தேடுவர் செய்வதொன்றிகிலர் திடமுடன்
நாடுவர் வாடுவர் நம்பர் தம் அடியரே.

நல்லூரானை நாளும் வலம் வந்து வணங்கினால் எல்லா நலனும் எய்தப் பெறலாம் என்பது யோக சுவாமிகள் அருள் வாக்கு. புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் தேவர் குலம் காத்த செல்வ நல்லூர் குமரன் வீதி வலம் வரும் காட்சியை அகக்கண்ணில் கண்டின்புற்று வாழ்வில் நலம்பல பெற்று வாழ்வோம்.

எல்லையில்லாப் பிணி தீர்க்கும் மருந்து
இம்மை மறுமைக்கும் ஏற்ற மருந்து
இல்லை என்னாது கொடுக்கும் மருந்து
ஏழையடியார்க்கு இரங்கும் மருந்து
நல்ல மருந்தொரு குருமருந்து
நல்லூரில் இருக்கின்றதை நாடிடு வீரே.



**நா. க. சிவராமலிங்கம்**

நிப்ளக்ஸ்
REFLEX
COPY & DIGITAL PRINTING
B/W & Color Copies
Color & B/W Prints - Booklets - Binding
Scanning - Color B.Card & Flyers
POSTERS & BANNERS
1109 Bay St., Toronto - Tel: 416-975-9674
அச்சுத் தொடர்பிற்கு JOE (416)558-8905
BAY & BLOOR (BAY SUBWAYக்கு அருகாமையில்)
OPEN 7 DAYS

APARTMENTS FOR RENT



In a NEWLY Renovated High-Rise Apartment Building
Clean, Utilities inclu. Free parking. Close to TTC, Tamil store in building, schools nearby

Pl. Call: 416.264.2818

# அச்சமுண்டு அச்சமுண்டு - திரைவிமர்சனம்

திரைக்கு வரும் முன்பே ஒரு எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்த படம். அதற்குள், அமெரிக்காவின் நியூஜெர்சியில் உள்ள 'கார்டன் ஸ்டேட் திரைப்பட விழா'வில் 'சிறந்த பொழுது போக்குப் படத்துக்கான விருதைப் பெற்றுவிட்டது. இயக்குநர் அருண் வைத்யநாதனும் தன் முந்தைய படங்களுக்காவும் ஏற்கெனவே பல சர்வதேச விருதுகளைப் பெற்றவர். மேலும், ஹாலிவுட் நடிகர்கள், ஹாலிவுட் ஒளிப்பதிவாளர், 'ரெட் ஒன்' கேமரா தொழில்நுட்பம்... என ஏகப்பட்ட எதிர்பார்ப்புகள். இந்த எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்திருக்கிறதா, 'அச்சமுண்டு அச்சமுண்டு'?



உலகம் முழுவதும் இருக்கும், பல ஆண்டுகளாக பேசப்பட்டு வரும் குழந்தைகள் மீதான பாலியல் மீறல்கள்தான் 'அச்சமுண்டு அச்சமுண்டு' படத்தின் கரு. தமிழ்நாட்டில், செய்தித்தாள்களில் அடிக்கடி வரும் அளவுக்கு நிலமை மோசமாக இருந்தும், இந்த விடயத்தை மையமாக வைத்து தமிழில் இதுவரை ஒரு திரைப்படம்கூட எடுக்கப்பட வில்லை. அந்தவகையில் இந்த முயற்சி வரவேற்க வேண்டியது. ஆனால், பொதுவாக ஊடகங்களில் ஒரு விடயம் கவனம் பெறுவது அதன் மீதான விழிப்புணர்வை அதிகப்படுத்துமா அல்லது இன்னும் அதுமாதிரி குற்றங்கள் அதிகம் நடக்க வழி வகுக்குமா என்னும் விவாதம் இருக்கிறது என்பதும் கவனத்துகுரியது.

முழுக்க அமெரிக்காவில் எடுக்கப்பட்டிருக்கும் படம். கதையும் முழுக்க அமெரிக்காவில்தான் நடக்கிறது. பிரசன்னாவும் சினேகாவும் அமெரிக்காவில் வேலை நிமித்தம் வாழும் தமிழ்த் தம்பதி. அவர்களுக்கு ரித்திகா எனும் அழகான ஆறு வயது பெண் குழந்தை இருக்கிறது. இவர்கள் அமெரிக்காவில் நியூஜெர்சியில தனியாக வசிக்கிறார்கள். பிரசன்னா, ஒரு கணினிப் பொறியாளர். அழகாகவும் அமைதியாகவும் ஒரு கவிதை போல் நகருகிறது இந்தச் சின்னக் குடும்பத்தின் வாழ்க்கை. அங்கு பெயிண்டராக வந்து வேலைக்குச் சேருகிறார், நடுத்தர வயதைத் தாண்டிய வெள்ளைக்காரர் ஜான் ஷேன். அவரது வயது, தோற்றம் மற்றும் பழக்கவழக்கம் ஆகியவற்றைக் கண்டு நம்பிக்கைகொள்ளும் பிரசன்னாவும் ஸ்னேகாவும் தங்கள் வீட்டு சாமி, ரகசிய குறி எண் போன்றவற்றை அவரிடம் தருகிறார்கள். அவர், இவர்கள் குடும்பத்துக்கு நம்பிக்கைக்குரிய நண்பராகிறார். இந்நிலையில் தங்களது வீட்டை யாரோ கண்காணிப்பது போலவும், மகளை யாரோ கடத்த முயல்வது போலவும் சினேகாவுக்கு தோன்றுகிறது. முதலில், தனிமையின் பயம் என அதை ஒதுக்கும் பிரசன்னா, ஒருநாள் முகமூடி அணிந்த ஒரு உருவத்தைப் பார்க்கிறார். சினேகாவின் பயம் அவரையும் தொற்றிக்கொள்கிறது.

அந்த மர்ம நபர் யார்? எதற்காக அவன் வீட்டை நோட்டம் போடுகிறான்? என தேடத் தொடங்குகிறார் பிரசன்னா. பிரசன்னா வீட்டுக்குப் பெயிண்ட் அடிக்க வந்தவர், சிறுமிகளைப் பாலி யல் பலாத்காரம் செய்யும் மனநலம் பிறழ்ந்தவர் என்பதைக் கண்டுபிடிக்கிறார். சிறுமி ரித்திகாவை கடத்த முயலும் அவரிடம் இருந்து பிரசன்னா - ஸ்னேகா தம்பதி குழந்தையை எப்படிக் காப்பாற்றுகிறார்கள் என்பதுதான் இறுதிக் காட்சி!

சின்ன, மெலிதான, அலட்டிக்கொள்ளாத கதை. குறைந்த கதாபாத்திரங்கள். ஒரு வீடு, அலுவலகம் இரண்டு இடங்களில் மட்டுமே நடக்கிற சம்பவங்கள். இயக்குநர் அருண் வைத்தியநாதனும் அமெரிக்காவில் கணினிப் பொ-றியாளராக வேலைப் பார்ப்பவர். தன் பணி அனுபவம் மற்றும் தான் பார்த்தும் அனுபவித்தும் தெரிந்துகொண்ட அமெரிக்க தமிழர்கள் வாழ்க்கை ஆகியவற்றின் உதவியுடன், ஆகக் கூடுமான வரைக்கும் யதார்த்தத்துடன் படத்தை எடுக்க முயற்சித்திருக்கிறார். நடிகர்கள் தேர்வு தொடங்கி, தொழில்நுட்பங்களை உறுத்தாமல் பயன்படுத்துவது வரைக்கும் எல்லாவற்றையும் நேர்த்தியாக செய்திருக்கிறார். தமிழ் திரைப்படம் என்றால் இரண்டரை மணி நேரம் என்ற நேர வரையறையையும் துணிச்சலாக உடைத்திருக்கி றார். ஒன்றரை மணி நேரம்தான் படம்.

பிரசன்னாவும் சினேகாவும் சிறந்த நடிப்பை வழங்கியிருக்கிறார்கள். வேலை நிமித்தமாக வெளிநாடுகளில் வாழும் தம்பதிகளை அழகாக பிரதிபலிக்கிறார்கள். இளம் மனைவியாக சினேகா கச்சிதமாக பொருந்துகிறார். இருவருக்கும் அந்நியோன்யம் என்றால் அவ்வளவு அந்நியோன்யம். காதல், கோபம், ஊடல்... என எல்லா உணர்ச்சிகளிலும் ஒரு இளம் தம்பதியாகவே வாழ்ந்திருக்கிறார்கள்.

பெயின்டராக வரும் ஹாலிவுட் இயக்குநர் ஜான் ஷா நல்ல தேர்வு. அத்தனை தத்ரூபமாக நடித்துள்ளார். தமிழ் நடிகர்கள் நிஜமாகவே இவரிடம் நிறைய கற்றுக்கொள்ள

தொடர்ச்சி 23ஆம் பக்கம்


ஸ்ரீ கங்கா பவானி ஜோதிடாலயம்
பண்டித் வெங்கட் நாராயன் குருஜி

5வது ஜோதிட பரம்பரைக்குரியவர் 35 வருட அனுபவம்







தென் இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ளார்.

❶ கைரேகை, ஜாதகம், முகநாடி, சாமுத்திரிகா லக்ஷணம், வாஸ்து சாஸ்திரம், ஆகியவற்றை மிக துல்லியமாக கணித்து வழங்குவார்.
❷ திருமண பொருத்தம் பார்க்கப்படும். திருமண தடங்கல் நீங்க, குடும்பத்தில் கணவன் மனைவி பிரச்சினைக்ள் தீர, குழந்தை பாக்கியம் பெற, வேலை, வியாபாரம் ஆகியவற்றில் ஏற்படும் தடைகள் நீங்க, மற்றும் எதிர்பாராத சரிவுகளுக்கும் பரிகாரங்கள் வழங்கப்படும்.
❸ செய்வினை, கண்திருஷ்டிகள், எதிரிகள் தொல்லைகள், வழக்குகள், கெட்ட தோஷங்களும் நீங்க விதிமுறைகளும் கூறப்படும்.

❶ Past, Present & Future of your life your life will be read over to you from your face reading.

❷ Palm & Horoscope reading, Prediction in love, marriage, family problems, money problems, children mistakes, education, business, sickness, promotion, lucky stones etc

❸ We provide protection for house, business, personal matters, from enemies & Jealousy. Removal of all types of black magic & evil things by performing Devi Upasana, Luxmi Pooja, Shanthi Pooja, Mandala Poojas (prayers)

Pandit. VENKATA NARAYAN GURUGI
93 Dundas St. E. Suite.#107 (Above Akshayas Fashion)
Missisaga, ON L5A 1W7 (Hwy10 & Dundas)

Tel: 647-995-4466
Spoken Languages : Tamil, English, Hindi,

7 Days a week 10.00 a.m to 9.00

# “நினைவுகள்: டி.கே. பட்டம்மாள் - 1919 - 2009

## தீராத விளையாட்டுப்பிள்ளை

கர்நாடக இசை உலகின் பெண் மும்மூர்த்திகளில் இறுதியாக நம்மிடையே வாழ்ந்து வந்த டி.கே.பட்டம்மாள், ஜூலை 16, 2009 அன்று காலமானார்.

- கடன் சுமை தாங்க முடியவில்லையா?
- உங்கள் Credit பழுதாகிவிடும் என்ற கவலையா?
- உங்கள் வீடு, வாகனம், குழந்தைகளின் கல்வி என்பன பறிபோய் விடும் என்று ஏக்கமா?
- கவலை வேண்டாம். ஒருமுறை எங்களை அழைத்து இலவச ஆலோசனை பெற்ற பின் உங்கள் முடிவை எடுங்கள்.



இதோ உங்களுக்கு உதவ சில சட்டரீதியான வழிவகைகள்

1. **Consumer Proposal:** உங்கள் Credit ஐயும் வீட்டையும் வாகனத்தையும் இதர சொத்துக்களையும் பாதுகாத்தபடியே உங்கள் கடனை சட்டரீதியாக 60% த்தால் குறைத்து மிகுதி 40% த்தை மட்டும் மாதாந்தம் மிகச்சிறு தொகையாக கட்ட வழிசெய்தல்.
2. **Debt Consolidation:** உங்கள் அனைத்து கடன்களையும் ஒரு கடனாக்கி மாதாந்தம் மிகச் சிறிய வட்டியுடன் சிறு தொகையாக கட்ட வழி செய்தல். இதன் மூலம் உங்கள் Credit ஐ பாதுகாத்த படியே பெரும்பாலான வட்டிப் பணத்தை நீங்கள் சேமிக்க முடியும்.
3. **Bankruptcy:** அனைத்துக் கடன்களிலிருந்தும் 100% சட்டரீதியாக விடுபட உதவுதல்.
4. **Line of Credit**

Call: பிரபு பொன்னம்பலம் - 416-822.2610
24 hrs. Hotline / Fax: 416-385-1804
நிதித்துறையில் பல வருட அனுபவம் கொண்டவர், தமிழர் மத்தியில் பிரபலமானவர்

# கூதிர்காலக் குலாவல்கள் _ குறுநாவல்

**சென்ற இதழ் தொடர்ச்சி**

## iii.

கூட்டம் முடிந்து மதிய போசனம் தொடங்குகிறது. தன் மேசையிலிருந்தபடியே தேவாவை உற்றுப் பார்த்தவண்ணம் இருக்கிறார் திலக். ஒரு சந்தர்ப்பத்தில் பார்வைகள் சந்திக்கின்றன. இவரது குறுகுறு பார்வையை அவரால் அறிந்து கொள்ள முடியவில்லை. ஏதோ சந்தேகம் போலும் அடிக்கடி பார்க்கிறார், முடியவில்லை. உணவு முடியும்போது தேவா அயலே இருந்தவரிடம் இவரைச் சுட்டி ஏதோ கேட்கிறார். நெற்றியைச் சுருக்கி சந்தேகமும் வியப்பும் பிரதிபலிக்கும் கண்களோடு மீண்டும் மீண்டும் பார்க்கிறார்.

இனியும் சோதிக்க வேண்டாமென்று தலையாட்டி சிறுபுன்முறுவலை விடுகிறார் திலக். அந்த நிலையில் மேசையால் எழுந்து ஓடிவந்து கட்டித்தழுவுகிறான் தேவா. தேவாவின் கண்களில் கண்ணீர் மல்குகிறது. பேச வாயெழவில்லை. "திலக் திலக் என்னடா உன்ரை கோலம். ஏன்ரா வழுக்கை விழுந்தது? ஊளைச் சதையெல்லாம் வைச்சு, எந்தவகையிலும் அடையாளங் கண்டு பிடிக்க முடியவில்லையே. கண்கூட இடுங்கிப்போச்சு".

மெல்லிய புன்முறுவலோடு "றிலாக்ஸ், றிலாக்ஸ் அமைதியாக இரு பிறகு பேசுவம்" எல்லாரும் இவர்களைப் பார்க்கிறார்கள். உடனே அவர்கள் பக்கம் திரும்பி 'இவன்தான் நான் சொன்ன நண்பன். காத்தடிச்ச பலூன் மாதிரி உருளையாய் போனான்'
ஓ! மோர்ஸ் மோர்ஸ்! என்ற கேலிக்குரல்கள் கெக்கட்டம் விட்டுச்சிரிக்கின்றன.

"என்ன சிரிப்பு, தமிழனுக்குக் கிடைக்கக்கூடிய உயர்பதவி P.S பதவி அவருக்குக் கிடைச்சதல்லவா" என்றது ஒருகுரல்.

"மெய்யாகவா" தேவா, திலக்கைக் கேட்டபோது அதற்கும் சிரிப்புத்தான்.

மறுநாள் இருவரும் கிப்ளிங் அன்ட் எவான்ஸ் சந்தியிலிருக்கும் "குவிஸ்நொஸ்" பிறஞ்சைஸ் உணவுக்கடையில் சந்தித்துக் கொண்டனர். தேவசிகாமணி மெனுவைப் பார்த்து, தானே தெரிவு செய்து கொண்டு திலக் விருப்பை அறிய எழுந்து நின்றான். "ஒரு மவ்வின் மாத்திரம் போதுமென்று சொல்ல "சும்மா இரு" என அதட்டி விட்டு "ஒரு பிளாக் அங்கஸ், மற்றது ரேர்க்கி றான்ச் உடன் ஸ்வெஸ் சீஸ்

'What are the toppings' என்னென்ன போடுறது? ஸ்பானிஷ் குயில் மிழற்றியது.

தக்காளி, வெங்காயம், காளான், இற்றாலியன் சோர்ஸ், பெப்பர்ஸ், லெற்றியூஸ், பிக்கிள் இன்னும் எதெது போடலாமோ அதது. தேவாவின் விளையாட்டுத் தனமான பேச்சுக்கு சமான-மாய் அந்தப்பெண்ணும் சிரித்து சந்தோஷமாய் ஆயத்தம் செய்தாள். நகரும் அவணில் வைத்ததும் அது மெல்ல மெல்ல வெந்து மொறு மொறுக்க, மறுபக்கம் வந்து சேரவும் கடதாசியில் சுருட்டி தட்டில் வைக்கிறாள்.

**- வாலின்-**

"அங்காலை ஊறுகாய் வகைகளும், கறுப்பு, பச்சை ஒலிவ் உம் இருக்கு. மற்றப்பக்கத்திலை கொக்கோ கோலா நீங்களே நிரப்பி எடுத்துப் போங்க," என்றாள் அந்த நங்கை.

"டே மச்சான் விருப்பமானதை எடு, முந்தியப்போலதானோ அல்லது கனடா வந்ததும் மாட்டிலை இறங்கிற்றியோ?

"எனக்கு கொஞ்சம் கொலஸ்ரோல் பிரச்சினை உண்டு. அதோடை 3, 4 வருடம் கடைச்சாப்பாட்டை விட்டிட்டன். சரி சொல்லிற்றாய், நான் வான்கோழியை எடுக்கிறன். நீங்கள் மாட்டை எடுங்கோ"

"ஓ! நீ அப்படியே இருக்கிறாய். நான் என்றைக்கு கப்பலிலை கால் வைச்சனோ அன்றிலிருந்து உலகத்திலே உயிரோடு பிறந்ததெல்லாம் தின்னப்பழகிற்றன்'

"மனிசரைத் தவிரத் தானே"

"டே, உனக்கும் பகிடிவிடத் தெரியுது" கெக்கட்டம் விட்டுச் சிரிக்கினம்.

"பார், கிழடுகள் இரண்டும் கெக்கட்டம் விட்டுக் கொட்டம் அடிக்குதுகள். கலி காலம் தான்" என்று பெருமூச்சு விடுது அங்கே சாப்பிட்டுக் கொண்டிருந்த இளசு ஒன்று"

"ஏன் திலக், குடும்பம் என்னமாதிரி? பிள்ளைகள்?"

திலக் சிறிது நேரம் பேசாதிருந்தார்.

"இலங்கையிலை கடைசியாக மட்டக்களப்பில் தான் P.S. ஆக இருந்தனான். ஓய்வு பெற்றுக்கொண்டு கொழும்புக்கு வந்திட்டன். யாழ்ப்பாணம் போகமுடியாது. பரவலாகக் குண்டு போடுகிறான்கள். வளவையும் வீட்டையும் பார்க்கட்டுமென்று எங்கடை வீட்டிலை ஒருபகுதி வாடகைக்கு கொடுத்தது. ஆனால் போறதும் கஷ்டம். வீடு இருக்கிற நிலையம், எல்லாப்பக்கத்தாலும் தாக்கப்படும் போது அகப்படக்கூடியது. அப்படி ஒருநாள் வாடகைக்கு இருந்தவனின் பக்கத்திலை விழுந்து அவனது மனைவியும் குழந்தையும் இறந்து போய்விட்டினம். அதனாலை கொழும்பிலை நிண்டிட்டம்".

"நான் முதல்முறை கொழும்பிலை இறங்கினபோது, எங்களோடை படிச்ச உபாலி ஜெய சேகராவைச் சந்திச்சன், அவனோடை இரண்டுநாள் நிண்டன். அப்ப சொன்னான் நீ தலைமைத் தபாலதிபராக பொலநறுவையிலை இருப்பதாக, ரெலிபோனில் தொடர்பு கொண்டன் நீ லீவிலை யாழ்ப்பாணம் போட்டியாம்"

"1985இல் மகன் சென். ஜோன்ஸ் கல்லூரியில் படிச்சுக் கொண்டிருந்தவர். நிலைமை மோசமாகிறதென்று படிக்காட்டிலும் பரவாயில்லை என்று கூட்டிவந்தனான்."

அப்போது தேவா "நான் அடுத்தமுறை வந்தபோது, அவனுக்கென்ன பேர்... அந்த அஞ்சற் திணைக்கள வழங்கல் பிரிவின் அத்தியட்சகர், எங்களுக்கு அடுத்த பாச் உன்னிடம் குறிப்புகள் வாங்குவான்".

"யார் கனகசுந்தரமோ? பாவம் அவன் ஸ்ரோக் வந்து போயிட்டான்".

"ஐயோ பாவம்! பச்சைத்தண்ணிப் பாவி. அந்தக்காலத்தில் மாஸ்டர் மாஸ்டர் என்று வழிஞ்சு கொண்டு திரிஞ்ச சிற்றூழியர்கள். மொழிப்பிரச்சினை வந்ததோடு எந்தத் தமிழ் அலுவலரை மதிக்கிறான்கள்? எகிறின கதைகளும், எந்த நேரமும் கத்தி பாயுமோ என்ற பயத்தோடு தான் சிற்றூழியர்களோடு வேலை செய்வது என்று சொன்னவன் அவன்தான். உமக்கு கிழக்குமாகாணப் பொறுப்பதிகாரி பதவி கிடைச்சிருக்கென்றும் சொன்னவர்.

"அதிகமாக அஞ்சலதிபர்களுக்கு பாரிசவாதம் தான் பரிசு. எவ்வளவு பொறுப்பும் எவ்வளவு மன அழுத்தமும். எங்கடை கையால கத்தை கத்தையாக காசு எண்ணுவம், காசு உருண்டு கொண்டிருக்கும். ஆனால் வீட்டுச் செலவுக்கு ஒருசதம் இரண்டுசதம் என எண்ணி எண்ணித்தான் செலவு செய்ய வேண்டும். என் மகன் முரளி அங்கை இருப்பதும் ஆபத்துத்தான். அவரைக் கனடாவுக்கு அனுப்பிவிட்டன். மகளுக்கு கனடாவிலேயே மாப்பிள்ளை பார்த்து அனுப்பினனான். என்னையும் தாயையும் எடுத்திட்டான். பத்துவருசம் ஆச்சு. தேவா நீர் என்ன செய்து கொண்டிருக்கிறீர்?"

"ஓ, கப்பல் வாழ்க்கை அலுத்துப் போச்சு. ஊரிலை ஒருவருமில்லை. கூடிய சனம் இங்கே தான் இருக்காம். இனசனம் எங்கெங்கோ தெரியாது. ஊர் சுடுகாடாய் கிடக்குதாம். சுளை சுளையாய் பணம் இருக்கு வெளிநாட்டு வங்கிகளில், அதைக் காட்டி சுயசம்பாத்தியத்தோடு நிரந்தர வதிவுரிமையாளராக இங்கே இறங்கி எனக்குத் தெரிந்த கப்பல் கம்பனி காரனோடு நிற்கிறன். வந்து ஒருமாதம் தான். பிடிச்சுக் கொண்டால் வீடெடுத்து நிற்பது இல்லாவிட்டில், உலகம் பரந்தது தானே.

**தொடரும்**

**விற்பனையாகின்றன!**
**கனி விமலநாதனின்**

**வேற்றுக்கிரக மனிதர்கள்**

யார் இந்த வேற்றுக்கிரக மனிதர்கள்?
அவர்களின் பின்னணி என்ன?
வேற்றுக்கிரக மனிதர்களை சந்தித்தவர்கள் உண்டா?
வேற்றுக்கிரக மனிதர்களுக்கும் எங்களுக்கும் என்ன தொடர்பு?

**பிரபஞ்சம் பற்றிய வியப்பான செய்திகள்**

எமது பிரபஞ்சம் எப்போது தோன்றியது?
தோன்றியபோது எப்படி இருந்தது?
எவ்விதம் இவ்வளவு பெரிதாக ஆகியது?
பிரபஞ்சத்தின் முதல்நட்சத்திரம் எவ்வாறு தோன்றியது

**இனம்தெரியாத பறக்கும் தட்டுகள்**

பறக்கும் தட்டுகள் என்பது உண்மைதானா?
அவை எங்கிருந்து வருகின்றன?
பறக்கும் தட்டுகளை கண்டவர்கள் உண்டா?
பறக்கும் தட்டுகள் பற்றிய இரகசியங்களை கூறும் நூல்
பிரபஞ்ச இரகசியங்களை தெளிவுபடுத்தும் நூல்

**கிடைக்குமிடங்கள்: முருகன் புத்தகசாலை**
*1241 Ellesmere Road - Midland & Ellesmere*
*GTA Square - 5215 Finch Ave. E., Middlefield & Finch*

# பகுத்தறிவுப் பெரியவர்



அரசியலில்
கால் பதித்தால்
“சரிநிகர்”
தன்மானம்
அறுந்துவிடும்
என்றுணர்ந்து,

இறுதி மூச்சுவரை
‘துலாக்கோல்’
மனிதமாக நின்று
சமூகப்பணியாற்றி
வரலாறு படைத்த
பெரியவர்

நீதி என்று
தன் அறிவில் பட்டதை
நிறுத்து
நிதானமாகச் சொன்னவர்

அதிகாரத்துக்கோ
ஊழலுக்கோ
ஒருபோதும்
அடிபணியாத அறவோன்

காலங்காலமாக
அடங்கி ஒடுங்கிக்
கூனிக்குறுகி நின்ற
வியர்வை முதுகுகளைச்
சமூகத்தில்
உயர்த்தி நிமிர்த்தியவர்

சாதியையும் தீண்டாமையையும்
அறிவால்
எரித்துக் கொழுத்துங்கள்

மூடக் கொள்கைகள்
மூட நம்பிக்கைகளைக்
கல்வியால்
கலங்கரை விளக்காக்குங்கள்
என்று
உரத்துப் பேசியவர்

பாலியல்
உணர்வுக்கும்
உணர்ச்சிக்கும்
வருடங்கள்
தடைக்கல்லாகாது,

எனும் உளவியலை
‘மணியம்மையை’
மணந்துகாட்டி
நிரூபித்தவர்!

விலைமாதுகள்
விதவைகள் என
யாருமில்லை
என்று
பெண்ணை உயர்த்தி
பெண் சமத்துவம் பேணி
பெண் கல்வி அளித்து
பெண்மையையும்
சமூகத்தில்
அறிவுச்செல்வம்
ஆக்கியவர்

தொண்ணூறு கண்ட
வெண்தாடிப் பெரியவர்

எந்நாளும்
எங்கள்
இதயங்களில் வாழ்பவர்.

பெரியாரின்
கரிய சிலைக்கு முன்னால் நின்று
நான்
கண் கலங்குகிறேன்

ஆவண வடிவில்
ஜாதிகள்
இன்னும்
உயிர் வாழ்கின்றன

ஜாதிக் கட்சிகளும்
ஜாதிச் சங்கங்களும்
ஜனநாயகம் செய்கின்றன

எங்கோ ஒரு மூலையில்
பதின்ம
வயதுப் பெண்களுக்குக்
கலியாணம் நடக்கிறது

எங்கோ ஒரு மறைவில்
பிறந்தவுடன்
பெண் குழந்தைகள்
கள்ளிப்பால் பருக்கப்பட்டுப்
புதைக்கப் படுகின்றனர்

கலப்புத் திருமணத்துக்குக்
கொடிய
இடர்பாடுகள்

வரதட்சணைக்கு
வட்டிகேட்டே
பெண் எரிக்கப்படுகிறாள்

வெட்கம்
துக்கம்
வேதனை...



முத்துராஜா




# Driving School

- ஓட்டுனர் பயிற்சியில் நட்பான அணுகுமுறை
- நவீனத்துவமான பயிற்சி முறையுடன் நம்பிகையான வெற்றி
- ***G1, G2*** தேர்வுப் பயிற்சிகள், போக்குவரத்து வசதிகள், தெளிவான விளக்க வகுப்புகள்,
- வீதித் தேர்வுக்கான வாகன ஒழுங்குகள், வசதிக்கேற்ற தேர்வு நாட்கள்
- நீண்டகால அனுபவத்தின் தனித்துவமான பயிற்சி - General Driving School

**Ministry of Transportation Approved Instructor - பேரின்பநாதன் வேந்தன் - 416-731-2829**

**Email: venthanctr@yahoo.com**

***Personal Prayer To The Holy Spirit***



Holy spirit thou make me see everything and show me the way to reach my ideal. You who give the divine gift to forgive and forget the wrong that is done to me and who are in all instances of my life with me. I, in this short dialogue, want to thank You for everything and confirm once more that I never want to be separated from You no matter how great the material desire may be. I want to be with You and my loved ones in Your perpetual glory. Amen. Person must pray this 3 consecutive days without stating one's wish. After the 3rd day your wish will be granted no matter how difficult it may be. Promise to publish this as soon as your favor has been granted - C.R

Our Mother of Perpetual Help


# நூல் வெளியீடு



## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்

**தமிழ் மக்களால் நன்கு அறிந்த ஆங்கில, தமிழ் எழுத்தாளர், உளவளத்துணையாளர், ஒலிபரப்பாளர், சமூக சேவை ஆர்வலரான திருமதி. லலிதா புரூடி அவர்கள் தமிழில் விளம்பரம் பத்திரிகையில் எழுதியவற்றின் தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வு.**

இடம்: ஸ்பகாபரோ நகர மண்டபம் அங்கத்தவர் சபா பீடம்

காலம்: ஆகஸ்ட 15, 2009 சனிக்கிழமை

நேரம்: பிற்பகல் 2:30 மணி தொடக்கம் 6:00 மணிவரை

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

தொடர்புகளுக்கு: 905.270.1214

*இந்நூல் கனடாவின் மூத்த தமிழ் இதழான ‘விளம்பரம்’ இன் பதிப்பாளர்களான விளம்பரம் பப்பிளிக்கேசன்ஸ் இன் வெளியீடாகும்.*

# விளையாட்டு...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

செய்தார். ரிச்சர்ட்சும், பிளெட்சரும் சுமாராக துவங்கினர். இருவரும் இணைந்து 5 ஓவர்களில் 33 ரன்கள் எடுத்துக் கொடுத்தனர். ஆனால் 22 ரன்கள் எடுத்த பிளெட்சர், ஷாகிப் அல் ஹஸன் பந்தில் ஆட்டமிழந்தார். பிறகு ஸ்கோர் 52 ஆன போது 20 ரன்கள் எடுத்த ரிச்சர்ட்ஸ் ஆட்டமிழந்தார். அதன் பிறகு வங்கதேச ஸ்பின்னர்களின் சிக்கனமான சுழற் பந்து வீச்சினால் மேற்கிந்திய அணியின் டௌலின், ஸ்மித் ஆகியோர் ரன்கள் எடுக்க திணறினர்.

இருவரும் இணைந்து 18 ஓவர்களில் 66 ரன்களை மட்டுமே எடுக்க முடிந்தது. அப்போது 62 பந்துகளில் ஒரு பவுண்டரி ஒரு சிக்சருடன் 44 ரன்கள் எடுத்த ஸ்மித் ரன் அவுட் செய்யப்பட்டார். கேப்டன் ரெய்ஃபரும் 7 ரன்கள் எடுத்து 33-வது ஓவரில் ஆட்டமிழந்தார். ஆனால் அதன் பிறகு பெர்னாடும், டௌலின் இணைந்து ஸ்கோரை 40.5 வது ஓவரில் 181 ரன்களுக்கு உயர்த்தினர். அப்போது பெர்னாடும் ஆட்டமிழந்தார். அதன் பிறகு டௌலின் ஆடிய ஆட்டம் மிகச்சிறப்பானது. அவர் 117 பந்துகளில் 6 பவுண்டரிகள் ஒரு சிக்சர் சகிதம் 100 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். கடைசி 73 பந்துகளில் டௌலின் மற்ற வீரர்களை வைத்துக் கொண்டு தன் அணிக்காக 93 ரன்களைச் சேர்க்க மேற்கிந்திய அணி 50 ஓவர்களில் 274-6 என்று ஆனது.

இலக்கை துரத்த களமிறங்கிய வங்கதேச அணி ஜுனைத் சித்திக் (23), தமீம் இக்பால் (29) மூலம் நல்ல துவக்கத்தை பெற்றது. இருவரும் 46 ரன்கள் சேர்த்தனர். ஆனால் ஸ்கோர் 64 ரன்களை எட்டியபோது இருவரும் ஆட்டமிழந்தனர். அதன் பிறகு மேற்கிந்திய அணி சிக்கனமாக வீச அஷ்ரபுலும், ராகிபுல் ஹஸனும் அவ்வளவாக ரன்களை எடுக்க முடியவில்லை. 26-வது ஓவரில் ராகிபுல் ஹஸன் ஆட்டமிழந்துவிட வங்கதேச அணி 116ஃ3 என்று பின் தங்கியிருந்தது.

ஆனால் அதன் பிறகு அஷ்ரஃபுல், ஷாகிப் அல் ஹஸன் இணைந்து ஸ்கோர் வேகத்தை உயர்த்த அடுத்த 11 ஓவர்களில் 74 ரன்கள் எடுக்கப்பட்டது. 77 பந்துகளில் 3 பவுண்டரிகள் ஒரு சிக்சர் சகிதம் 64 ரன்கள் எடுத்த அஷ்ரஃபுல் ரால் லூயிஸ் பந்தில் ஆட்டமிழந்தார். அதன் பிறகு ஷாகிப் அல் ஹஸன் ரன் வேகத்தை கூட்டினார், அவருடன் முஷ்ஃபிகுர் ரஹீம் இணைந்தார். 7 ஓவர்களில் 48 ரன்கள் எடுத்தனர். 44-வது ஓவர் முதல் பந்தில் 65 ரன்கள் எடுத்த ஷாகிப் அல் ஹஸன் ஆட்டமிழந்தார். ஆனால் ரஹீம் ஸ்கோரை 261 ரன்களுக்கு உயர்த்தி 31 ரன்களில் ஆட்டமிழந்தார். பிறகு ரசாக்கும், நயீம் இஸ்லாமும் 49-வது ஓவர் கடைசி பந்தில் வெற்றி தேடித் தந்தனர். ஆட்ட நாயகனாக ஷாகிப் அல் ஹஸன் தேர்வு செய்யப்பட்டார்.



Niru Niru
நிரு
பிராண்ட்

தமிழர் மத்தியில் என்றும் தரமானதாகவும் ருசியானதாகவும்
சுகாதாரமுறைக்கேற்ப உணவுப்பொருட்களை வழங்குவது
**நிரு பிராண்ட் தயாரிப்புக்களே.**

# பேரண்டக் கதை

சென்ற தடவையில் புருனோவின் பங்கு அல்லது சிந்தனைகள் பேரண்டக்கதையில் எவ்விதம் இருந்தது எனப் பார்த்தோம். மீண்டும் நியூட்டன் கண்ட பேரண்ட வடிவத்தில் இருந்தே தொடர்வோம். நியூட்டன் பேரண்டம் பற்றி இன்னமும் முக்கியமான இரண்டு கருதுகோள்களை முன்வைத்தார். ஒன்று பேரண்டவெளியானது தனித்துவமானது. வேறு எதனுடனும் தொடர்பில்லாதது. மற்றையது பேரண்டத்தில் வெளியும் தனித்துவமானது, வேறு எதனுடனும் சார்பில்லாதது. இவ்விரண்டு எடுகோள்களின் அடிப்படையிலேயே பேரண் டம் முழுவதிலும் அவரது ஈர்ப்பு விதியும், இயக்கவிதிகளும் செல்லுபடியாகும். சரியான முடிவுகளைக் கொடுக்கும், கொடுத்தது.

நியூட்டனின் காலத்தின் பின்னராக வானவியலாளர்கள் நியூட்டனின் விதிகளை வான் பொருட்களுக்குப் பாவித்து, நியூட்டனின் விதிகளைச் சரிபார்த்துக் கொண்டார்கள். கோள்களின் இயக்கங்களை, நிலைகளை எதிர்வுகூறத் தொடங்கினார்கள். இன்றும் கூட எதிர்காலத்தில் கோள்கள் பூமிசார்பாக, அல்லது கதிரவன் சார்ப்பாக எந்த எந்த இடங்களில் நிற்கும் அல்லது வரும் என்பதனை அறிவதற்கு நியூட்டனின் விதிகள் வானவியலாளர்களினால் பாவிக்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றை விட, கலிலியோவின் வழியிலே வானவியலாளர்கள் வான்பரப்பினைப் பார்ப்பதற்கு தொலைகாட்டி களையும் அதிகம் பாவிக்கத் தொடங்கி விட்டார்கள். தொலைக்காட்டிகளும் நாளுக்கு நாள் மெருகூட்டப்பட்டு புதுப்புது வடிவில், வலுக்கூடியவையாக அமைய வான்பரப்பின் மர்மமானது வேகமாகத் துப்புத் துலக்கப்படத் தொடங்கியது. இந்த வகையில் அந்நாட்களில் இனம்கண்டு கொள்ளப்பட்டிருந்த கோள்களின் இயக்கங்கள் வானவியலாளர்களினால் அவதானிக்கப்பட்டது.

எல்லாக் கோள்களின் இயக்கங்களும், கெப்பினரின் விதிகளுக்கு நியூட்டனின் விதிகளுக்கும் அமைவாகவேதான் இருந்தன. ஆனால் முதலாவது கோளாகிய புதன் கோளின் இயக்கம் மட்டும் சற்று ஏறுமாறாக இருந்தது. காரணம் தெரியாத விஞ்ஞானிகள், ஒருவேளை கதிரவனுக்கும், புதனுக்கும்



**பிரபஞ்சம் - 45**

இடையில் இன்னொரு சிறிய கோள் இருக்குமோ என ஐயமுற்றார்கள். அப்படி ஒரு கோள் இருக்க வேண்டும் அதனால்தான் அச்சிறிய கோளின் ஈர்ப்பு விசையின் விளைவால் புதன் கோள், எதிர்பார்த்தபடி இயங்கவில்லை என முடிவு செய்து, அக்கோளிற்கு 'வல்கன்' எனப் பெயருமிட்டார்கள். பின்னராக, வல்கன் என்ற ஒளித்திருக்கும் கோளினைத் தேடினார்கள். அவர்களின் முயற்சி பலிக்கவில்லை. ஏனெனில் கதிரவனுக்கும், புதனுக்கும் இடையில் எந்தவொரு கோளும் இல்லை, இருக்கவும் முடியாது. இது ஒரு சிறிய பிழைதானே எனப் பின்னர் கருதிய விஞ்ஞானிகள் அப்பிழையினையும் வல்கனையும் மறந்து விட்டார்கள்.

புதன் கிரகத்தினைப் போலவே அந்நாட்களில் கடைசிக் கிரகமான சனியின் இயக்கத்திலும் தழும்பல்களை வானவியலாளர்கள் அவதானித்தார்கள். இம்முறையும் புதனது போலவே சனிக்கிரகத்திற்கு வெளியே இன்னொரு கோள் இருக்க வேண்டும் எனக் கருதிய வானவியலாளர்கள், முதலில் கணிதத்தின் துணை கொண்டு தாம் சந்தேகித்த கோளின் திணிவினையும், அது வலம் வரக்கூடிய பாதையும் கணித்து அதன் வழியே அப்புதிய கிரக்தினைதத் தேடினார்கள். ஆயினும் அவர்களினால் வெற்றி பெறமுடியவில்லை. முடிவில் ஒரு தற்செயலாக சனிக்கிரகத்திற்கு அடுத்ததாக ஒரு கிரகத்தினை, தொலைக்காட்டியின் உதவியுடன் கண்டு கொண்டார்கள். அப்புதிய கோளிற்கு யூரேனஸ் எனவும் பெயரிட்டுக் கொண்டார்கள். இதன்படியே, காலஞ் செல்லச்செல்ல நெப்ரியூனும், புளூட்டோவும் கண்டுபிடிக்கப்பட்டன. இம்மூன்று கோள்களும் நியூட்டனின் ஈர்ப்புவிதிக்கு அமைவாக நடக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இதன் வழியே கதிரவனை மையமாகக் கொண்ட நிலையான பேரண்டத்தில் யுரேனஸ், நெப்ரியூன், புளூட்டோ என்ற மூன்று புதிய அங்கத்தவர்கள் சேர்ந்து கொண்டார்கள் அல்லது சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அத்துடன் கதிரவனுக்கு இப்போது ஒன்பது கோள்கள் உள்ளன எனவும் ஆகிவிட்டது. (இந்த ஒன்பதாவது கோளான புளூட்டோவை விஞ்ஞானிகள் இப்போது கோளாகக் கருதுவதில்லை. பதிலாக குள்ளக்கிரகம் (கோள்) என்ற புதிய பதத்தினைக் கொடுத்துள்ளார்கள். இதன்படி இப்போது கதிரவனுக்கு எட்டுச் கோள்கள் (8) மட்டுமே உள்ளன என்பது விஞ்ஞானிகளின் முடிவு. இது பற்றிய விபரமான கட்டுரை ஒன்று 'விளம்பரத்தில்' இரண்டு வருடங்களின் முன் வந்ததை நீங்கள் ஞாபகப்படுத்திப் பாருங்கள்)

நியூட்டனின் ஈர்ப்புவிதியானது இன்னமும் பல விடயங்களைத் தெளிவுபடுத்தியதுடன், பல புதிய கதிரவக்குடும்ப அங்கத்தவர்களை கண்டுபிடிக்க உதவியாக இருந்தது. வால் வெள்ளிகள், குட்டிக்கிரகங்கள் என்பனவும் தொலைக்காட்டிகளின் உதவியுடன் இனம் கண்டுகொள்ளப்பட்டன. இந்தவகையான பேரண்டமானது புதுப்புது வடிவத்தினை எடுத்துக் கொண்டிருந்தது. இது முடிவானதாக அமையவில்லை. விஞ்ஞான வளர்ச்சியானது இன்னமும் பேரண்டத்தின் கதையை நீட்டிக் கொண்டே போனது. இனிவரும் நாட்களில் தொடர்ந்து கவனிப்போம்.

- கனி -





# Little Terrorist, Road To Ladakah, சித்தார்த் - கைதி படங்கள் மீதான கருத்துக்கள்

## சித்தார்த் - கைதி

புத்தரின் பெயரில் நடைபெற்ற கொலைகளின் பின்னர், ஒரு இனத்தின் அழிவிற்கு பின் வெளிவந்த இந்த படத்தை முதலில் பார்க்க மனம் இடம் கொடுக்கவில்லை. படத்தின் அட்டை வித்தியாசத்தை உணர்த்தியதில் ஒரு நாள் இரவு பார்த்ததின் விளைவே இது.

தூறல்

**வானரன்**

ரிக் வேதத்துடன் படம் ஆரம்பிக்கின்றது. "Make me eternal in Kingdom, where all needs and desie go". வழமை போல் சிறைக்குள் இருந்து தாடியுடன், சில தாள்களுடன் வெளிவரும் சித்தார்த் றோய் தனது வழக்கறிஞர் ஏற்பாடு செய்திருந்த இடத்தில் தங்குகின்றான். படம் சிறைக்குப் போனதன் காரணங்களுடன் நினைவு களுடன் தொடங்கி நிஜத்தில் முடியும் என நினைத்திருப்பவர்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கின்றது. சித்தார்த் றோய் ஒரு பிரபல நாவலாசிரியர். தனது புதிய நாவல் மூலம் இழந்த தனது மனைவியையும், மரியாதையும், தனது குழந்தையையும் பெற்றுக் கொள்ளலாம் என்பது இவனது கணிப்பு. தனது மின் கடிதத்தை பெற்றுக் கொள்ளும் முகமாக கணணி நிலையத்திற்கு செல்கின்றான். அதன் முகவர் மோகன். இந்நிலையத்தை தாதா ஒருவர் இவருக்கு சொந்த மான பணம் அடங்கிய பெட்டி, சித்தார்த்தின் அதே மாதிரியான பெட்டியுடன் மாறிவிடுகின்றது. வழமை போல் பல படங்களில் பார்த்த காட்சி. சித்தார்த் நம்பியுள்ள கதை அப்பெட்டியுள் உள்ளது. சித்தார்த்திடம் வேறு பிரதிகள் இல்லை. மோகன் தாதாவால் பணத்தை தருமாறு மிரட்டப்படுகின்றான். பணத்தைப் பெற்ற சித்தார்த் புதிய பணத்தின் மூலம் தனது குழந்தையுடன் காணாமல் போக முடிவு செய்கின்றான்.

தனது கதையுள்ள பெட்டியைத் தேடி கணணி நிலையத்திற்கு சித்தார்த் செல்கின்றான். ஒருவாறு மோகனின் பெட்டி சித்தார்த்தின் பெட்டி மோகனிடமும் கை மாறுகின்றது. பெட்டியை கொடுக்கும் பொழுது சித்தார்த் மோகனிடம் கேட்கின்றான் பெட்டியை யாரிடம் கொடுக்கப் போகிறாய் என? நீயே வைத்திருக்கலாம் என ஆலோசயையும் கூறுகின்றான். அதற்கு பெட்டியை உரியவரிடம் சேர்ப்பிக்கப் போகிறேன் எனக் கூறுகின்றான். மோகன் பெட்டியுடன் செல்வதை தாதா கும்பல் கண்டு கொள்கின்றது. அவனைத் தொடர்கின்றனர். பெட்டியுடன் தலைமறைவாக திட்டமிடும் மோகன் அங்கு ஏற்படும் சண்டையில் தாதா கும்பலில் உள்ள ஒருவனை சுட்டுக் கொள்கின்றான். தனது பெட்டியுடன் திரும்பும் சித்தார்த் தனது மகனை, மகனைப் பராமரிக்கும் பெண்ணிடமிருந்து பெற்றுக் கொண்டு புகையிரத நிலையத்தை நோக்கி செல்கின்றான். (சித்தார்த்தின் மகன், சித்தார்த்தின் மனைவியின் தாயாரிடம் வளர்கின்றான். மகனை பராமரிக்கும் பெண் தனது காதலனுடன் நேரத்தை செலவிடுவதற்காக வெளியே பிள்ளையை கொண்டு வந்து சித்தார்த்திடம் கொடுத்து விட்டு செல்வாள். சில மணி நேரம் கழித்து பிள்ளையை பெற்றுக் கொள்வாள்.) புகையிரத நிலையத்தில் ஏற்படும் நெருக்கடியில் பிள்ளையை தவறவிட்டு தனது பிரதியையும் சிதற விடுகின்றான். திரும்ப கிடைக்கும் மகனை பராமரிக்கும் பெண்ணிடம் கொடுத்து விட்டு கணணி நிலையத்தின் வெளியே அந்த இரவை கழிக்கின்றான். காலையில் தனது பையை நிலையத்தின் வெளியே வைத்து விட்டு செல்கின்றான். பையினுள் மோகனின் பெட்டியினுள் இருந்த பணத்தின் உண்மையான தாள்கள் இருந்தன. மோகனிடம் பெட்டியை கையளிக்கும் பொழுது, பல தாள்களை பிரதி செய்யப்பட்ட தாள்களாக மாற்றி விடுகின்றான்.

புத்தரின் போதனையான letting everything go and to free your mind of any longingsயும் முதலில் குறிப்பிட்ட ரிக் வேதத்தையும் மையமாகக் கொண்டதாக குறிப்பிடப்படுகின்றது. சித்தார்த் சிறைக்கு சென்றதன் காரணங்கள் கூறப்படாவிட்டாலும் மனைவி பிரிந்து செல்லுமளவிற்கு மோசமானவை என உணர்த்தப்படுகின்றது. இறுதி வரை மனைவி மாயாவை காட்டவில்லை. பணத்தைப் பெறும் சித்தார்த் தனது பிரதியை மீள எழுதியிருக்கலாம். ஏன் அதனை தேடிச் செல்ல வேண்டும்?. பணத்தை பிரதி செய்தமையினால் பணத்தின் மேல் சித்தார்த்திற்கு ஆசை அதிகம் இருந்தது என்பது உண்மையே. சித்தார்த், மோகன் ஆகிய இருவரும் எதிர் எதிரான கருதுகோள்களை கொண்டிருப்பவர்களாக காட்டப்படுகின்றது. இறுதியில் சித்தார்த்தை நல்லவனாக காட்டுகின்றனர். சித்தார்த் குழப்பவாதியா? இல்லையேல் இயக்குனரா? புத்தரின் பெயரைக் கொண்டவர்கள் எல்லாரும் நல்லவர்கள் என கூறுவதைப் போல் முட்டாள் தனம் வேறெதுவு மில்லை. மோகன் சாதாரண நடுத்தர வர்க்கத்துப் பிரதிநிதி. சித்தார்த் ஒரு மேல் தட்டு வர்க்க புத்திஜீவி. இதனால் மோகன் மோசமாகத்தான் இருப்பார் என்பதும் அதனை நுகர்வோரிடம் திணிப்பதும் மிக மோசமான செயலாகும்.

சம்பவங்களின் கோர்வைகளை மையமாகக் கொண்டுள்ள வழமைக்கு மாறான கதைக்களம், சித்தார்த்தாக நடிக்கும் ரஜட் குமாரின் சிறப்பான நடிப்பு குறிப்பிடத்தக்கது. குனோசப் காட்சிகளில் இவரது உடலசைவுகளும். முகமும் பல மொழிகள் பேசுகின்றன. மோகனாக நடிக்கும் சச்சின் நாயக்கின் தேர்ந்த நடிப்பு படத்திற்கு சிறப்பைக் கொடுக்கின்றன. தாதாக் கும்பலின் கைதியாக சிறப்பாக நடித்துள்ளார். திரைப்பட விழாக்களை நோக்கி எடுக்கப்பட்டுள்ள படம் என்பதை எடிட்டிங், ஒளிப்பதிவு, திரைக்கதை (குழப்பமான) தெளிவுபடுத்துகின்றன.

## குழந்தை பயங்கரவாதி

பாகிஸ்தான், இந்திய எல்லைப் பகுதியில் நடைபெறும் சம்பவங்களைக் கொண்டது இந்த குறும் படம். இவ்வாறான சம்பவங்கள் பல நடை-பெற்றுள்ளன. 2000ம் ஆண்டில் இவ்வாறு கைது செய்யப்பட்ட பல சிறுவர்கள் இந்திய பிரதமரால் பேரூந்து ஒன்றில் ஏற்றப்பட்டு பாகிஸ்தானுக்கு அனுப்பப்பட்டனர். இப்படம் ஒஸ்காரின் இறுதித் தேர்வுக்கு பரிந்துரைக்கப்பட்டது **(OSCAR NOMINEE).** மொன்றியால் திரைப்பட விழாவில் குறும் படப் பிரிவில் சிறந்த படமாக தேர்வு செய்யப்பட்டது.

பாகிஸ்தானிய சிறுவன் தற்செயலாக இந்திய எல்லைக்குள் வந்துவிடுகின்றான். அவனை பயங்கரவாதி என முத்திரை குத்தி இந்திய துருப்புக்கள் தேடுதலை நடாத்துகின்றனர். இச்சிறுவனை ஒரு பிராமண உபாத்தியாயர் காப்பாற்றி கடும் ஆபத்து வரும் என்ற பயத்தையும் மீறி குடும்பத்திடம் சேர்ப்பிக்கின்றார். 15 நிமிடத்தில் எத்தனை பயங்கரங்கள். கிரிக்கெட் பந்தை தேடி வேலியைத் தாண்டும் சிறுவனை அலாரம் ஒலியின் ஓசையில் துருப்புக்கள் தேடுகின்றன. இந்து ஆசிரியரின் வீட்டில் முஸ்லீம் சிறுவன் சாப்பிட்ட கோப்பை உடைக்கப்படுகின்றது. அச்சிறுவன் இந்து எனக் காட்ட மொட்டை அடிக்கப்படுகின்றது. கொட்டும் தலைமயிரை உடனுக்குடன் கூட்டுகின்றனர். நடந்த பயங்கரத்தை அறியாத சிறுவனின் தாய் ஏன் மொட்டை அடித்தாய் எனத் திட்டுகின்றாள் தேடுதலுக்கு வரும் இராணுவ வீரருக்கு தண்ணீர் கொடுத்த பொழுது, கிளாஸில் காணப்பட்ட தலைமயிரை இராணுவ வீரர் கையில் எடுத்த பொழுது வீட்டுகார இளம் மகளின் முகத்தில் தெரியும் அச்சம், அந்த எல்லைக் கிராமம் நாள் தோறும் சந்திக்கும் சோதனைகளை பிரதிபலிக்கின்றது.



தமது உயிரை துச்சமாக மதித்து சிறுவனைக் காப்பாற்றிய போதும், சிறுவனின் ரொட்டியைப் பகிர்ந்து கொள்ளவில்லை. சிறுவன் உண்ட கோப்பையை உடைக்கின்றனர். மனிதத்துக்கு அப்பால் கலாச்சாரம் மனிதர்களைக் கொல்கின்றது. ஒரு தனிமனிதனுக்கு தான் விரும்பும் வழக்கங்களை தேர்ந்தெடுக்க இந்த சமூகமும் விடுவதில்லை. பிறக்கும் பொழுதே பல முத்திரைகளுடன் மனிதன் பிறக்கின்றான். மதம், சாதி, குலம், மொழி போன்ற பல விடயங்கள் திணிக்கப்படுகின்றன. "மனிதனாய் நட என்பதை விட" "மொழியுடையவானாய் இரு" என்பது வலியுறுத்தப்படுகின்றது. இதன் பாதிப்பை இந்த 15 நிமிடம் சிறப்பாக பதிவு செய்துள்ளது.

சென்ற வருடம் குறும்படவிழாவில் காட்டப்பட்ட கர்ண மோட்சம் போன்று கனதியாகவுள்ளது இப்படம். இந்து, முஸ்லீம் ஒற்றுமையை நோக்கி பல படங்களும் குறும் படங்களும் வெளிவந்துள்ளன. டிசம்பர் 26 போன்ற ஒரு சில குறும் படங்கள் குறிப்பிடத்தக்கவை. ஆனால் இப்படம் எல்லைக்கிராம மக்களின் அச்சத்தையும், மனிதத்தையும். கலாச்சார உள்வாங்கல்களையும், போரின் கொடுமையையும் தெளிவாக பதிவு செய்துள்ளது. திரைப்பட ஆர்வலர்கள் கட்டாயம் பார்க்க வேண்டும்.

## *Road to Ladakah*

ஜம்மு காஸ்மீர் பகுதியில் அமைந்துள்ள மாவட்டமே லட்கா. இதில் உள்ள ஒரு நகரமே பிரபல கார்கில் நகரம். ஒரு தீவிரவாதியும், ஒரு யுவதியும் தமது ஜீப்பில் இமயமலையை ஒட்டியுள்ள பகுதியில் செல்கின்றனர். தனிமையில் செல்லும் இவர்களுடன் லட்காவும் பயணிக்கின்றது. மூன்று தனி மனிதர்கள் பயணிக்கின்றனர். மூன்றாவது மனிதர் லட்கா. மனிதர்களை காண்பதே அரிது. பின்னணி இசை இந்த வெறுமையை சிறப்பாக பதிவு செய்துள்ளது. ஒரு மோட்டர் திருத்தும் இடத்தில் இவர்கள் சந்திக்கின்றனர். தேநீர் கோப்பையில் இருந்த ஒரு அழுக்குக்காக இந்த யுவதி தேநீரை நிலத்தில் ஊத்திவிடுகின்றாள். இது யுவதி ஓர் மேல் தட்டு வர்க்கத்தை சேர்ந்தவள் என்பதை வெளிக்காட்டுகின்றது. தீவிரவாதியின் ரயரை மாற்றி யுவதியின் வாகனத்தில் பூட்டிவிடுகின்றார் வாகனத்தை திருத்துபவர். யுவதியின் வாகனத்தின் பின்னே தொடர்கின்றார் தீவிரவாதி. ஓர் வீதியோர தங்குவிடுதி (Tent)ல் இருவரும் தங்குகின்றனர். அங்கு யுவதி தீவிரவாதியின் நட்பை தனது பாதுகாப்பிற்கு

தொடர்ச்சி 30ஆம் பக்கம்

CANADIAN TAMIL CENIMA ENHANCEMENT ORGANIZATION
CTCEO
கனடிய தமிழ்த் திரைப்பட மேம்பாட்டு மையம்

**படக் காட்சியும் கருத்துக் களமும்**

கனடிய தமிழ்த் திரைப்பட மேம்பாட்டு மையத்தின் செயற்பாடுகளில் ஒன்றான திரைப்படக் கருத்துக் களத்தின் நிகழ்வாக, எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை திரைப்படக் காட்சியும் அதற்கான கருத்துக் களமும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ***"Little Terrorist", "Road to Ladkh"*** ஆகிய இரு குறும்படங்கள் காண்பிக்கப்பட்டு அவை தொடர்பான விமர்சன நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

திரைப்பட ஆர்வலர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இடம்: ***5310 FINCH AVENUE EAST, UNIT – 39 SCARBOROUGH***

மேலதிக விபரங்களுக்கு – 416- 457- 8424 / 416- 450- 6833

# கண்

மாலைக்கண் பற்றி எடுத்துக்கொண்டால் இரவில் கண்பார்வை அற்ற நிலையைக் குறிக்கும். கண்ணில் உள்ள சில நிறமிச்சத்தை பொறுத்தது. பெரும்பாலும் உயிர்ச்சத்து 'A' குறைவதே காரணமாகும். இதனால் இரவில் நிறமிச்செல்களின் ஒத்துழைப்பு தன்மை குறைந்து காணப்படும். எனவே இந்நிலை ஏற்படாதிருக்க உரிய உயிர்ச்சத்து 'A' உணவுகளைக் கையாண்டு வரவேண்டும்.

சிலருக்கு கண்கள் வரண்டு சிவப்பாக காணப்படுகின்றது. இது பெரும்பாலும் முதியவர்களும் ஏற்படுவதுண்டு. கண்ணீர் சுரப்பது குறைந்து காணப்படும். இதற்கு பெரும்பாலும் கண்களை திறந்து, திறந்து மூடிக் கொள்வதினால் ஓரளவு பயன் உண்டு. மேலும் தகுந்த சிகிச்சைக்கு வைத்தியர்களிடம் செல்லவேண்டும்.

சில முதியவர்களுக்கு நேர்கோடு நிலையான கம்பங்கள், வளைந்து காணப்படுதல் போன்று தோன்றும். இதற்கு கண்ணில் உள்ள விழித்திரையின் நடுவில் உள்ள அணுக்கள் செயல் குன்றும் நிலையே காரணமாகும். அத்துடன் கண்பார்வையும் குறைவடையும். எனவே மரக்கறி உணவுவகை, பழங்கள், பெரும்பாலும் கரட், சாலட் போன்றவற்றை உண்டு வருவது நன்று.

மேலும் தொலைக்காட்சி நீண்ட நேரம் பார்ப்பதினால் கண்பார்வையில் குறைபாடு ஏற்படாது. ஆனால் கண்ணுக்கு களைப்பு, சோர்வு ஏற்படும். அத்துடன் ஒரே இடத்தை தொடர்ந்து பார்ப்பதும் குறைவான வெளிச்சத்தில் புத்தகங்களைப் படிப்பதும் கண்ணுக்கும் தசைப்பகுதிக்கும் நல்லதல்ல. எனவே நிலையை மாற்றிக் கொள்ளவும். ஓய்வு எடுப்பது முக்கியமாகும்.

மேலும் கம்பியூட்டரை (Computer) நீண்டநேரம் பார்ப்பதினாலும், திரையின் மீது வெளிச்சம் அல்லது மேசைவிளக்குகளின் ஒளிக்கதிர் படுவதினால் நமது கண்கள் பாதிப்படையும். இது ஆங்கிலத்தில் Computer Eye Fatigue என அழைக்கப்படும். இந்நிலையை நீக்க கம்பியூட்டருக்கு கண்ணாடித்திரை போட வேண்டும். இதனை திரைவடிகட்டி (Screen Filter) என்பர். இது பெரும்பாலும் கண்ணில் இருந்து 1½ அடி தூரத்தில் இருப்பது மிக நன்று. எனவே ஓய்வும் முக்கியமாக எடுக்க வேண்டும்.




கண்ணில் தூசு போன்ற பொருட்கள் விழுந்தால் கண்ணீர் சொரிந்து தூசை வெளியகற்றும். மேலும் துன்பம் இருந்தால் வெதுப்பான தண்ணீரில் முகத்தை வைத்தால் அவை நீங்கிவிடும். ஆனால் மற்றோர் வாயினால் கண்களில் ஊதக்கூடாது. தொற்று ஏற்படும். கண்ணைக் கசக்கக் கூடாது. பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

பெற்றோருக்கு பால்வினை நோய் (Venereal Disease) இருந்தாலும் கருவிழி குழந்தைகளுக்கு பாதிக்கப்பட்டு பார்வைகுன்றும். பற்கள், மூளை, தோல், எலும்பு என்பனவும் குறைபாட்டுடன் காணப்படும். விழிப்புரை (Cataract) நோயாக இருந்தால் அறுவைச் சிகிச்சை சிறந்ததாகும். எதற்கும் உரிய வைத்தியர்களிடம் செல்ல வேண்டும். நன்மை உண்டு.

கண்களைச் சுற்றி கருவளையம் ஏற்படுவதற்கு தூக்கமின்மை, மனச்சோர்வு, உடல்களைப்பு, உயிர்ச்சத்து குறைபாடு என்பன ஏதுவாக உள்ளது. எனவே இந்நிலை ஏற்படாமல் இருக்க மேல் கூறியவற்றை தவிர்த்துக் கொள்வதுடன் தகுந்த உயிர்ச்சத்தை உணவுடன் சேர்த்துக் கொள்ளவும். நிறக்குருடு (Colour Blindness). இந்நோய் கண்ணில் உள்ள செல்கள் (Cones) பாதிக்கப்படுவதினால் ஏற்படும் குறைபாடாகும். பெரும்பாலும் பரம்பரையாக வருவதுண்டு எனவும் கூறப்படுகின்றது. இவர்களுக்கு நிறங்களின் தன்மைகள் தெரிவதில்லை. இந்தக் குறைபாடு பெரும்பாலும் பெண்களை விட ஆண்களுக்குத்தான் அதிகம் வருவதுண்டு.

நமது கண்ணீர் உப்புத்தன்மையாக இருக்கின்றது. அதாவது சோடியம் குளோரைட் அதிகம். அத்துடன் வேறு உப்புவகையும் சேர்ந்துள்ளது. கண்ணீருக்கு தொற்றும் கிருமிகளை எதிர்க்கும் தன்மையுண்டு. அத்துடன் கண்கள் உலர்வடையாமல் பாதுகாக்கின்றது.

கண்புரை (Cataract) என்பது வயதாவதின் அறிகுறியாகும். சிறுவயதில் பெரும்பாலும் ஆடி (Lens) நன்றாக இருக்கும். வயதாக விழி ஆடியில் உள்ள திசுக்கள் நெருக்கமாகிவிடும். பார்வை மங்கிவிடும். எனவே கண்புரை முற்றிய பின்தான் சிகிச்சை செய்ய வேண்டும் என தாமதிக்க வேண்டாம். எப்போது பார்வை மங்கி வருகின்றதோ அவ்வேளை மருத்துவரிடம் சென்று பரிசோதித்து சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம். சலரோகம், இரத்தக்கொதிப்பு இருப்போர் முக்கியமாக வைத்தியர்களின் ஆலோசனை பெற்று கண்புரை சத்திரசிகிச்சை செய்வதே நன்று. அறுவை சிகிச்சை மேல் கூறிய வியாதி உடையோருக்கு நன்று அன்று.

சிலர் எந்த வேளையும் கண்ணீர் விடுவார்கள். கண்களில் உள்ள சுரப்பிகள் அதிகம் வேலை செய்வதினால் அதிக நீர் சுரக்கும். வருத்த நிலை, மகிழ்ச்சி, சோகம் போன்றவற்றால் இந்நிகழ்வு ஏற்படும்.

ஆனால் முதியோருக்கு சுரப்பிகள் குறைவாகவே வேலை செய்வதினால் நீர் சொரிவது குறைவாகும். அல்லது நீரே இல்லாமல் இருக்கும். இந்நிலை சில வியாதிகள் ஏற்பட ஏதுவாக அமையும். எனவே முதியோர்களுக்கு கண்ணீர் வெளிவராததினால் உணர்வுகள் இல்லாத மனிதர்கள் என்று நினைத்து விடாதீர்கள். எல்லாம் வயதை பொறுத்ததேயாகும்.

சிலருக்கு நோயைப் பொறுத்தமட்டில் மூலிகை வைத்தியத்தின்படி சப்த தாதுக்களினால் ஆன உடம்பில் முத்தாது எனக் கூறப்படும் வாதம், பித்தம், கபம் என்பவற்றில் பித்த ஆதிக்கம் கூடிக் காணப்படும். கண்பார்வை மங்கலாகத் தெரியும் தன்மையை உண்டாக்கும். கண்பார்வை மங்குவதற்கு முன் கண்ணீர் சொரிந்தவண்ணம் இருக்கும். ரோகியின் கண்களைப் பார்வையிடும் போது மஞ்சள் நிறமாகவும் இருக்கும். ஆனால் மஞ்சள் காமாளை ரோகத்திலும் கண்கள் மஞ்சள் நிறமாக இருக்கும் என்பதையும் மறந்துவிடாதீர்கள். எதற்கும் வைத்தியர்களின் பரிசோதனை, நிதானம் முக்கியமாகும்.



# நீரிழிவு நீங்க யோகாசன சிகிச்சை

## பகுதி - 1

### நீரிழிவு என்னும் சர்க்கரை வியாதி

மனித உடலில் உண்டாகும் அநேக நீடித்த நோய்களிலே மிகக் கொடியதும் உயிரை உறிஞ்சுவதுமான நோய் நீரிழிவு என்னும் இனிப்பு நோய்தான். இந்த நோய் இன்று பலரிடத்திலும் காணப்படுகின்ற பொதுவான நோயாகிவிட்டது. உணர்ச்சிகளால் உடல் இயக்கம் மாறுபடுவதற்கு மிகச் சிறந்த உதாரணமாக அமைவது இந்த நோயே.




இதன் உருவாக்கமும் பங்கிரியால் சுரப்பியும் (கணையம்)

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

நாம் நலமாக வாழ மூன்றுவிதமான சத்துக்கள் தேவை
1. மாப்பொருள் (கார்போவைதரேட்)
2. கொழுப்பு
3. புரதச்சத்து (புரட்டீன்)

இவற்றின் தராதரம் தக்க சமநிலையில் அமைந்திருக்க வேண்டும். நீரிழிவு நோயில் இப்பொருள்கள் உடலில் செலவாகும் முறையில் ஒழுங்கு குலைந்து போகின்றது. பன்கிரியால் சுரப்பியானது வயிற்றின் மேல்பகுதியில் இடது பக்கமாக உணவுப் பைக்குப் பின்புறம் அடியில் அமைந்துள்ளது. இந்தப் பகுதியைத் தவிர வேறொரு பகுதி கணையத்தில் இருக்கிறது. நீரிழிவு நோயில் முக்கியத்துவம் பெறுவது இந்தப் பகுதிதான். இதிலிருந்தே இன்சுலின் என்னும் சுரப்பு சுரக்கிறது. இது ஒரு அகச்சுரப்பு. இரத்தத்திலே நேரடியாகக் கலக்கின்றது. அதற்கென்று தனி நாளம் இல்லை. இந்த இன்சுலினுடைய உதவியால் தான் குளுக்கோஸ் என்னும் இனிப்பு சத்து கல்லீரலிலும் தசைகளிலும் சேமித்து வைக்கப்படுகிறது. அவ்வப்போது உறுப்புகளின் தேவைக்குத் தக்கவாறு இரத்தத்தில் கலக்கச் செய்கின்றது. இந்தக் கணையப்பகுதி தக்க அளவு இன்சுலினைச் சுரக்காததாலேயே நீரிழிவு உண்டாகிறது.

### நீரிழிவு நோய் தோன்றக் காரணங்கள்

1. இந்நோய் பரம்பரையில் தான் அதிகம் வருவது. ஒரு தாய், தந்தை இருவருக்கும் நீரிழிவு இருந்தால் அவர்களது 4 பிள்ளைகளுக்கும் வரவாய்ப்புண்டு.

2. தாய், தந்தை இருவரில் யாருக்காவது ஒருவருக்கு இருந்தால் அந்தப் பிள்ளைகளில் நால்வரில் இருவரைப் பாதிக்கும்.

3. பெற்றோரின் தாய், தந்தை இருவரில் ஒருவருக்காவது இருந்தால் நால்வரில் மூவரைப் பாதிக்கும்.

4. அதிக உடல் எடை.

5. உணவு கட்டுப்பாடு இல்லாமல் கொழுப்புச் சத்துள்ள உணவுகளையும் தகரத்தில் அடைத்த உணவுகளை அடிக்கடி உண்போருக்கும்.

6. பெண்களில் அடிக்கடி குழந்தை பெறுவோருக்கும் அடிக்கடி கருக்கலைப்பு செய்வோருக்கும் தொடர்ந்து மாத்திரைகள் உபயோகிப்போருக்கும்

7. அதிகம் எடையுள்ள குழந்தைகளைப் பிரசவிப்பதாலும் குழந்தை கருப்பையில் இறந்து பிறப்பதாலும்

8. வயது 25இல் தாக்குவது Modi Diabetes Adult என்று பெயர்.

9. 25 வயதுக்கு மேற்பட்டோரை பாதிப்பது நான்காவது Tipe 1 Diabetes. இது பொதுவாக தெற்கு தென்கிழக்கு ஆசிய நாட்டவர்களையே தாக்குகிறது.

### இவற்றை இரண்டுவகையாகப் பிரிக்கலாம்

முதல் வகையான இளம்வயது நீரிழிவுக்கு உடலில் போதுமான அளவு இன்சுலின் சுரப்பது இல்லை. இவர்களுக்கு யோகாசனப்பயிற்சியுடன் இன்சுலின் ஊசி வாழ்க்கை முழுவதும் அவசியம்.

25 வயதிற்கு மேல் ஏற்படும் இரண்டாவது வகைக்கு இன்சுலின் தேவையில்லை. உணவுக்கட்டுப்பாடு யோகாசனப்பயிற்சி போன்றவற்றால் உடலை சீராக வைத்திருக்க முடியும்.

அடுத்த இதழில்
உங்களுக்கு நீரிழிவு வரக்கூடிய வாய்ப்பு அதன் தன்மைகளை அறிவது, அதற்குரிய நல்ல தகுதிகள் போன்றவற்றைப் பற்றி சுருக்கமாக கவனிப்போம்.


ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm

# Little Terrorist...

28ஆம் பக்கத்தொடர்ச்சி

பயன்படுத்துகின்றாள். யுவதி அவ்வப்போது போதை மருந்தை மூக்கால் உறுஞ்சுகின்றாள். சிகரட் புகைக்கின்றாள். மறு நாள் காலை ரயரை மாற்ற முற்படும் பொழுது, யுவதி வாகனத்தை எடுத்துச் செல்கின்றாள். சக்கரம் ஆடிய படி செல்கின்றது. மீண்டும் தீவிரவாதி தொடர்கின்றார். ஒரு சோதனை சாவடியில் யுவதி தான் தனது உறவினர் பிரிகேடியரிடம் செல்வதாக கூறுகின்றாள். தீவிரவாதியை தனது ஆண் நண்பன் எனக் குறிப்பிடுகின்றாள். தீவரவாதியின் வாகனத்துக்கு முன்பாக இராணுவ வீரர் செல்ல முன்னர் தீவிரவாதி வாகனத்தில் உள்ள




டைனமைட்டை கம்பளியால் போர்த்தி மறைக்கின்றான். அப்பொழுது தான் சாதாரண பயணியாக காணப்பட்ட இளைஞன் தீவிரவாதி யாக தெரிகின்றார். இது கோடை காலம். ஏட்டு மாதங்கள் கடும் பனியால் மூடப்பட்டு இப்பொழுது கரடு முரடாக வீதிகள் உள்ளன. பயணம் தொடர்கின்றது. மீண்டும் ஓர் ஒருவருமற்ற இடத்தில் இருவரது வாகனங்களும் நிற்கின்றன. யுவதி தீவரவாதிக்கு முத்தமிட கற்றுக் கொடுக்கின்றாள். பயணம் தொடர்கின்றது. இப்போ ஒரு சிறு இராணுவ முகாமுள்ள நகரத்தின் விடுதியில் தங்குகின்றனர். தீவிரவாதி குளித்துக் கொண்டிருக்கும் பொழுது தீவிரவாதியின் அறைக்கு செல்லும் யுவதி அவனது கட்டிலில் உள்ள டைனமைட்டை காண்கின்றாள். தீவிரவாதி குளியல் அறையை விட்டு வெளியே வரும் பொழுது கம்பளியால் அதனை மீண்டும் மூடி விட்டு தனது அறைக்கு ஓடி விடுகின்றாள். யுவதியின் அறைக்கு வரும் தீவிரவாதீ யுவதியுடன் உறவு கொள்கின்றார். உறவின் இறுதிப் பகுதியில் யுவதியின் முகம் வன்புணர்வை வெளிப்படுத்துகின்றது. யுவதி அறையை விட்டு வெளியே வந்து தேநீர் அருந்திக் கொண்டிருக்கின்றாள். தீவிரவாதி சுடப்பட்டு யுவதியின் முன்னே இறக்கின்றார். யுவதியின் முகத்தில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

ஒரு Abstract படம் இது. இயக்குனர் தனிமை, தீவரவாதம் போன்ற விடயங்களை ஒரு நேர் கோட்டில் இடை வெட்ட செய்துள்ளார். கல்கத்தாவில் பிறந்து லண்டன் திரைப்படக் கல்லூரியில் பட்டம் பெற்ற அஸ்வின் குமார் இவ்விரு படங்களையும் இயக்கியுள்ளார். 50 நிமிடங்களில் பெரும் பகுதி காட்சிப் படிமங்களை மட்டுமே கொண்டுள்ளது. மிகவும் கடினமான பகுதிகளில் பின்னணி இசையுடன் படத்தை சிறப்பாக நகர்த்தியுள்ளார் இயக்குனர். யுவதியின் மேல் ஏற்பட்ட நம்பிக்கையின் விளைவே இறுதி முடிவு. பாத்திரங்களின் பின்னணி பற்றி எதுவே கூறாமல் பார்வையாளரின் சிந்தனைக்கு விட்டு விடுகின்றார் இயக்குனர். படத்தில் ஒவ்வொரு காட்சியும் ஒன்றுக் கொன்று தொடர்பானது. முதலில் ஏற்படும் தனிமை அவர்களுக்குள் ஓர் தேடலை ஏற்படுத்துகின்றது. பின்னர் ஒருவரை ஒருவர் இனம் காணும் பொழுது ஒருவர் மீது ஒருவர் ஆட்சி செய்ய விரும்புகின்றனர். இறுதியில் மரணத்தில் முடிகின்றது. தனிமைக்கு அதிக நேரமும் புரிதலுக்கும் அதன் மீதான ஆட்சிக்கும் குறைந்த நிமிடங்களே கொடுக்கப்பட்டுள்ளது. இதனைக் கூட இயக்குனர் அளந்து செய்துள்ளார்.

மரணம் பற்றிய புரிதலின் உணர்வை யுவதியின் புன்னகையில் வெளிப்படுகின்றது. மிக அண்மையில் பல்லாயிரம் மக்களின் மரணத்தை கொண்டாடியதை நாமனைவரும் அறிந்துள்ளோம். படத்தில் பல விடயங்களை பார்வையாளர் களிடமே விட்டு விட்டார் இயக்குனர். Irfan Khan, Koel Purie சிறப்பாக நடித்துள்ளனர். இவ்விருவரும் நாடகங்கள் மூலம் திரைக்கு வந்தவர்கள் என்பதை இவர்களது நடிப்பு வெளிப்படுத்துகின்றது.

படத்தை பல தடவைகள் பார்க்க வேண்டும். விவாதத்துக்காக, தொழில்நுட்பத்திற்காக, யதார்த்தத்திற்காக, தேடலுக்காக.

* Director: Ashvin Kumar * Genre: Drama
* Main Cast: Irfan Khan, Koel Purie, Milan Moudgill, Amit Vasisht, Sardaji
* Release Year: 2003
* Country: UK/IN * Run Time: 50 minutes

மூன்று படங்களையும் VIP Video, Markham Video போன்ற கடைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

YOGA - MEDITATION CLASSLESS
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்


மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்
தொடர்புகுகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

ELECTRICAL WORKS

FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.
தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880


Roadsport
HONDA
A Truly Professional Service Provided to the Community.
Over 1000 satisfied customers
NEW & USED
Great Deals
BUY OR LEASE
Great Savings
Call
Dan Lanka
Retail Sales Manager
Serving the community since 1996
Direct: 416-454-1107
புதிய அல்லது பாவித்த வாகனங்களை
குறைந்த விலையில் வாங்க
உங்கள் நண்பனை அளையுங்கள்
டான் லங்கா
HONDA
Roadsport Honda
Used Cars
940 Ellesmere Road. At Kennedy
For New or Used Hondas in Toronto Call Dan
Direct: 416-454-1107 Or 416-291-9501 Ext. 2251
www.Roadsport.com
HWY 401
ELLESMERE RD
BRIMLEY RD
MIDLAND AVE
KENNEDY RD
BIRCHMOUNT RD
LAWRENCE AVE E
Design: J11.ca - 1-877-721-8910

# வாழ்வு கடினமானதல்ல!



சராசரியாக மலர வேண்டிய என் வாழ்க்கையை என் மனப்போக்கினால் கடினமாக்குவதற்கு என்னை மன்னித்திட இப்போ நான் உடன்படுகின்றேன்.

உனது வாழ்க்கையை எவ்வளவு கடினமாக்கி இருக்கிறாய்? உன்னால் சமாளிக்க முடியாத சவால்களையும் விரோதிகளையும் நீ சம்பாதித்திருக்கிறாயா? தோல்விக்கென்றே உன்னை ஆயத்தப்படுத்துகின்றாயா? உன் வாழ்வில் என்ன நிலைப்பாட்டை நீ எடுத்திருக்கிறாய்? நீ தீர்மானித்திருக்கும் நிலைப்பாடு மட்டுமே சரி என்பதை நிரூபித்திட எதை எதையெல்லாம் செய்ய நீ உடன்படுவாய்? ஏதாவது ஒன்றை செய்ய முடியாதென்பதை நிரூபித்திட உன்னால் சமாளிக்க முடியாத மேலதிக பொறுப்புகளை ஏற்றுச் சுமந்து கொண்டு தத்தளித்துத் திண்டாடுகின்றாயா? வாழ்க்கையை எவ்வளவு கடினமானதாக்கியிருக்கிறாய்? வாழ்வு துன்பமயமானது எனும் உனது மனநோக்கை நிலைநாட்டிட பிடிவாதமாய் என்ன என்னவெல்லாமோ செய்து எவ்வளவு தூரம் போகப் போகிறாய்?

அன்பானவரே! வாழ்வு கடினமானதல்ல. நீரோட்டம் போன்ற ஒரு செயல்பாடுதான் வாழ்வு. உலகில் வாழும் உயிர்கள் அனைத்திற்கும் வாழ்வு தன்னைச் சமமாகவே பங்கிட்டுக் கொடுக்கின்றது. வாழ்வில் சகலதும் சமமாக இருந்தாலும் யாவருக்கும் யாவற்றையும் சமமாக வாழ்வு பங்கிட்டுக் கொடுப்பதில்லை. வாழ்வின் சூழ்நிலையைப் பற்றியே இங்கு குறிப்பிடுகின்றோம். அதன் சாராம்சத்தைப் பற்றியல்ல. சிலருக்குக் கொஞ்சம் கூடிய அளவில் இன்பம் கிடைக்கும். சிலருக்குக் குறைந்த சந்தோஷமே கிட்டும். சிலருக்குத் தானாகவே மடியில் வந்து விழும். அனுபவங்களைப் பெற்றிட பலர் கடினமாக உழைக்க வேண்டிவரும். வேறு சிலருக்கு அந்த அனுபவங்கள் கிட்டவே கிட்டாது. இவை வாழ்வின் நிலைமைகள். அவை நிகழ்வுகள், அனுபவங்கள் மட்டுமே. இவை வாழ்வின் உண்மையான சாராம்சம் அல்ல.

துரதிர்ஷ்டவசமாக வாழ்வின் சூழ்நிலைதான் வாழ்வின் செயல்பாடு எனப் பலர் தவறாகப் புரிந்து கொள்கின்றனர். இந்தத் தவறு செய்பவர்களுக்குத்தான் வாழ்வு கடினமானதாகி விடுகின்றது.

உனக்குக் கிடைத்திருப்பதை ஏற்றுக்கொண்டு உன்னால் இயன்றவரை முன்னேற முயற்சிப்பது தான் வாழ்வு எனும் செயல்பாடு. உனது மனமுவந்த அங்கீகரிப்பும் உடன்பாடும்தான் உன் வாழ்வின் தரத்தினை நிர்ணயிக்கின்றன. வாழ்வின் நீரோட்டத்தில் நீ ஓடிப் பாய்ந்து முன்னேறலாம். உயரப் பறக்கலாம். பராக்குப் பார்த்துச் சோம்பி நின்று தாமதிக்கலாம். வாழ்வை மகிழ்ச்சியாகக் கட்டி அணைத்துக் கொள்ளலாம். அல்லது பயந்து தூர விலகிப் போகலாம். எந்த நேரத்தில் எதை எதை உன்னால் செய்ய முடியும் என்ற உனது தீர்மானமே வாழ்க்கை உனக்கு எவ்வளவு கடினமானதாக இருக்கும் என்பதை நிர்ணயிக்கின்றது.

என் வாழ்வு இவ்வளவு கடினமாக இருக்கிறதே என இன்றுவரை நீ பிரலாபித்துக் கொண்டு துயரத்துடன் இருந்திருக்கலாம். இன்று உன் வாழ்வின் செயல்பாட்டிற்கும் வாழ்வின் நிலைமைக்குள்ள வித்தியாசத்தை நன்கு உணர்ந்து புரிந்து கொள். உன் வாழ்வின் செயல் பற்றி நீயே உனக்குச் சொல்லிக்கொள்வதே, உனது உண்மையான அபிப்பிராயமே உனது வாழ்வின் நிதர்சன நிலைப்பாடாக மாறுகின்றது. புரிந்து கொள்.

வாழ்வு நீரோட்டத்தின் செயல்பாட்டைப் பற்றி எனக்கு நானே சொல்லிக்கொள்வதை இன்றுமுதல் மிக்க கவனத்துடன் கண்காணிக்கப் போகின்றேன்.

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 152

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புருடி

NuTek COMPUTERS
www.nuTechComputer.com
☑ Virus Removal
☑ Internet Sharing
☑ Computer Tune Up
☑ Computer Repair
அனைத்து கணணி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES



வீடு, வியாபார நிலையங்கள் வாங்க - விற்க
எந்தவித அடமானக் கடன்களும் பெற
Direct - 416.575.5055
Anton Jeeva
Real Estate / Principal Mortgage Broker
RE/MAX

Power of sale $314,900

• Vodden/Williams Pkwy /Hwy10
• 3 Bedrooms
• 4 Washrooms
• Finished bsmt
• Stove, Fridge, Washer, Dryer, All Elf, All Window Coverings

House for Sale $349,900

• Salem / Pickering
• Detached 2-Storey
• 3 + 1 Bedrooms
• 4 Washrooms
• Finished bsmt Apratment
• Stove, Fridge, Washer, Dryer, All Elf (Excl One Chandelier)

FOR SALE $579,000

• Simcoe Rd / Canal
• 23 Acres Land
• 1,500 Sq Ft. House
• 2 Stoves, 2 Fridges, Washer, Dryer, All Elf Farm Equipments Can Be Sold Separately For A Reasonable Amount.

Power of Sale $239,900

• Park/Finch
• Bedrooms: 3 +1
• Washroom: 2 • Condo Townhouse Multi-Level
• Existing Fridge, Stove, Washer, Dryer, All Elf's, Window Coverings. All In 'As Is' Condition.

CONDO.TOWNHOUSE FOR SALE $129,900

• Kennedy/Eglinton
• 2-Storey
• 2 Bedrooms
• 2 Washrooms
• Fridge, Stove, Washer, Dryer, All Elf, All Window Coverings

Power of Sale $399,000

• Raymerville & 16th Ave.
• Detached 2-Storey
• Bedrooms: 4
• Washrooms: 3
• Central Vac.

Power of Sale $415,000

• Tenth Line & Hoover Park Dr.
• Detached 2-Storey
• 4+1 Bedrooms • 3 Washroom
Central Air, Central Vac., Alarm, 2 Garage Door Openers, Thumbled Marble Backsplash In Kitchen

Power of Sale $263,900

• Bovaird / Dixie
• Semi-Detached
• Backsplit 4
• 3 + 2 Bedrooms
• 3 Washrooms
• Basement: Apartment
• Central Vac.

Power of Sale $259,900

• Adelaide/Jarvis
• 3-Storey
• 3 Bedrooms
• 3 Washrooms

Mortgages & Mortgages Inc.
Authorize Brokerage by FSCO
REMAX VISION REALTY INC.
Speciallized in Power of Sale Homes

MAX 2000
விடுமுறை காலங்களில் சுற்றுலா செல்லத் தயாராகுங்கள்!
ஒவ்வொரு மாதத்திலும் இரண்டாவது கிழமை U. S. A பயணம்


New York City சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், Shopping.
Vancouver & West Cost 14 days
August Civic Holiday Long Weekend
Plan Your Holiday Around These Dates
இவ்வாண்டு விடுமுறைக்கான பயண ஒழுங்குகள் ஏராளம் நீங்கள் தயாரா?
விபரங்களுக்கு: 416-609-2542